[illegible]

[illegible], 1926

72
[illegible]211,N26AG
N26·1·1
169818




N26-1-1

# ஆநந்த குணபோதினியின்

## வருஷ சந்தா விவரம்

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு வருஷ சந்தா ரூபாய் 1. வெளி நாடுகளுக்கு ரூபாய் 1–4–0. தனிப் பத்திரிகை அணா 2.

ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா இல்லை. எந்த மாதத்தில் சேர்ந்தாலும், முதற் பத்திரிகையி லிருந்தே கணக்கிடப்பட்டு [illegible] பத்திரிகைகளும் சேர்த்து அனுப்பப்படும்.

சந்தாவை மணியார்டர் செய்தால் ரூ. 1-2-0 தான் ஆகும். வி.பி. யில் பெறுவதில் ரூ. 1-5-0 ஆகும். விலாஸம் மாறும்போது தெரிவிக்க வேண்டும். வரத் தவறிய பத்திரிகைகளை அம் மாதத்திற்குள் எழுதினால் அனுப்பி விடப்படும். பதில் விரும்புவோர் ரிப்ளை கார்டு, அல்லது ஸ்டாம்பு அனுப்புவதே நலம். எப்போதும் நங்களின் நெம்பரைக் குறிப்பிட்டு எழுதவேண்டும். அவ்விதம் நெம்பர் குறிப்பிடாத கடிதங்கள் கவனிக்கப்படுவது அதிக பிரயாஸம்.

☞ எல்லா கடிதங்களும், மணியார்டர்களும், போஸ்டல் ஆர்டர்களும் அடியில் கண்ட விலாஸத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

தி. இராஜகோபால் முதலியார்,
புரோப்ரைட்டர் "ஆநந்த குணபோதினி" ஆபீஸ்,
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

---

## விஷய அட்டவணை.


1. ஆநந்த தரிசனம் ... ... 1
2. ஆநந்த குணபோதினி ... ... 5
3. தானே நூல் எழுதப் பழகும் வழி ... 9
4. கணக்கு—எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் 13
5. சிறுமணித் திரள் ... ... 16
6. பெரியோரின் பெருமை கெடாது ... 18
7. பிரபஞ்ச தரிசனம் ... ... 19
8. வீட்டைப் பற்றிய கேள்விகள் ... ... 22
9. பழமொழிக் குறிப்புகள்—I. அன்பு ... 23
10. விகடப் பிரதாபன்—பரமசிவம் படியளக்கிற கொள்ளை 27
11. பெண்கள் பக்கம் ... ... 33
12. பதினாயிரம் ரூபாய் கொள்ளை ... ... 36
13. எமிலி ஸோலா ... ... 38
14. விநோதம் ... ... 39
15. சென்ற மாதம் ... ... 41
16. கண்பார்வை ... ... 43
17. பத்திரிகா [illegible] ... 44
18. [illegible] ... 45

பக்குவகா
நிலையற்ற
நம்மை ந
னும் சிற
தாரத்
யென்று

ஓம் பரப்பிரம்மணே நம:

# நந்தகுணபோதினி

அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான
உயர்ந்த செந்தமிழ் மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர் :—எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்."—திருக்குறள்.

| | | |
|---|---|---|
| கமலம் - 1. | சென்னை: அக்ஷய ௵ சித்திரை ௴ 1௳ | இதழ் - 1. |
| Vol. 1 | 1926-ம் ௵ ஏப்ரல் ௴ 14௳ | No. 1 |

## ஆநந்த தரிசனம்

"எங்கு நிறைகின்ற பொருளே" எனத் தாயுமானவர் பாடியிருக்கிறார். அதன் தாற்பரியம் எல்லா இடங்களிலும் நிறைந்திருக்கும் பரப்பிரம்மமே யென்பதாம். எதைத் தியானிக்கிறோமோ அதைப்போலாதல் ஸாத்தியமாம். நாராயண ஸ்மரணை செய்வோர் வைகுண்ட பதவியை யடைகிறார்களெனின், நாராயணனைப்போல் ஸகல சுகங்களையும் அனுபவிக்கின்றனர் என்று அர்த்தம். இம்மாதிரியே சிவமூர்த்தியைத் தியானிப்போர் சிவலோக பதவியை யடைவர். ஞானிகள் பரப்பிரம்மத்தையே தியானிப்பதால், அவர்கள் தங்களுடைய ஆத்மாவே உலகெங்கும் நிறைந்ததென்று எண்ணும் சிறந்த ஞானத்தை யடைந்து ஜீவன் [illegible] பெறுகின்றனர். மேற்சொன்ன விஷயத்தை [illegible] நடக்கும் [illegible]ங்களால் விளக்கலாம். இராமனும் [illegible]ருஷ்ணனும் ஒருவரோ[illegible] [illegible]ர் நேசிப்பதாய் வைத்துக்கொள்வோம். இராமனுடைய குண[illegible]ஷ்ணனுக்கும், கிருஷ்ணனுடைய குணம் இராமனுக்கும் உண்[illegible]விடும். இதற்கு என்ன காரணம்? இராமன் எப்போதும் [illegible]
யா[illegible]

கிருஷ்ணனோடு ஸம்பாஷித்துத் தன் காலத்தை மனோத்ஸ கழிப்பதால் அவனுக்குக் கிருஷ்ணனுடைய நினைவே பெரி ஆதலின் தன்மையிலும் நடத்தையிலும் ராம கிருஷ்ணர் மாதிரியாய்த் தோன்றுகின்றனர். இவ்வாறே பகவானை னிப்பவர்கள் கடவுள் தன்மையை யடைகின்றனர்.

***

"ஈசனடியே நம் தலை முடியாம்" கருணையங்கடலாகிய னுடைய திவ்ய திருவடிகளே நம்முடைய சிரசிற் சூட கேற்ற உத்கிருஷ்டமான கிரீடமாகும். எவ்வாறெனின், இவ்வுல ஒரு குடை கீழ் அரசாளும் சக்ரவர்த்திகளுடைய கிரீடங்களும் ஓ காலத்து அழியும். ஜெகதீசனுடைய திருவடிகளாலாகிய கிரீடமே என்றும் அழியாததாய், பிறப்பு இறப்பு என்னும் பிணியையு நிவர்த்திப்பதா யிருப்பதால் அத் திருவடிகளாகிய முடியையே சி மேற்கொள்வோமாக.

***

"பிழையிலான் கடவுளன்றிப் பின் எவருளர் இங்கு அம்மா" என்றார் ஓர் அறிஞர். மனுஷ்யர்கள் எல்லோரும் ஓர் காலத்தில் தவறிவிடக்கூடியவர்களே. தம்மை யறியாமலே பாவத்தில் கை நனைத்து விடுதலுங்கூடும். நாம் தெரிந்தும் தெரியாமலும் செய் துள்ள ஸர்வ பாபங்களையும் நிவர்த்தித்துக்கொள்வதற்காக நாம் பகவானையே சரணமாக அடையவேண்டு மென்பது இதன் பொரு ளாம். செய்யத்தகாத ஒன்றைச் செய்துவிட்டுக் காலமுழுதும் அதற்காக உள்ளம் நோவோர் எத்தனை பேர்? ரகசிய பாவங்களும் உண்டு. பலர் அறியச் செய்த தீவினைகளும் உண்டு. எனவே போனது போக, இனியேனும் பகவானைச் சரணமடைந்தாலன்றி நாம் கடைத்தேறி உய்வதற்கு வேறு மார்க்கமில்லை. அவர் அருள் பெற்றோர் அனைத்தையும் பெற்றோராக எண்ணப்படுவர்.

***

"செல்வத்திற் சிறந்தது தெய்வத் திருவருள்" என்பது பழ மொழி. திருவருள் உணர்ச்சி யுடையார்க்கே இந்தப் பழமொழி சிறந்ததாய்த் தோன்றும். திருவருள்பெற்ற ஞானிகளைத் தரிசித்து அன்னோர்க்கு அடிமைபூண்ட புண்ணியர்க்கே இது இனிக்கும். திருவருள் நாட்டமுடையார்க்கே இம் மொழியில் நாட்டமுண்டாம். திருவருட்செயலைக் கண்டவர்க்கே இச்சொல் அதிசயமாகும். திரு வருட் [illegible] தெரிந்தோர்க்கே இவ்வாக்கியத்தின் பயன் வி[illegible]ம். திருவருட[illegible]க் கற்றோர்க்கே திருவருள்மொழியில் [illegible] திரும்பும். திருவ[illegible] மையைக் கேட்டோருக்கே இச் [illegible]மொழியில் மனம் கசியும். [illegible]செல்வம் நிலையாமையும், திருவரு நிலையாமையும் காண்போர் இம்[illegible]மொழியைச் சொட்டிப் பாரா வர். செல்வத்தில் வெறுப்பும், [illegible] விருப்புங்கொள்



பக்குவகாலம் நமக்கு வாய்ப்பது எப்போது? நிலையற்ற இவ்வுலகில் நிலையற்ற செல்வத்தை நாடாமல், நல்வினை யிருந்தால் அதுதானே நம்மை நாடுமென்று ஒதுக்கி, என்றும் நிலையுள்ளதாய் எல்லாவற்றி னும் சிறந்ததாய் நமக்குத் தாரகமாயுள்ள பகவந் நாமத்தை மன தாரத் துதித்து என்றும் உண்டெனப்படும் பிறவியை இல்லை யென்று ஆக்குவோமாக.

***

"மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்" என்று உலகநாதன் என்னும் ஓர் ஆன்றோர் கூறியுள்ளபடி, நமது மனம் சென்றவழியே அறிவையும் செலுத்தக்கூடாது. மனமானது நல் வழி, தீயவழி இவ்விரண்டிடத்தும் சுழன்றபடியே ஓரிடத்தும் நிலைத்திருக்காது. நாம் பகவத் ஸந்நிதியில் இருந்துகொண்டு கடவு ளைத் துதித்தவாறு இருந்தாலும், கட்டுப்படாத நமது மனமோ வேறு பொருள்களிடத்தே அப்போது சென்றுகொண்டிருக்கும். மனத்தைப் பலவாறு செல்லவிட்டுச் செய்யும் தியானம் பயன் படாது. அது மணமற்ற மலர் போலாம். ஸதா காலமும் பல பொருள்களிடத்தும் மனமானது சென்று இச்சையை யுண்டாக்கி அறிவைக்கெடுப்பதே அதன் தொழில். அதன் இஷ்டப்படி நாம் நடந்தால் நமக்குச் சத்துரு அதுவே. அதை யடக்கி ஆள்வோ மானால் பரம மித்துருவும் அதுவே. எனவே அத் துஷ்டமனம் சென்றவழியே சென்று நாட்களைக் கழிக்காமல் ஸர்வ ஜீவதயாபர ரான எம்பெருமானிடத்தே அம்மனத்தைச் செலுத்தி வழிபடப் பார்ப்போமாக.

***

"கடவுள் எங்கே இருக்கிறார்?" என்று சிலர் கேட்கிறதும், அதற்கு விடையாகப் பிரகலாதன் கூறியதுபோல் எங்கும் இருக் கின்றார் என்று சிலர் சொல்வதுமுண்டு. ஆனால், அவரை என் கண்முன் காட்டு பார்ப்போமென்றால் எப்படிக் காட்டுகிறது? ஒருவன் இருள் சூழ்ந்திருக்கும் இடத்திலிருந்தபடியே ஒரு பொரு ளின் உருவத்தைக் காண இச்சிக்கின், அப்பொருளின் உருவ முழுதும் கண்களுக்குத் தோன்றுமா? தோன்றாது. அதுபோல் மாயையால் மூடப்பட்டிருக்கிற மனக்கண்ணையுடைய நீ ஞானக் கண்ணைக்கொண்டு பார்த்தால் கடவுள் தோன்றுவார் என்றுதான் சொல்லவேண்டும்.

***

"சீரிய ரென்னலும் தீய ரென்னலும் சேரும் இனத்து இயல்பி னல் சேர்ந்த நாமமே" என்றார் நீதிநூலார். ஒருவனைச் சீரியன் [illegible]ாவது மேலோன் என்றும், தீயவன் அதாவது கெட்டவ [illegible]ன்றும் சொல்வது அவனுடைய முக்கியமான செய்ற்கைச் சக [illegible]தினைக் கொண்டே யாகும். நல்ல சகவாச முடையவர்கள்

சன்மார்க்கத்தை யடைகிறார்கள்; கெட்ட சகவாசத்தை யுடையவர்கள் துன்மார்க்கராகிறார்கள்: எப்படியெனில், ஒருவன் சாதுவாயிருந்தால் அவனை யடைபவனும் சாதுத் தன்மையைப் பெறுகிறான். ஒருவன் வாயாடியா யிருந்தால் அவனைச் சேர்பவனும் வாயாடியாய்விடுகின்றான். ஒருவன் வீரனாயிருந்தால் அவனைச் சேர்பவனும் வீரனாகின்றான். இவை செயற்கை தோஷத்தினால் விளைவதாகும். எனவே நன்மையால் நன்மை காண்பதையும், தீயவற்றால் துன்பமான முடிவை யடைவதையும் உற்றுநோக்கி நல்வழியைப் பின்பற்றவேண்டும். நல்வழிக்கெல்லாம் நாயகமாகப் பெருந்துணையா யுள்ளது ஈசுவர பக்தியேயாகும். பக்திவலையில் நம் மனத்தைச் சிக்க வைத்துவிட்டால் நாம் உய்வதற்கான பாதையைச் சீக்கிரத்தில் தெரிந்துகொண்டு பக்குவம் பெற்றவர்களாய் விடுவோம்.

⁂

“தேசங்கள்தோறும் பாஷைகள் வேறு” என்றபடி ஒவ்வோர் நாட்டிலும் வெவ்வேறு பாஷைகள் வழங்கும். பாஷைகளுக்கேற்ற மதங்களும், அநுஷ்டான ஆசாரங்களும் வெவ்வேறாகக் காணப்படும். அவரவர்கள் தத்தம் முன்னோர்கள் ஆசரித்த மதானுஷ்டானங்களையே பின்பற்றி, நெடுங்காலமாய்த் தங்களின் வமிச வழியில் வழக்கமாய் வந்த ஆசாரங்களையே தழுவி பகவத்தியானம் செய்யவேண்டும். உண்மையை யுணர்ந்தவன் எல்லா மதங்களிலும் உண்மையைக் காண்பான். கண்டறியக்கூடிய பக்குவயோக முள்ளவனுக்கு எந்த மதத்திலும் ஈசுவர வெளிச்சம் தோற்றக்கூடும். தங்களின் மனத்தை நன்றாகப் பண்படுத்திக்கொண்டு பகவத் பக்தி செய்து பரந்தாமனைக் கண்டறிவதற்குப் பிரயத்தனிக்காமல், தங்கள் மதத்தில் எல்லாம் சாரமற்றிருப்பதாக எண்ணி, அன்னிய மதங்களில் சித்தத்தைச் செல்லவிடுபவர்கள் எந்நாளும் கடைத்தேறார். தன் பர்த்தாவுக்கு இசைந்தபடி நடந்து அவனைத் திருப்தி செய்து தானும் இகபரசுக சாதனம் பெறாமல், மற்றொருவன் மீது இச்சையைச் செலுத்தித் தன் கணவனை விட்டு ஓடிவிடப் பார்க்கும் பெண்ணொருத்தியின் கதியே தன் மதத்தை நம்பாதவனுக்கும் வந்து சேரும். ஆதலின் உண்மை கண்டறிந்து உய்யும்வழி தேடி, உள்ள காலமெல்லாம் உறுதியான மனதுகொண்டு, உத்கிருஷ்டமான சிந்தனைகளுக்கு நம்மை உறைவிடமாக்கிப் பகவானைப் பூஜித்து அவரது அருளைப் பெறக்கடவோமாக.

ஆநந்த குண போதினி
அக்ஷய௵ சித்திரை௴ 1௳

# ஆநந்த குண போதினி

எல்லாம் வல்ல இறைவனது திருவருளால் இன்று நாம் தொடங்கும் இப்பத்திரிகையை “ஆநந்த குண போதினி” என்னும் பெயரால் அழைக்கின்றோம். அதன் இனிய நல்வரவால், சூரியனைக் கண்டு பனி விலகுவதுபோலும், ஞானத்தைக் கண்டு மாயை மறைவதுபோலும் நமது தமிழ்ச் செல்வர்களின் சோர்வுகள் யாவும் நீங்கி, அவர்களின் உள்ளக் கமலத்தில் ஆநந்தம் என்னும் ஆதித்தன் உதயமாகிப் புதிய ஊக்கத்தையும், புதிய மனோல்லாசத்தையும், புதுபுதுச் சிந்தனைகளையும் வளர்த்து வாழ்விக்க வேண்டுமென்று பகவானைப் பிரார்த்திக்கின்றோம். வித்தியா இன்பத்திலும் சிறந்ததோர் இன்பம் இவ்வுலகில் வேறொன்றுண்டோ? உலகவாழ்க்கையில் பல்வேறு காரணங்களாலும் சலித்துப்போகும் மனத்தைத் தேற்றி உயர்நிலையி லாக்கி உத்ஸாகம் புகட்டுவது வித்தியா இன்பமன்றோ? அவ்வின்ப ஸாகரத்தில் மூழ்கிப் பரவச மனத்தினரானோர்க்கு இரவில் நித்திரை ஏது? நடுநிசி வரையும் வித்தியா விநோதர்களாகவே வீற்றிருப்பர். இரவில் எவ்வளவு நேரம் வரையும் விழித்து வாசித்துக்கொண்டிருந்தபோதிலும், அதிகாலையில் மூன்று நான்கு மணிக்கெல்லாம் மீண்டும் எழுந்து அத்யந்த ஆவலுடனும் புஸ்தகங்களைத் தங்களின் கரத்தில் ஏந்தி அவ்வின்பத்தில் தங்களையே மறந்துவிடுவர். தம் மனத்தினிடை தோன்றும் புதிய எண்ணங்களின் ஊற்றுகளையும் வெகு வேகமாக எழுதிச் சென்று ஆனந்தமுறுவர். பொழுது புலர்ந்து வெகு நேரமாகியும் அவர்கள் இருக்குமிடத்தில் தீபம் அணைக்கப்படாமல் எரிந்துகொண்டே இருக்கும். பசியும் தோற்றாது; மற்ற உலகக் கவலைகளிலும் அவர்களின் சிந்தை செல்லாது; சண்டை சச்சரவுகளிலும், அநாவசியமான வார்த்தைகளிலும், விருதா கோஷ்டிகளிலும் அவர்கள் தலையிட்டுக் கொள்ளார்கள். எந்நேரமும் அவர்களின் ஹிருதயம் வித்தியாநந்தத் இறும்பூதுற்று நிற்கும். எங்கு போயினும் கையில் ஓர் புஸ்த

கத்துடன் செல்வர். அவப்பொழுதையும் தவப்பொழுதாக்கி ஆநந்த மெய்துவர். அவர்களின் போக்கே ஒரு புதிய போக்கு. தம்மை யொத்த—தம்மிலும் மேன்பட்ட—கலாவல்லவர்களின் கூட்டத்திலேயே ஸதாகாலமும் ஸஞ்சரிப்பர். எப்போதும் பிறர்க்கு நன்மை புரிவதிலேயே அவர்களின் நாட்டம் செல்லும். உலகினர்க்குத் தம்மால் எந்தெந்த வழிகளில் ஹிதத்தைச் செய்யலாமென்பதிலேயே அவர்களின் சிந்தை சென்று கொண்டிருக்கும். அவ்வாறு செய்ய நினைக்கும்போதும், நினைத்தபடியே யாவும் ஒன்று கூடும்போதும், பிறகு அவற்றைச் செய்யும்போதும் அவர்களின் மனத்திடை தோன்றும் ஆநந்தப் பெருக்கை அளவிடவும் கூடுமோ? அந்த ஆநந்தம் என்றும் தேஜோமயமாய் விளங்குக.

இவ்வாறான ஆநந்தத்தில் தம் வாணாட்கள் அனைத்தையும் செலவிட்டுவிட்ட பெரியோர்களால்தான் இவ்வுலகமும், இவ்வுலகத்து ஜனங்களும் சீர்திருத்தப்பட்டு, உத்கிருஷ்டமான மார்க்கத்தில் தங்களின் சித்தத்தைச் செலுத்தி நல்வழி படுவதற்கான பக்குவத்தைப் பெறுவதாயினர். தமக்கும் நல்லதைச் செய்துகொண்டு, பிறர்க்கும் நன்மையைச் செய்வதற்கான உத்தம சிந்தை வித்தியாவந்தர்களுக்கே தான் தோன்றும். பரோபகாரம் புரிவதிலுள்ள ஆநந்தத்தை அவர்களேதான் நன்கு அநுபவித்து அறிந்தவர்கள். 'ஜான் மில்டன்' என்ற ஆங்கில மகாகவி பிற்காலத்தில் தமது நேத்திரங்கள் கெட்டு அந்தகராய்விட்ட காலத்தும்கூட, உலக நன்மைக்கான நூல்களை இரவு வெகுநேரம் வரையும் விழித்திருந்து தாம் சொல்லிக்கொண்டே போக, அவற்றைத் தம் குமாரத்தியைக்கொண்டு எழுதுவித்துப் பூர்த்திபடுத்துவதானார். அவருடைய கண்கள் கெட்டும்கூட அவருடைய வித்தியா இன்பம் கெடவில்லை. தம்மை அறியாமலே தம் நெஞ்சில் புது புது எண்ணங்களும், புது புது கற்பனைகளின் ஊற்றுகளும் பிரவகித்துச் சென்று 'நாமா இவற்றை எழுதினோம்' என்று அவர்களே அதிசயிக்கும்வாறாக அமைந்திடும் விசித்திரம் அற்புதத்தினும் அற்புதமேயாம்.

இவ்விதமான வித்தியா இன்பத்தை நாம் அநுபவித்து உயர் நலம் பெறுவதற்குப் பத்திரிகைகளும் புஸ்தகங்களுமே நமக்கு உற்ற துணையாயிருக்கின்றன. இதன்பொருட்டு நூல் வல்லோர் பல்லோர் முற்காலத்திலும் தற்காலத்திலும் எத்தனையோ கிரந்தங்களை இயற்றி வெளியிட்டுள்ளார். எண்ணற்ற பத்திரிகை



களும் தோன்றி உலகுக்கு உதவி வருகின்றன. நமது செந்தமிழ் நாட்டில் பத்திரிகைகளே இல்லாத ஆரம்பகாலத்தில் 'ஜநவிநோதிநி' 'தினவர்த்தமானி' முதலிய பத்திரிகைகள் தோன்றி நம்மவர்க்கு எவ்வளவோ நன்மையைச் செய்திருக்கின்றன. இப்பொழுதும் பல பத்திரிகைகள் தமிழ் நாட்டில் நடைபெற்று, ஒவ்வொரு பத்திரிகையும் ஒவ்வொரு விதப் புதுச் சுவைகொண்டதாய் ஒளி வீசி விளங்குகின்றன. நன்மை செய்வதற்கு எவ்வளவு கருவிகள் இருப்பினும் ஏற்றுக்கொள்பவர்களே எங்கும் அதிகமாதலால், நாமும் இன்று முதல் "ஆநந்த குண போதினி" என்னும் இப் பத்திரிகையை வெளியிட முற்பட்டிருக்கின்றோம்.

"ஆநந்த குண போதினி"யில் வித்தியா இன்பத்தைப் பெருகச் செய்வதற்கான அமிர்த ஊற்றுகள் எப்போதும் மலிந்து நிற்கும். விசேஷமாய் அநுபவஞானம் மேலோங்கி ஆநந்தங்கொள்ளச் செய்யும். அறிவிற்கு உணவான விஷயங்களும், ஞானப் பிரவர்த்தகர்களுக்கான பாகங்களும், தேச நலத்திற்கான நல்லுரைகளும் நிறைந்து ததும்பி மகிழ்வை யூட்டும். தற்காலத்தில் ஹாஸ்யச் சுவைபொருந்திய பத்திரிகைகள் தக்கவிதமாய் எழுதப்பட்டதாகக் காண்பது அபூர்வமாய்விட்டது. இராஜ சபையில் பல வித்வான்களுடன் விதூஷகன் என்ற விகடகவியும் ஒருவன் இருப்பான். அவனுடைய செல்வாக்குதான் அங்கு அதிகமாகப் பிரகாசிக்கும். எப்போதும் ஹாஸ்யச்சுவை மனதிற்கு மிக்க உல்லாஸத்தை விளைவிக்க வல்லது. ஆகவே, அதற்காகவும் ஒரு பகுதி இப்பத்திரிகையுடன் சேர்க்கப்பட்டுள்ளது. நம்நாட்டுச் சிறுவர்களும் சிறுமிகளும் கற்றுக்கொள்ளவேண்டிய நல்விஷயங்களெல்லாம் இப்பத்திரிகையில் நிறைந்திருக்கும்படி வேண்டிய பிரயாசை எடுத்துக்கொள்வோம். அமுக்கியமான விஷயங்களும், நிந்தனைச் சொற்களும், அரஸிகமான வாக்யங்களும் தேடிப் பார்த்தாலும் இப் பத்திரிகையில் அகப்படா. அரசாங்கத்துக்கும் குடிகளுக்கும் ஒற்றுமை பெருகி, இராஜபக்தி, தெய்வபக்தி, ஜென்ம பூமியினிடத்து அன்பு முதலிய உத்தம குணங்கள் வளர்ந்தோங்கும் விதமாக இப்பத்திரிகை நடத்தப்படும்.

இருளானது சூரியோதயத்தைக்கண்டு ஓடிப்போவதுபோலும், பாபமானது கங்கையைக் கண்டு விலகுவதுபோலும், ஸகல ஆபத்துகளும் பகவானுடைய கடாக்ஷத்தால் அகலுவதுபோலும், யா

மனதில் அடிக்கடி தோன்றுகிற சோர்வுகள், சலிப்புகள், சமுசயங்களாவும் இப்பத்திரிகையைப் படிப்பதால் பறந்துபோம். மனதை சுத்தப்படுத்தி, விவேகத்தை விருத்திசெய்து, பிரபஞ்ச அநுபவங்களைத் தெளிய வுணர்த்தி, லௌகீக ஞானமும், உலகியலை உணரும் சக்தியும், ஈச்வர பக்தியும் பெருகும்படியாய் நல்லெண்ணங்களை நலமாக வளர்த்துத் திருப்தியை ஸ்தாபிப்பதில் இந்த "ஆநந்த குண போதினி" தன் சக்திக்கு இயன்றவரையில் மனப்பூர்வமாக உழைத்துத் தமிழ்ச் செல்வர்களின் ஆசீர்வாதத்தையும் ஆதரவையும் பெறும். இத்தகைய உத்கிருஷ்டமான சிந்தனைகளோடு இப்பத்திரிகையைத் தொடங்கியிருப்பதால், தமிழ் மொழியிலே பயின்று, தமிழ் அபிவிர்த்திக்கென்றே உழைத்து, எல்லாம் தமிழ்மயமாகவே உருக்கொண்டுள்ள அன்பர்கள் இந்த "ஆநந்த குண போதினி" யை விசேஷ ஆர்வத்துடனும் வரவேற்று, தாங்களும் தங்கள் பந்து மித்திரர்களும் கையொப்ப நேயர்களாய்ச் சேர்ந்து, நமக்குப் புதிய ஊக்கம் ஊட்டி ஆதரிக்குமாறு பிரார்த்திக்கின்றோம். ஸர்வலோக சரண்யராகிய ஜகதீசன் நம்மெல்லோரையும் இரக்ஷிப்பாராக. சுபம்.

பத்திராசிரிய..

---

எத்தனைமுறை துலக்கினும் பித்தளையின் குணம் மாறாது. அது போல் சிலருக்கு எத்தனைமுறை நற்புத்தி புகட்டினும் அவர்களின் துற்குணம் மாறுவதில்லை.

---

சில மூடர்கள் ரயில்வண்டியில் உட்கார்ந்திருக்கும் ஸ்திரீகளைக் கெட்ட பார்வையுடன் பார்க்கின்றனர். சிலர் அவர்கள் மீது தெரியாத்தனத்தால் படுவதுபோல் கைகளைப் போடுகின்றனர். அந்யஸ்திரீகளைப் பார்ப்பதும் ஸ்பரிசிப்பதும் பாபமென்று மூடர்கள் அறியார்போலும்!

---

வித்தையையும் பொருளையும் கொஞ்சம் கொஞ்சமாய்ச் சம்பாதிக்க வேண்டும். பிரதிதினமும் கூடிய மட்டில் சிறிது பொருளையேனும் வித்தையையேனும் ஸம்பாதித்துவந்தால் பிற்காலத்தில் அதிக பிரயோஜனத்தை யடையலாம். ஓட்டையிருக்கும் குடத்தில் எத்தனை முறை நீரை ஊற்றினும் அக்குடம் நிறையாது. அதுபோல் பொருளைத் தேடுவோன் அதைச் செலவு செய்துகொண்டே யிருந்தால் அவனுடைய பணப்பெட்டி நிறையாது. வெகு சிரமப்பட்டு மண்குடத்தைச் செய்தவன் அதைக் கீழே போட்டுடைத்தால் அவனை சமர்த்தனென்னலாமா? அதுபோல் சரீரப் பிரயாசையாலோ, புத்தியின் உதவியாலோ பணத்தை ஸம்பாதித்தவன் அதைத் துர்விநியோகம் செய்தால் அவனைவிட அவிவேகி யார் இருப்பார்?

# தானே நூல் எழுதப்பழகும் வழி

நூலாசியர்களாவ்தும் பத்திராசிரியர்களாவதும் சாமான்யமான காரியமல்ல. ஒரு மளிகைக் கடையின் வேலையை ஒரு வருஷம் ஒரு கடையிலிருந்து நன்றாய்க் கற்றுக்கொண்டு வந்துவிடலாம். இது போலவே எந்தத் தொழிலின் அநுபவத்தையும் ஒரு வருஷத்தில் பயிற்சி பெற்று விடலாம். ஆசிரியத்துவ வேலையையோ அப்படி எளிதில் பெற முடியாது. அது பிறப்போடு சம்பந்தப்பட்டு வரும் விஷயமாகும். பிறப்பிலேயே தாயின் கர்ப்பத்திலேயே நூலாசிரியர்களாகவும் பத்திரிகாசிரியர்களாவும் இயற்கையில் அமைந்தவர்களுக்குத்தான் அந்த மேதாவித்தன்மை சுலபத்தில் சித்திக்கும். மற்றவர்கள் எவ்வளவு வருந்தி வருந்தி உழைத்து எழுதினும், இயற்கையாகவே மேதாவித் தன்மை யடைந்தவர்களோடு போட்டிபோட முடியாது. சொற்பமாகவே அவர்கள் படித்திருந்தாலும் அவர்கள் பேசுவதெல்லாம் கவிகளாக அமைந்துவிடும். அவர்கள் எழுதுவதெல்லாம் தங்கக்கட்டிகளாய் விடும். மற்றவர்கள் வருந்தி யோசித்து யோசித்து எழுதவேண்டியவைகளை இந்த இயற்கை யறிவின் பாக்கியமுள்ளவர்கள் வெகு சுலபமாய் மட மட வென்று எழுதிக்கொண்டு போய்விடுவார்கள். "சும்மா இருந்தாலும் இருப்பேன்; எழுந்திருந்தேனேயாகில் பெரும் காளமேகம் பிள்ளாய்" என்று பாடிய நிமிஷ கவியும் இந்த இனத்தில் சேர்ந்தவர்தான். ஆனால், இத்தகையோரிற் சிலர் வறுமையில் உழல்வதும் அதிசயம் தான். அதுவும் லோக சகஜமே. வித்தை இருக்கிற இடத்தில் செல்வம் இராது. செல்வம் உள்ள இடத்தில் வித்தை அபூர்வம். செல்வமும் வித்தையும் ஒன்று சேர்ந்துகொண்டு பரிமளிப்பது ஒரு பெரிய அதிர்ஷ்ட சம்பவம்.

இவ்வித இயற்கை அறிவைப் போலவே, அவரவர்களுடைய வாசக நடையும் இயற்கையில் அமைந்ததேயாம். அந்த நடை அவர்களை யறியாமலே வந்து அமைந்து விடுவதாம். இவ்விதமே அவரவர்களின் கையெழுத்தும் கூடப் பிறவியிலேயே பொருந்தியதாகும். ஒருவருடைய கையெழுத்தைப் பார்த்ததும் அவருடைய உருவம் நம் எதிரே வந்து நிற்கிறது. கையெழுத்தைக் கண்ட அளவிலேயே அது இன்னார் எழுதியது என்று சுலபத்தில் சொல்லிவிடுகிறோம். அவ்விதமே வாசக நடையைப் பார்த்து அது இன்னார் எழுதியதா யிருக்குமோ என்றும் உத்தேசித்துவிடலாம். கையெழுத்தும் வாசக நடையும் அவரவர்களுக் கென்று இயற்கையிலேயே அமைந்த ஒரு தனி விஷயமாகும். சொந்த சொத்தாகுமென்று கூடச் சொல்லலாம்.

இனி, ஒருவர் நூல் எழுதப் பழகும் விதம் எப்படி என்பதைப் பற்றி விவரிப்போம். நூல் வரைவதிலுள்ள இயற்கையின் தன்மையை மேலே குறிப்பிட்டோம். செயற்கைத் தன்மையில் அப்பயிற்சி அடைவதற்கு நல்ல ஞாபக சக்தியுடன் பல நூல்களையும் ஆராய்ச்சி செய்யவேண்டும். சதா காலமும் வாசிப்பில் கருத்து செல்லவேண்டும். இவ்விதம் நெடுநாள் பழகிய பின்பு அந்த வித்வத் தன்மையை ஒருவாறு அடையப் பெறலாம். அவ்விதம் அடைந்து ஒரு நூல் எழுதினும் அதைத் தக்கவர்களிடம் கொடுத்து அது நன்றாய் இருக்கிறதாவென்று ஆராயவேண்டும். எழுதினோர்க்குத் தெரியாத பல குறைகள், ரஸமில்லாத பாகங்கள் அதைப் படிப்பவர்களுக்குத்

தெரியவரலாம். அவர்கள் சொல்லும் குற்றங் குறைகளை யெல்லாம் ஒரு வாக்கு மூலமாக எழுதிப் பெற்றுக்கொண்டு அக்குறைகளை யெல்லாம் நிவர்த்தித்து நூலைப் பூர்த்தி செய்து, மறுபடியும் வேறொரு பிரதியை எழுதி முடிக்க வேண்டும். எத்தனை தடவை ஒரு நூலைத் திரும்பத் திரும்ப எழுதுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு அது வடிகட்டியதுபோல் சுத்தப்பட்டு, இன்னும் அதிக ஸ்வாரஸ்யமான விஷயங்களும் புதிது புதிதாய் அதில் வந்து சேர்ந்துகொண்டு விடும். ஒரு நூலை எழுதிய பின்பு சில மாதங்கள் வரைக்கும் அதைப் பெட்டியில் வைத்து விட்டு, அதன் சம்பந்தமாய் இன்னும் என்னென்ன திருத்தலாம், என்னென்ன அதில் சேர்க்கலாம், அதையே புதிதாய் வேறு விதமாக மாற்றி எழுதுவோமா, அதில் நாம் மறைவாகச் சொல்லியிருக்கும் விஷயம் கதையின் கடைசியில் தெரிவதற்குப் பதிலாக முதலிலேயே தெரிந்து விடுகிறதா, அவ்வாறாயின் அது தெரியாதிருக்க அங்கு என்னென்ன கற்பனைகளை நூதனமாகப் புகுத்துவிக்கலாம்—என்று இவ்வாறாக யோசித்தபடியே இருக்கவேண்டும். இவ்விதமான சிந்தனையின் அதி தீவிர சக்தியால் அந்த நூலுக்கு வேண்டிய விஷயங்கள் அடுக்கடுக்காக நம் உள்ளத்திலே தோன்றும். அப்படித் தோன்றுகிற போதெல்லாம் அந்த எழுத்துப் பிரதியை எடுத்து அதில் அவ்விஷயங்களைச் சேர்த்து ஒழுங்குபடுத்திவிட வேண்டும். இவ்விதம் பல நாள் உழைப்பில் பாடுபட்டு முயன்று எழுதி முடித்து ஒரு நூல் உருவாக்கவேண்டும். இது சாமான்யமான விஷயமல்ல. ஒரு நூல் ஒரு பெண் குழந்தைக்குச் சமமாகும். குழந்தை வயிற்றிலிருந்தும் உதிப்பது; நூல் மூளையினின்றும் தோன்றுவது; அவ்வளவே பேதம். நூல்—தான் புகுந்த இடத்தில் பயன்படுவதால் பெண் குழந்தை என்றோம்.

நீ வாசிக்கும் ஒரு புஸ்தகத்தை ஒரு கல்லுக்குச் சமமாக வைத்துக்கொள். அப்புஸ்தகத்தைப் படித்து அதிலுள்ள விஷயங்களைக் கிரகிக்கிற உன் மனோசக்தியை ஒரு குளமாக வைத்துக்கொள். புஸ்தகத்திலுள்ள விஷயங்களாகிய கல் உன் மனோசக்தியாகிய குளத்தில் விழுகின்றது. அவ்விதம் விழுந்ததும் உண்டாகிற முதல் அலையும், நீ அப்புஸ்தகத்தைப் படித்தபோது உன் மனதிற்பட்ட அப்புஸ்தகத்திலுள்ள விஷயங்களும் அப்புஸ்தக உரிமைப் (Copy Right) பாத்தியதை யுடையனவாகவே இருக்கும். உன் மனதிலிருந்து அதை நீ வேறாக எடுத்தெழுதி அச்சிட்டாலும் புஸ்தக உரிமைச் சட்டம் (Copy Right Act) உன்னை உடனே பயமுறுத்தும். ஆனால், அந்தக் கல் குளத்தில் விழுந்து முதலில் உண்டான அலைக்குப் பிறகு, மறுபடியும்—பல அலைகள் தொடர்ந்து அக்குளம் முற்றிலும் பரவுகிற—பின்னிட்ட அந்தத் தனி அலைகளை யெல்லாம் புஸ்தக உரிமைச் சட்டம் (Copy Right Act) ஒன்றும் செய்யாது.

அதாவது ஒரு புஸ்தகத்தை நீ படித்துவிடு. அது குளத்தில் கல் போட்டதற்குச் சமானம். புஸ்தகத்திலுள்ள விஷயங்கள் உன் மனதிற்பட்டபோது உண்டான முதல் எண்ணங்கள் அப் புஸ்தகத்திலுள்ள பதங்களாலும் வாசக தோரணைகளாலுமே அமைந்தனவாக இருக்கும். ஆகவே, அதை நீ உன் சொந்தமாக உபயோகிப்பது கூடாது. குளத்தில் விழுந்த கல்லினால் உண்டான முதல் அலையை விலக்கிவிடும்படி மேலே சொன்னது போல், இந்த உன் மனதில் தோன்றிய முதல் எண்ணங்களையும் அதற்குச் சமமானதாக எண்ணி விலக்கிவிடு. அபூர்வமாய்ச் சிலருக்கு அப்புஸ்தகத்தி



லில்லாத ஒரு நூதனக் கருத்து திடீரென்று முதலிலேயே படுவதுண்டு. ஆனால் இது எப்போதுமே நேருவதல்ல. இது அரிதாய்க் கிடைக்கிற அபூர்வ வரன். அதை உன் சொந்த சொத்தாக்கிக் கொள்ளலாம். அந்த நூதன கருத்துக்கும், நீ வாசித்த புஸ்தகத்துக்கும் எவ்வித சம்பந்தமுமே இராது. ஆனால் அவ்வித புதிய சிந்தனை நீ அப்புஸ்தகத்தை வாசித்த போதுதான் உண்டாயிற்றென்பதைப்பற்றி மட்டும் விசுவாசமாக இரு.

இவ்விதம் புதிய கருத்துகள் உன் மனதில் சட்டென்று படாமலும், நீ வாசித்த நூலின் கருத்துகளே உன் நெஞ்சில் விசேஷமாகவும் படுகிற போது, மேற்கூறியவாறு முதல் எண்ணங்களையும் முதல் அலையையும் விலக்கிவிட்டு, அந்த ஒரு அலைக்குப் பிறகு உண்டாகிற அலைகளை யெல்லாம் உனக்குச் சொந்தமானதாக்கிக் கொள்ளலாம். அதாவது ஒரு புஸ்தகத்தைப் படித்து, அதிலுள்ள விஷயங்களை உன் மனதில் வாங்கிக்கொண்டு, அதற்குமேல் உனக்குள்ளாகவே உண்டாகிற யுக்தி புத்தி சாதுர்யங்களையும் குறிப்புகளையும் நவீன யோசனைகளையும் புதிய கற்பனைகளையும் நீ தனியாக ஒரு புஸ்தகத்தில் எழுதிக்கொள்ளலாம். எழுதிக்கொண்டு அதிலிருந்து ஒரு பெரும் நூலை உற்பத்தி செய்யலாம்; அச்சிடலாம்; அது உனக்குச் சொந்தமென்று பாத்தியதை பாராட்டலாம்; உனது புதிய நூலுக்கும் நீ வாசித்த புஸ்தகங்களுக்கும் எந்த விஷயங்களிலும் ஒரு சம்பந்தமும் இராதானதால் அப்போது உன்னைப் ‘புஸ்தக உரிமைச் சட்டம்’ ஒன்றும் செய்யாது. நீ பள்ளிக்கூடத்தில் படித்த பாடங்களை இப்பொழுது எழுதுவதில்லையே. ஆனால், அப் பாடங்களைப் படித்ததிலிருந்தும் உனக்குள் உண்டான அறிவின் ஊற்றிலிருந்தல்லவா இப்போது நீ எதுவும் எழுதுகிறாய், பேசுகிறாய். அப்படிப்போலவே இப் புதிய நூல் விஷயத்திலும் உன் அறிவின் சொந்த ஊற்றிலிருந்து நீ அந்த நூலைச் சிருஷ்டிக்கிறபோது அது உன் சொந்த சொத்தாகத் தடையென்ன? ஆனால் இவை சுலபத்தில் வந்துவிடாது. எல்லோரும் இப்படி நூலாசிரியப் பல்லக்கில் உல்லாஸமாக ஏறிவிட முடியாது. இயற்கையிலேயே அதற்குள்ள ஆசிரியத்துவ அறிவு உனக்குப் படைக்கப்படாமற்போனாலும், செயற்கையில் உன் பிரயாஸத்தால் அமைந்த அறிவின் ஞான ஊற்றோடு, அவ்விதம் ஒரு நூல் பொருந்தி அமைய உனக்குக் கருணையங்கடலாகிய கடவுளின் ஆசீர்வாதமும் இருக்கவேண்டும். இது போன்ற நூல் சிருஷ்டிப்பு விஷயங்களோ, சந்தானபாக்கிய சிருஷ்டிப்பு விஷயங்களோ ஆதி கர்த்தாவின் அருள் இன்றி ஒருபோதும் முடியாது. நீ புஸ்தகங்களை எவ்வளவோ படித்திருக்கலாம்; ஆனால் ஒரு நூல் எழுதும்படியான பக்குவத்தன்மை உனக்கு வாய்ப்பதற்கு “அவருடைய” அருள் வேண்டும். அதுபோலவே, ஒருவர் எத்தனை விவாகங்களையாவது செய்துகொள்ளலாம். ஆனால் புத்திரபாக்கிய முண்டாவது ‘அவருடைய’ அருளைப் பொருத்த விஷயமாகும். புத்திரபாக்கிய வார்த்தையும், நூல் எழுதும் வார்த்தையும் ஒன்றுபடுத்திக்கூடச் சொல்லலாம். இரண்டும் பரம பிதாவின் கடாக்ஷத்தாலேயே முடிகிறவைகளாகும். இவ்வளவு கூறியதும் ஸ்வயமாய்த் தன்னிலேயே யோசித்து எழுதும் நூல்களின் விஷயத்துக்கே தவிர, வேறொரு பாஷையிலுள்ள நூலைத் தமது பாஷையில் மொழிபெயர்த்துவிடும் விஷயத்துக்கல்ல. அவ்விதம் மொழிபெயர்க்கும் நூல்களை எத்தனை வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் சொந்தமாக எழுதிய நூல்கள் சிற்சிலவாகத் தான் ஒவ்வொருவருக்கும் இருக்கும். ஒருவருடைய வாழ்

நாளில் சொந்தமாக ஒன்றிரண்டு நூல்களைத் தான் அவர் சிருஷ்டிக்கவல்லவரா யிருப்பார். அதிர்ஷ்டமிருந்தால் இன்னும் சில நூல்களை எழுதலாம்; அவ்வளவே. அது "அவருடைய" கருணையைத் தழுவிய பாகமாகும்.

இனி, மேற்கூறிய விஷயத்தைத் தொடர்ந்து செல்வோம். முன் சொன்னவாறு பின்வரும் அலைகளாகிய புதிய எண்ணங்களைக்கொண்டு நூல்கள் வரைவதற்கு விசாலமான கல்வியும், உலக அநுபவமும், சாதுரியமும் வேண்டும். கதைகள், நாவல்கள், இன்னும் பல பெரிய நூல்கள் எழுதுவதெல்லாம் கலப்பில்லாத சுய கற்பனைகளைக் கொண்டல்ல. பல சம்பவங்களை நேரிற் கண்டு, அல்லது தானே பட்டுணர்ந்த அநுபவ ஆற்றலிலிருந்தும், ஆராய்ச்சி செய்துணர்ந்த நூல்களிலிருந்து கிடைத்த அறிவின் ஊற்றிலிருந்துமே பெரும்பான்மையும் எழுதப்படுகின்றன. அவ்வளவேயன்றி முதல் நூல்களாய் அமைந்த சுய கற்பனை கிரந்தங்கள் மிக மிகச் சிலவேயாம். அச்சொற்பமானவற்றை இயற்றியவர்களாகக் கணக்கில் அகப்படுவோர் மகா மேதாவிகளாகவும், வித்வான்களாகவும், வர கவிகளாகவுமே இருப்பர். அவர்களின் அபார பாண்டித்தியத்திற்கு எதுவும் கைகூடும் தான்.

பெரும்பாலும் ஒரு புஸ்தகத்தைப் படிக்கும்போது தம் உள்ளத்தினூடே உண்டாகிற சிந்தனை ஆற்றுகளிலிருந்துதான்—யோசனைகள் யுக்திகளிலிருந்துதான்—அதைப்போலொத்த இன்னொரு புஸ்தகத்தை, முன்னதைவிடச் சிலாக்கியமானதாக இருக்கும்படி மிக நேர்த்தியாக எழுதுவதற்கு முயல்கிறார்கள். மண் இல்லாமல் குடம் எப்படியில்லையோ அப்படியே எந்த நூலுக்கும் ஒரு மூலாதாரம் ஒன்று இருந்துதான்—அதைப் பின்பற்றிக்கொண்டுதான்-அது எழுதப்படவேண்டும். இவ்வித மூலாதாரம் பல நூல்களிலும் பயின்ற அறிவின் மூலமாகவே தோன்றவேண்டும். அங்ஙனம் தோன்றி எழுதப்படுவனவற்றைத்தான் 'புஸ்தக உரிமைச் சட்டம்' அது வேறொரு புதிய நூலாக இருப்பதால்,—கட்டுப்படுத்தாதென்று இங்கு சொல்லவந்ததே யன்றி,—அரும்பாடுபட்டு எழுதி முடித்துத் தங்கள் நூலைச் சட்டப்படி உரிமை செய்துகொண்ட கிரந்தகர்த்தர்களை ஏமாற்றும்படியான மார்க்கத்தைக் கற்பிக்க நாம் இங்கு வரவில்லை. அவ்விதம் புஸ்தக உரிமை கொண்ட கிரந்தகர்த்தர்களும் நாம் மேலே சொன்னபடி பல புஸ்தகங்களைப் படித்து அதிலிருந்து உண்டான அறிவு ஆற்றத்தால் தங்கள் நூல்களைத் தயாரித்தார்களே யன்றி, மூலாதாரம் ஏதுமேயில்லாமல் சுயம் பிரகாசமாய் சொந்தமாகச் சுயமான சிந்தனையோடும் எழுதியவர்களல்லர். இக்கருத்தைத் தழுவித்தான் நன்னூலில் முதல் நூல், (அதிலிருந்தும் தோன்றிய) வழி நூல், (அவற்றை யநுஸரித்து வெளிவந்த) சார்பு நூல் என்று நூல்களை எழுதும் விதத்தை மூன்று பிரிவாக வகுத்துள்ளார். இதுகாறும் கூறியவற்றிலிருந்தும் தானே நூல் எழுதப் பழகும் வழியை ஒருவாறு தெரிந்துகொள்ளலாம். எழுத்தளவில் இவ்வளவுதான் எடுத்துச்சொல்ல முடியும். அதற்கு மேற்பட்ட விஷயங்களை அவரவர்கள் தம் சொந்த அநுபவத்தில் உணர்ந்துகொண்டு பழகவேண்டும். எதுவும் சலியா முயற்சியைப் பொருத்த விஷயமாம்.

**முயற்சி யுடையோர் இகழ்ச்சி யடையார்.**

**Try Try Try again : Perseverance is the road to Success.**

# கணக்கு

**'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.'**

1. தனது நிலைமை, தனது பிற்கால க்ஷேமம் தான் வைக்கும் கணக்குகளால் தான் ஒருவனுக்கு அமையவேண்டும்.

2. கணக்குகள் தெளிவும் விவரமுமா யில்லாவிட்டால், அதிகாரிகள் போடுகிற வருமான வரியை—தெய்வமே என்று சுமக்க வேண்டியதா யிருக்குமே தவிர, அதை மறுத்துத் தனது நியாயத்தையும், தனக்கு வருமானமின்மையையும் எடுத்துக் காட்ட முடியாது.

3. கணக்கைச் சரியாக எழுதி வராததின் காரணமே, மிக்க வியாபகமான ஒரு பெரிய வியாபாரமானது திடீரென்று படுத்துவிடும்படி செய்கிறது.

4. எவ்விடத்தில் கணக்கு சரியில்லையோ அவ்விடத்தில் நஷ்டம் நேருவது நிச்சயம்.

5. தனக்கு மட்டும் தெரியும்படி எழுதிவைத்துக்கொள்ளும் கணக்கு எப்பொழுதும் ஆபத்து. தன் மனதில் வைத்துள்ள கணக்கைப்பற்றிய பல குறிப்புகள் மறந்து போய் விடுகிற காலங்களில், அவன் எழுதி வைத்த கணக்கே அவனுக்கு விவரப்படாமற் போய் விடுகிறது. மறந்துவிட்ட அந்த விவரம் போனது போனதே.

6. கணக்குகளைச் சிறு சிறு துண்டுகளில் எழுதிவிட்டு, அத்துணுக்குகளை எங்கேயோ மறந்து வைத்து விடுகிறார்கள். அல்லது காற்றில் எங்கோ பறந்து போய் விடுகின்றன. அதில் இருந்த குறிப்பு இழந்துபோன மாதிரிதான். இது பிசகு; ஒரு அற்ப கணக்கும் உடனுக் குடனே ஒரு புஸ்தகத்தில் எழுதப்பட வேண்டும்.

7. கணக்கு முறையில் ஒரு ஒழுங்கு இல்லை. ஒருவர் கணக்கைப் போல் இன்னொருவர் கணக்கு இருப்பதில்லை. சிலருக்குப் பாதி நெஞ்சிலே. பாதி கணக்குப் புஸ்தகத்திலே. இந்த உதவாத கணக்கை வைத்துக் கொண்டு என்ன செய்கிறது?

8. நமது பக்கங்களில் ஒரு வியாபாரி மற்றொரு வியாபாரிக்குத் தொழில் முறையைக் கற்பித்துக் கொடுக்க மாட்டான். இவ்விதமே தனது ஒழுங்கான கணக்கு முறையை இன்னொருவனுக்குக் காட்டித் தரான், எனவே, அவரவர்கள் எண்ணத்திற் பட்டபடி கணக்கு வைப்பதில் அது சின்னாபின்னமாகிறது.

9. ஒரு தொழிற்சாலையில்—ஒரு கடையில் இருக்கப்பட்ட எல்லா ஆஸ்திகளையும் சாமான்களையும் அவற்றின் விலை மதிப்புடன் கணக்கில் காண்பித்து விடவேண்டும். அதனால் ஒரு கடையின்—ஒரு தொழிற்சாலையின் சொத்து மதிப்பு இவ்வளவென்று கண்டுகொள்ள முடியும்.

10. எந்த ஒரு அல்ப விஷயமும், ஒரு சிறு கணக்கும் உன் வாயிலிருந்து—மனதிலிருந்து வரும்படி வைத்துக் கொள்ளாதே. அதை உன் கணக்குப் புஸ்தகத்தி லிருந்தும் வரும் விதமாக நீ உன் கணக்கைச் சீராக வைத்துக் கொள்.

11. ஒரு கணக்குப் பிள்ளையை வைப்பதில் அவன் மோசம் செய்யக் கூடும். இருவரை வைப்பதுடன் எஜமானன் தான் அவர்களுக்கு இடையில் இருந்து கொள்வது அவர்கள் அவனை ஏமாற்றுதலைத் தடுக்க நல்ல வழி. கணக்கப் பிள்ளையைவிட எஜமானனே முதல்தரமான கணக்கப் பிள்ளையாக இருந்து, தனக்கு ஒத்தாசைக்கு மட்டும் அவர்களை வைத்திருப்பதான தன்மையில் நடந்துவர வேண்டும்.

12. வெளியிலிருந்து வரவேண்டிய பணத்தை வந்துவிட்டதாக எண்ணப்படாது. அப் பணம் கைக்கு வந்து கணக்கில் பதிவான தினத்துக்குத் தான் அது நிச்சயம்.

13. நூலாசிரியர்கள் ஒவ்வொரு புஸ்தகத்தையும் நூதனமாய் வெளியிடுகிற ஒவ்வொரு சமயமும், பிரதி யொரு புஸ்தகத்துக்கும் தனிக் கணக்குப் புஸ்தகம் வைத்து அதில் வரவு செலவுகளைக் குறிப்பிடுவது நலம். புஸ்தகம் இனமாகக் கொடுத்தாலும் அதுகூடக் கணக்கில் காட்டப்பட வேண்டும். இப்படிச் செய்வதனால், அவ்வப் புஸ்தகங்களின் லாப நஷ்டம், இருப்பு விவரம் முதலியனவற்றைத் தெளிவாக அறிந்துகொள்ள முடியும். புஸ்தக விளம்பரச் செலவு, அச்சுச் செலவு முதலியனவும் அவ்வப்புஸ்தகக் கணக்கில் அடங்கவேண்டும்.

14. அதிக காட்பட்டதான வரவேண்டிய கடன்களைத் தனியாக ஒரு புஸ்தகத்தில் எழுதி வைத்துக் கொள்ளவேண்டும். புதிய கடன்களோடு இதைக் கலக்கக் கூடாது.

15. வீட்டில் செய்கிற செலவுகளுக்கும் ஒரு ஒழுங்கான தினசரிக் கணக்கு இருக்கவேண்டும். கணக்கு எழுதி யாருக்குக் காட்டப் போகிறோம்; யார் அத்தொகையைக் கொடுக்கப் போகிறார்கள் என்று எண்ணிக் கணக்கு எழுதாமல் அலக்ஷியமாய் விட்டுவிடக் கூடாது. இன்று ஒற்றுமையாய் உன்னுடன் வீட்டில் கூடி யிருப்பவர்கள் பின்னொரு காலத்தில் உன்னுடன் விரோதப்பட்டுக் கொண்டு பிரிந்துபோய் விடுவார்கள். அப்பொழுது அவன் என்ன செய்தான்—இவன் என்ன செய்தான்—ஒரு காசு கொடுத்திருப்பானா?—என்னவோ மகா சாதித்து விட்டதாகப் பேசுகிறானே என்று எதிர்த்துக் கொண்டு அவர்கள் உன் முகத்தில் இடிக்க வருவார்கள். அவர்களுக்குத் துணையாக சில ஜதைகளும், சில பெரிய மனிதர்களும் கூடிக் கொள்வார்கள். அப்போது உன்னிடம் கணக்கு ஒழுங்காய் இருந்தால், அவர்களின் கன்னத்தில் அறைந்தது போல் உன் கணக்கை எடுத்துக் காட்டி, அவர்கள் விஷயமாக ஆதி நாளையிலிருந்து செய்து வந்த செலவுகளின் மொத்த இனங்களை யெல்லாம் எடுத்து விவரித்து அவர்களின் வாயை மூடிவிடலாம். இன்னும் உன் ஆதரவிலேயே ஒருவர் அல்லது ஒரு பெண் இருந்து அப்பால் கண் மூடிக்கொண்டால், அதற்குப் பாத்தியஸ்தன் நான் என்று மலையின்மீதிருந்து ஒருவனும், மூலை முடுக்கிலிருந்து மற்றொருவனும், குட்டிச் சுவரிலிருந்து வேறொருவனும் கிளம்புகிறான். ஓ! நீ என்னடா செய்துவிட்டாய், அதையெல்லாம் சொல்லடா, என்னிடம் அல்லவா அவள் இருந்தாள், நீ உன் வீட்டுக்காக வேண்டிக் கடிதம் போட்டதினால் அல்லவா அவளை அனுப்பினேன், இல்லாவிட்டால் என் சம்ரக்ஷணையிலேயே மகாராணி, ராஜாபோல வைத்துக்கொண் டிருப்பேனே, ஏதோ ஒரு இரு நாள் உன்னிடம் இருந்ததே தவிர, அவளைக் கால முழுதும் ஆதரித்தவன் நான் அல்லவா என்று மீசையை முறுக்கிக் கொண்டு சண்டை போட வருகிறான். அவன் கையில் இரண்டு காசு ஊசலாடிக் கொண்டிருந்தால் உன் வீட்டாரும் அவன் பக்கத்தில் சேர்ந்து கொண்டு தாளம் போடத் தொடங்கிக் கொள்வார்கள். ஏதோ இடையிற் செய்துவிட்டுக் கழித்த அவன் கையே இப்போது ஓங்கிவிட, வெகுகால பரியந்தம் கஷ்டப்பட்டுச் செலவுகள் செய்து தாங்கிய நீயோ எவ்விதப் பேரும் இல்லாமல், போதாததற்குத் திட்டுகளும் பட்டுக்கொள்ள வேண்டி வருகிறது. அந்தச் சமயத்தில் ஆதி நாளிலிருந்து விடாமல் எழுதிவந்த கணக்குப் புஸ்தகம் உன்னிடம் இருந்தால் அவர்களின் வாய்த் திமிரை அடக்கி விடலா மல்லவா? ஆகவே, வீட்டுக் கணக்கை அலக்ஷியம் என்று எண்ணி விடாமல், ஒவ்வொருவருக்கான செலவும், பொதுச் செலவும் விவரமாக எழுதி வைத்து வா, அதன் பிரயோஜனம் ஒரு காலத்தில் உனக்கு அருமையாய்த் தெரியவரும்.



16. விவாகம், சுபம், அசுபம் முதலிய காலங்களில் ஆகும் செலவுகளையும் விவரமாகக் கணக்கில் எழுதுவதுடன், அததற்கு மொத்தத் தொகை காண்பிக்கும் தலைக் கணக்கும் இருக்கவேண்டும்.

17. வீட்டிலுள்ள சாமான்களுக்கும், பெட்டி பேழைகளுக்கும், நகைகள் முதலியவைகளுக்கும் தனியான ஒரு விவரக் கணக்கு வைத்திருக்க வேண்டும்.

18. இன்னின்ன இடத்தில் உன் பணம் இருக்கிறதென்பதற்கும், வீடு, வயல், தோட்டம் இவைகளின் மதிப்பு எவ்வளவு என்பதற்கும், இன்னும் இதுபோன்ற பலவற்றிற்கும் வாய்ச் சொல்லாக இல்லாமல் எல்லாம் கணக்குப் புஸ்தகங்களில் பதிவு செய்யப்பட்டதாக இருக்கவேண்டும்.

19. உன்னிடம் உள்ள புஸ்தகங்களுக் கெல்லாம் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு எண் கொடுத்து, அந்த எண்களை வரிசையாக ஒரு புஸ்தகத்தில் எழுதி, அதற்கு எதிரில் அப்புஸ்தகங்களின் பெயர்களையும் எழுதிவிட வேண்டும். அப்போதுதான் இவ்வளவு புஸ்தகங்கள் உன்னிடம் இருக்கிறதென்றும், இன்னின்ன எண் உள்ள புஸ்தகங்கள் இரவல் கொடுத்துக் கொள்ளை போயிற்றென்றும் நீ தெரிந்து கொள்ள முடியும். புஸ்தக இரவல் கேட்பவர்களுக்கும்—இரவல் தந்தால் வாராமற் கெட்டுப் போய் புஸ்தக எண் தவறி விடுமென்று நீ மறுமொழி சொல்ல முடியும்.

20. வீட்டுக்காக வேண்டி மருந்துகள் தைலங்கள் செய்தாலும், அந்தந்தத் தடவையில் ஆன செலவுகளை விவரமாய்க் குறித்து வைத்தால், பின் அடுத்த தடவையில் எந்தெந்த சாமான்களை அதிகமாயும் குறைவாயும் வாங்க வேண்டுமென்று உனக்குத் தெளிவாய்த் தெரியவரும்.

21. எதற்கும் உன்னிடம் கணக்கு ஒழுங்காக இருந்தால் எவரும் உன்னை ஏமாற்ற முடியாது. நீயும் இன்னொருவரிடம் என் கணக்கு என்ன, அதைப் பார்த்துச் சொல்லுங்கள் என்று கேட்கவேண்டியதில்லை. கடைகளில் அவ்வப்போது கடனாக வாங்கும் சாமான்களுக்கு நீ ஒரு புஸ்தகத்தில் தனியாகக் கணக்கு வைத்து வரவேண்டும். அந்தக் கணக்கை நீ எழுதுவதைவிட, அந்தப் புஸ்தகத்தில் கடைக்காரனே எழுதித் தரும்படியாகச் செய்து, நீ வாங்கிக் கொள்வது இன்னும் மேலானது. ஏனெனில், உன்னிடம் கணக்கு இல்லாவிட்டால் உனக்கு ஒரு வீசை புளியைக் கொடுத்துவிட்டு, சென்ற வாரத்தில் புளி வீசை பத்து அணுவுக்கு இருந்த விலையையே

கணக்கில் எழுதிவிடுவான். நீ வாங்கும்போது இருந்த ஆறு அணு விலையை மிக்க யோக்கியமான அந்தக் கடைக்காரன் குறிக்காமல் விட்டு விடுவான். அத்துடன் நடு நடுவே நீ சாமான் வாங்கியது போலவும் இரண்டொரு கணக்குகளும் சேர்த்து விடக்கூடும். கடைசியில் நீ கடைக்காரனிடம் சென்று என் கணக்கு எவ்வளவு என்று கேட்கிறபோது வெகு நீளமாய் எழுதியுள்ள உன் கணக்கைக் காண்பித்து அதைக் கூட்டத் தொடங்குகிறான். அந்த நீளக் கணக்கிலே பொய்க் கணக்கு இன்னதென்று எதையும் நீ கண்டுகொள்ள முடியாது. தெய்வமே யென்று அவன் சொன்ன மொத்தத் தொகையைக் கொடுத்துத் தொலைக்க வேண்டியதுதான். நாணயமும் யோக்கியமுமான உத்தம வியாபாரிகள் எத்தனையோ பேர் உண்டானாலும், மற்றவர்களுக்கு மோச புத்தி உண்டாகாம லிருக்கவும், நீ ஏமாறிப் போகாம லிருக்கவும் எப்போதும் உன் கையில் ஒரு சரியான கணக்கு இருப்பது எவ்வளவோ மேல் அல்லவா?

---

## சிறு மணித் திரள்.

1. பிறருக்குத் திருப்தியையும் ஸந்தோஷத்தையும் தரக்கூடிய ஒரு சமயத்தை எப்பொழுதும் தவற விடக்கூடாது.

2. அறிவை விட யுக்தி, சாதுர்யம் என்பவை வெகு பெரிது. ஆனால் அது பிறப்பிலேயே இயற்கையாக அமையப் பெறுதவர்களுக்கு எளிதில் சித்தியாகிறதில்லை.

3. மரியாதையானது செலவின்றிக் கிடைப்பதாயும், மற்ற எல்லாவற்றையும் விலைக்கு வாங்கக் கூடிய வல்லமை யுடையதாயும் இருக்கிறது.

4. எவ்வளவு பணம் கொடுத்தாலும் பெற முடியாத பலவற்றையும் மரியாதை பாராட்டும் தன்மையால் சுலபத்தில் அடையலாம்.

5. ஒருவருடைய தயவைச் சம்பாதித்தால் அவர்களுடைய ஹிருதயங்களும், பொக்கிஷங்களும் உங்களுக்குச் சொந்தமாய்விடுகின்றது.

6. பலத்தால் முடியாத காரியம் தந்திரத்தால் பெரும்பான்மையும் வெற்றியடைந்து விடுகிறது. ஆனால் தந்திரத்தைத் துன்மார்க்கத்துக்கு உபயோகிக்காதே.

7. வேண்டியவற்றைப் பெற்றுக்கொள்வதில் கத்தி முனையால் கட்டாயம் செய்வதிலும் புன்னகையால் இணக்குவிப்பதே மேன்மை.

8. திறமையிலும் யோக்கியதையே அநேகருடைய செல்வாக்குக்குக் காரணமாயிருக்கிறது.

9. "ஆம்" என்றும், "ஆஹா" என்றும் சொல்வது வெகு சுலபம். "அல்ல" என்றும், "முடியாது" என்றும் சொல்வது மிகவும் வருத்தமான காரியம். ஆயினும் அப்படிச் சொல்லப் பின் வாங்கிக் கெட்டழிந்தவர்களும் கஷ்டப் பட்டவர்களும் வெகு பேர் என்பதையும் எண்ணு.



10. நம்மிடம் வந்து போகிறவர்களுக்கு நம்முடைய கூட்டுறவில் ஆநந்தம் இருக்கிறதென்று அவர்கள் உணர்ந்து கொள்ளும்படியாக நீ பிரயாசப்பட்டு நல்லவனாக நட.

11. சந்தோஷிப்பிக்க விரும்புவதே அதைச் செய்து முடிப்பதிற் குறைந்த பக்ஷம் பாதி வேலையானது போலாம்.

12. அநேகருக்கு அவர்களுடைய உயர்ந்த திறமையைவிட, உபசார குணத்தாலேயே யாவரும் ஒப்புக்கொள்ளும்படியான மேன்மை கிடைத்திருக்கிறது.

13. அன்புள்ள இருதயத்தைப்போல் அமைதியுள்ள மூளையும் அவசியம்.

14. ஆபத்தும் அவஸ்தையுமான காலங்களில் நம்மைப் பத்திரமாய்க் காப்பாற்றி நம்மைவிட்டுப் பிரியாமல் கூடவே இருந்து கண் விழித்துப் பாடு படுவோர் நமக்கு எந்தச் சமயத்திலும் விலை மதிக்க முடியாத துணைவர்களாவர்.

15. நம்மிலும் ஏழ்மையிலோ சமர்த்திலோ குறைந்தவர்களை நாம் காணும் போது அவர்களை அவமதிப்பது அறிவீனம். நாமும் ஒரு காலத்தில் அவர்களைப் போல் இருந்தவர்கள் தான்.

16. வீண் மனிதர்களோடு வெறுங் கூட்டங்கள் போடுவதிலும், நல்ல புஸ்தகங்களை மிகவும் ஆநந்தமாய் வாசிக்கலாம்.

17. ஒருவருடைய குணத்தை யறிவதில் கண்களும் உலக அநுபவமும் பேருதவி செய்கின்றன.

18. புருஷர்களுக்குப் புருஷர்களிடத்தும், ஸ்திரீகளுக்கு ஸ்திரீகளிடத்தும் முதற் பார்வையில் மயங்குவதும் அன்பு தோன்றுவதும் இல்லை.

19. ஒருவன் உனக்கு அதிக நன்மை செய்வதாகக் கூறும் சொல், அவன் உத்தமனாய் இருந்தாலும், அவன் தான் எண்ணுவதிலும் அதிகமாக அளவு மீறிச் சொல்லியிருக்கக் கூடும். ஆதலின் அந்த வாக்கை முற்றிலும் நம்பி ஏமாறாதே.

20. ஒருவன் உனக்கு உதவியாக இருக்க வந்தால், அவனுக்கே நம்மால் ஆகவேண்டிய காரியம் ஏதேனும் இருக்குமென்பதையும் அத்துடன் சேர்த்து யோசி.

21. நடிப்பு மாத்திரத்தினாலேயே எவனையும் நண்பனெனவும், அற்ப காரணத்தைக் கொண்டே எவனையும் பகைவனெனவும் எண்ணி விடக்கூடாது.

22. எவ்வளவுக்கு அறிவின் வழியாக மனுஷ்யன் நல்ல பாதையிற் செல்கின்றானோ, அவ்வளவுக்கும், ஒரு வேளை இன்னும் அதிகமாகவும் இச்சைகளின் வழியாகவும் சென்று மயங்குகிறான்.

23. விவகாரப் பேச்சுகள் எத்தகைய அன்பையும் உடைத்தெறிந்து எப்போதும் கெடுதி பண்ணக்கூடியது. விபரீதமும் விரோதமும் அதனாலேயே உண்டாகின்றன.

24. மனுஷ்யன் தன்னுடைய ஒரு விவகாரத்தில் வெற்றி பெற்றதாகச் சந்தோஷிக்கிறான். ஆனாலோ, அதன் காரணமாய் ஒரு சிநேகனையோ, ஒரு உறவினனையோ அதுமுதல் இழந்துவிடுகிறான்.

25. தோல்வியடைந்தோமென்று உணர்ந்தோரெல்லோரும் வெற்றியடைந்த கக்ஷியில் நியாயமிருப்பதாய் உணருகிறதில்லை.

26. நம்முடைய அபிப்பிராயத்தை வெளியிடாமல் அடக்கி, நம்மோடு பேசுவோரின் மனக் கருத்தையும் சுபாவத்தையும் தழுவிக் கூடிய மட்டும் ஒத்துப் போவதே கெட்ட பேர் எடுக்காதிருக்க நல்ல வழி.

27. நாமே நமக்கு அனாவசியமாகப் பகைவர்களை உண்டுபண்ணிக் கொள்ளக் கூடாது. அதைப் பார்க்கிலும் கெட்ட காரியம் நம்மால் செய்ய முடியாது.

28. குளிர்ந்த மறுமொழியானது கோபத்தை மாற்றி விடுகிறதென்று எப்போதும் ஞாபக மிருக்கவேண்டும்.

29. பத்துபேரில் ஒன்பதுபேர் அடித்தாலும் பொறுத்துக் கொள்ள முடியும். ஆனால் இகழ்ச்சியை மட்டும் ஒருபோதும் சகிக்க மாட்டார்கள்.

30. நம்மை எவராவது வாஸ்தவத்தில் ஏளனம் செய்தால், அந்த சமயத்தில் கோபம் கொள்ளாமலிருக்க முயலவேண்டும். நாமும் அவர்களுடன் கூடச்சேர்ந்து சிரிக்கக் கூடுமானால், நம்மைத் தாழ்த்த எண்ணிய அவர்களுடைய காரியம் தலை கீழாய்விடும்.

[இன்னும் வரும்]

---

## பெரியோரின் பெருமை கெடாது

1. கண்ணிலான் காலிற்
 கவின்மணியை * யெற்றிவிட்டால்
 மண்ணி லதுதான்
 மதிப்பகன்ற தாய்விடுமோ ?

2. பொய்த் தொழிலோன்
 † மைதிலியாம் பூவைதனைப் புன்காவல்
 வைத்ததனா லன்னை
 மதிப்பிழந்து போயினளோ ?

3. ஐவர்முன்னே பாஞ்சாலி
 யாடை யுரிந் தார்கயவர் ;
 மைவளர்ந்த கண்ணாளின்
 மாண்பகன்று போயினதோ ? ஸ்ரீ பாரதி.

(* எற்று = எறிதல். † மைதிலி = சீதை.)

## பிரபஞ்ச தரிசனம்

பகவான் நமக்குப் பேசும் திறமையைக் கொடுத்திருக்கிறார். பேசும் சக்தியினால் வக்கீலுக்குப் பணம் கிடைக்கிறது. பிரஸங்கி தன் கருத்தை நிறைவேற்றிக் கொள்ளுகிறான். வியாபாரி லாப மடைகிறான். கணிகை பொருள் திரட்டுகின்றாள். நல்ல பேச்சுகள் எல்லோரையும் ஸ்வாதீனப் படுத்துகிறது. கெட்ட பேச்சு எல்லோரையும் பகைவர்க ளாக்குகிறது. மிருது மதுர மொழியை உபயோகியாதவ னுடைய படிப்பு பயனற்றது. இனிமையோடு பாடும் குயிலின் குரலைக் கேட்டுச் சந்தோஷ மடைகிறோம். கா கா வென்று கத்தும் காக்கையை ஓட்டிவிடுகிறோம். குளிர்ச்சியானது சந்தோஷத்தையும், உஷ்ணம் வியஸனத்தையும் உண்டாக்குகின்றன. வெடுக்கென்று பேசுவதும், அதட்டி யுரைப்பதும், பிரயோஜனத்தை விளைக்காது. நல்ல வார்த்தையால் பரம துஷ்டனும் நேசனாவான். கடுமொழிகளால் நண்பன் கூடப் பகைவனாகின்றான். மிருது வசனமே எவரும் விரும்பத் தக்கது. இதனை அதிகார பதவியிலுள்ளவர்களும், குடும்ப நிர்வாகிகளும் சிந்தித்துப் பார்த்துத் தங்களைத் திருத்திக் கொள்வார்களாக.

***

ஐரோப்பியர்கள் பிறர் வீட்டு ஜனங்களைக் கண்டு சம்பாஷிக்கச் சென்றால், முன்னதாக அவர்களுக்குச் சொல்லி யனுப்பும் வழக்க முண்டு. பிறருடைய சௌகரியத்தையும் சாவகாசத்தையும் கவனியாமல் திடீரென்று சமயலறை வரையில் செல்வது கிராமவாஸிகளின் அநாகரிக வழக்கம். திறந்த வீட்டில் நாய் புகுவதுபோல, மனிதனும் நுழைந்தால் என்ன பெருமை யுண்டாகும்? மனுஷ்யன் தன்னுடைய காரியமாக வேண்டி அண்டை அயல் வீட்டாரிடம் செல்ல வேண்டுமாயின், அவர்களுக்குத் தான் வருவது சௌகரியப் படுமா வென்று முந்தித் தெரிவித்துப் பின்னர் போக வேண்டும். ஒவ்வொரு கிரகத்திலும் சுக கஷ்டங்கள் இருக்கும். துக்கமும் சந்தோஷமும் மாறி மாறி வரும். பிறர் செவியில் படக்கூடாத விஷய மிருக்கும். அன்னியர் கண்ணுக்குத் தென்படத் தகாத பாகங்களும் இருக்கும். இவைகளை யோசியாமல் மௌடீகமாய்த் திடீரென்று நுழைந்து தன் சங்கதியைத் தெரிவித்துக் கொள்வதும், அவர்கள் பேசும் விஷயங்களைக் கேட்டறிவதும், விவேக சூன்யங்களின் இயல்பு. இத்துர்வழக்கத்தை விட்டுவிடப் பிரயாசைப்பட வேண்டும்.

***

அநாவசியமான கேள்விகள் சில உண்டு. நாம் ரயில் வண்டியிற் போகும்போதும், வேறிடங்களுக்குச் செல்லும்போதும் அங்கங்கே வந்து ஏறும் பிரயாணிகளைச் சந்திக்க நேரும். அவர்களை—"நீர் யார்? உமக்கு எந்த ஊர்? பிள்ளை பெண்டுகள் உண்டா? எந்த ஊருக்குப் போகிறீர்? உம்மை நான் எங்கேயோ கண்டதுபோல் ஞாபகம் வருகிறதே" என்று கேள்விகள் கேட்கிறோம். இவற்றால் என்ன லாபம் சித்திக்கும்? எத்தனையோ பேர்கள் தாங்கள் இன்னாரென்று தெரிவிக்க இஷ்டமில்லா திருப்

பர். மற்றும் சிலர் ஏதேனும் ஒரு முக்கிய காரியத்தைப் பற்றி யோசித்துக் கொண்டிருப்பர். இவர்களை வீண் கேள்விகள் கேட்டுத் தொந்தரவு செய்வது பிசகு.

***

சுமார் 95-வருஷங்களுக்கு முன்பு 'ஸர் தாமஸ் மன்றோ' என்னும் ஆங்கில உத்தியோகஸ்தர் இங்கிலீஷ் கல்வி விஷயமாய்ச் செலவழிக்கும் திரவியத்தை ஒன்றுக்கு நூறு மடங்கு அதிகமாகப் பிற்பாடு துரைத்தனத்தார் அடையக்கூடும் என்றார். 1835-ம் வருஷத்தில் இருவகையான கக்ஷிகள் உண்டாயின. ஒரு கக்ஷியார் இங்கிலீஷ் வித்தையை மட்டும் விர்த்தி செய்யவேண்டு மென்றும், மற்றொரு கக்ஷியைச் சேர்ந்தவர்கள் தேச பாஷையையும் விர்த்திசெய்ய வேண்டுமென்றும் அபிப்பிராயப்பட்டனர். 1839-ம் வருஷத்தில் இந்திய இராஜப் பிரதிநிதியாக இருந்த கனவான் தேச பாஷையோடு ஆங்கிலமும் போதிக்கப்படுவதே சரியெனத் தீர்மானம் செய்தார். அவ்விதமே தற்போது நடந்து வருகின்றது.

***

இந்தியாவிலே—கால வித்தியாஸத்தால் புது நாகரீக முண்டாகிப் பழைய மதாசார அநுஷ்டானங்கள் அழிந்துபோய்க் கொண்டிருக்கின்றன வென்றும், ஆகையால் இந்தப் புது நாகரீக வெள்ளத்தை அணையிட்டுத் தடுத்து—அந்த நாகரீகம் நமது ஸமூகத்தை அடித்துக் கொண்டு போகாம லிருக்கும்படி முயலுவா ரில்லை யென்றும் ஒரு சாரார் வியஸனப்பட்டுக் கொண்டிருக்க, வேறு சிலரோ தங்கள் தேசத்தார் பழைய ஸ்தாபனங்களைத் தழுவி, அவைகளிலேயே நிலையாக நின்று முற்படாதவழியில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்க ளென்றும் குறை கூறுகின்றனர். இந்த இருவகையிலும் உண்மை யில்லாமற் போகவில்லை. நம்மவர்களிற் பெரும்பான்மையோர் அயல் நாடுகளில் ஸஞ்சரித்து இதர ஜனங்களுடைய பழக்க வழக்கங்களை யறிந்து, அவர்கள் முன் செல்வதற்குக் காரணங்கள் எவை யென்று சோதிக்காம லிருக்கிறார்கள். அன்னிய தேச நூல்களையும் படிப்பதில்லை. இவ்விதமாயின் விருத்திக்கு வழி எப்படி ?

***

ஐரோப்பிய நாடுகள் வெகு தீவிரமாய், தினம் ஒரு புது ஏற்பாட்டையேற்று முன் சென்று கொண்டிருக்க, நாம் மட்டும் பூர்வ காலத்து நிலைமையில் இருந்து கொண்டு வருந்துகிறோம். அன்னியர் புதிதான சாஸ்திரங்களை உண்டுபண்ணியும், கற்றும், புது அறிவும் அநுபோகமும் பெற்று, தொழில், வியாபாரம் முதலியவைகளை ஏராளமாய்ச் செய்து செல்வத்தைக் காலடியில் குவித்துக்கொண் டிருக்கிறார்கள். தூரத்துக்குப் போவானேன்? ஸமீபத்திலுள்ள ஜப்பானே பெரிய உதாரணம். அந்நிய தேச அநுபோகம் பெற்றவர்களுக்கு இந்தியர்கள் ஏன் வறுமையி லுழலுகின்றார்க ளென்று ஆச்சரியமா யிருக்கிறது. இந்தியா—உலகத்து மற்ற தேசங்களைப் போலப் பெருமையும் செல்வமும் பெற்று வாழவேண்டு மென்ற கவலை நம்மவர்களின் நெஞ்சிலே ஊன்றவேண்டும்.

***



மேற்றிசை நாகரீகத்தில் இந்தியர் குதித்து முழுகிவிடவேண்டு மென்பது ஒரு வகையாரின் கக்ஷி. இந்தியர் புண்ணிய யாத்திரை செய்ய வேண்டியது—ஸ்ரீகாசி, ராமேஸ்வரம் முதலிய க்ஷேத்திரங்களுக்கல்ல வென்றும், பாரீஸ், அமெரிக்கா முதலிய இடங்களுக்குச் செல்வதுதான் புண்ணிய யாத்திரை என்பதும் இவர்களது அபிப்பிராயம். உலக ஸஞ்சாரம்செய்து அறிவுபெற்ற இவ்வகையினர் இந்தியா வெகு மெதுவாகச் செல்லுகிறதென்று வருந்துகின்றனர். லக்ஷக்கணக்கான இந்தியர்கள் அந்நியதேசம் சென்று மேற்றிசை சக்தியை இந்தியாவில் புகுக்கவேண்டுமென்றும், அப்போதுதான், இந்தியா முழுமையும் தன் பழைய ஸ்வபாவத்தோடு புதிய மேற்றிசைச் சக்தியையும் கலந்துகொண்டு தீவிர கதியுடன் முன்செல்லு மென்றும், இவ்வாறு நிகழ்ந்தாலன்றி நம் நாட்டிற்கு வேறு வகையில் விமோசனம் ஏற்படாதென்றும் இவர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். இவ்வித அபிப்பிராயத்தில் தள்ளத்தக்கன ஒன்றிரண்டு தோற்றினும், கொள்ளத் தக்கன பல இல்லாமற் போகவில்லை.

***

இந்தியாவில் உயர்குலத்தாரும் மத்திய வகுப்பாரும் தங்கள் ஜனங்களை முன்செலுத்த விரும்பினால், அவர்கள் மேல்நாடுகளின் ஸமூக நிலைமையை அறியவேண்டும். ஐரோப்பியரின் முற்பட்ட கருத்துகளை அறிவதே இந்தியாவுக்குப் பெரிய ஔஷதமாகும். சோம்பல், மடமை, நம்பிக்கையின்மை, திறமையின்மை—இவைகளே விஷம்போல் இந்தியரை முன்செல்லவிடாது தடுக்கின்றன. இவைகளுக்கு மருந்து மேற்றிசை ஸமூக சாஸ்திர ஞானமே. இந்தியாவைச் சுற்றி அந்த நவீன சாஸ்திர சக்தி வளைத்து நின்று அதை முற்படுத்தவேண்டும்.

***

அமெரிக்கருக்கும் இந்தியருக்கும் அதிசயமான வித்தியாசங்கள் இருக்கின்றன. அமெரிக்கருள் ஜாதி பேதமில்லை. செல்வமே அந்தஸ்து பேதத்துக்குக் காரணம். இன்று தெருக்களைச் சுத்தம்செய்து ஜீவிப்பவன் நாளை அத்தேசத்துத் துரைத்தனத்தின் பிரதம அதிபதியாகி விடுவான். இன்று ஏழையாய்த் தாழ்ந்த அந்தஸ்தில் இருப்பவன் நாளை செல்வவானாய் விடில் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றுவிடுவான். ஆகையால் அமெரிக்கா தேசத்தில் ஜாதி இளப்பமென்றும் உயர்த்தியென்றும் இகழ்வதாவது புகழ்வதாவது இல்லை. ஸதாகாலமும் செல்வம் சேர்ப்பதிலேயே திருஷ்டி. ஆகையால் எப்போது பார்த்தாலும் பரபரப்பும் முயற்சியுமே காரியமா யிருப்பார்கள். ஸம்பாத்தியத்துக்கு வேண்டிய ஸகல அறிவும் அநுபோகமும் பெற்றவண்ணமாகவே இருப்பார்கள். நம்மவர்களோ இதற்குநேர்விரோதம். மந்தப்போக்கும், பழமையில் திருப்தியும், புதுமையில் நம்பிக்கை யின்மையும் நம்மவர்களுடைய குணம். அமெரிக்கரின் கருத்துகள் வெளி விஷயங்களிலும் முற்போக்கிலும் பற்றுள்ளவைகளா யிருக்க, நம்மவரின் கருத்துகளோ ஆத்தும விஷயங்களிலும் பிற்போக்கிலும் செல்லுவனவா யிருக்கின்றன. அமெரிக்கருக்கு ஆத்துமா வென்றும், கடவுளென்றும், மறு உலகமென்றும், மறு பிறப்பென்றும் இப்படிப்பட்ட எண்ணங்க ளில்லை. ஏதோ லக்ஷத்தில் ஒருவருக்கு இருந்தால் அதிகம். இந்தியருக்கோ இவைகளே கவலையா

யிருந்து உலக விஷயங்களில் அதிகப் பற்றிருப்பதில்லை. நம்மவர்க்கு வேதாந்த விசாரம் வேண்டியதே. அதுவே இந்தியாவின் பெரும் பொக்கிஷம். ஆனால், அதையே பெரும் லக்ஷியமாகக் கொண்டு, உலக முற்போக்குக்கு உகந்த காலாநுசாரமான லௌகிக தர்ம அறிவை அலக்ஷியம் செய்துவிடுவதும் கூடாதன்றோ?

---

## வீட்டைப்பற்றிய கேள்விகள்.

1. நீ இதுவரையில் உழைத்துப் பாடுபட்டதில் உன் பிற்காலத்துக்கு எவ்வளவு சேர்த்துவைத்திருக்கிறாய்? கையில் ஒன்றுமில்லையென்றால் வந்ததெல்லாம் என்ன செய்தாய்? எல்லாம் செலவாய்விட்டதென்றால் நீ சேர்த்துவைக்கிற காலம்தான் எப்போது?

2. உன் சொத்துகள் அன்னியர்களுக்குப் போய்விடாதபடியும், உன்னை நம்பிக் காத்திருப்பவர்களுக்கே கிடைக்கும்படியும் என்னென்ன ஏற்பாடுகள் செய்திருக்கிறாய்? அதற்கென்ன இப்போது அவசரம் என்றால், அவசரம் இன்னகாலத்தில்தான் வருமென்று கண்டவர்கள் யார்?

3. ஏதாவது சீட்டுப்போடுகிறாயா? எந்த பாங்கியிலேனும் மாதம் இவ்வளவு தொகை யென்று கட்டிவருகிறாயா? இல்லை என்றால் ஏன் இல்லை? சில்லரைச்செலவைச் சுருக்கி ஏன் ஒரு சீட்டுப் போடக்கூடாது? அதை எப்போது செய்யப்போகிறாய்?

4. நீ பொக்கிஷம்போல் சேர்த்துவைத்திருக்கும் புஸ்தகங்களின் தொகை எவ்வளவு? அவற்றில் இரவல் கொடுத்துத் திரும்பி வராமற்போனது எத்தனை?

5. நீ பிரதிதினமும் எத்தனைதடவை துர்க்குணங்களைத் தொட்டுக் கொள்ளுகிறாய்? உன்னைப்பற்றி உலகத்தார் என்ன சொல்லுகிறார்கள்? நீ இதுவரை செய்துள்ள நற்செயல்கள் என்னென்ன?

6. உனக்கு எத்தனை நண்பர்கள் இருக்கிறார்கள்? அதில் உன் ஆபத்தில் கைகொடுத்து ஆதரிக்கக்கூடியவர்கள் எத்தனை பேர்?

7. நீ கடவுளை நினைக்கிறாயா? ஒருதினத்தில் எத்தனைதடவை அவரைத் துதிக்கிறாய். உன்னுடைய பக்குவஞானத்தில் இப்போது எத்தனையாவது படியை எட்டி யிருக்கிறாய்?

---

# பழமொழிக் குறிப்புகள்

[தமிழ் மொழியில் வழங்கும் பழமொழிகளிற் பெரும்பான்மையானவற்றை நன்கு ஆராய்ந்து, அவற்றை ஒவ்வொரு தலைப்பெயரின் கீழும் அழகுபெறத் திரட்டி, அப் பழமொழிகளுக்குள்ள ஆழ்ந்த பொருள்களையும், அதன் சார்பான லோகாநுபவங்களையும் இனிது விளக்கிக் காட்டவேண்டுமென்பது நமது விருப்பம். அதற்கிணங்க, முதலில் "அன்பு" என்பதைப் பற்றி எடுத்துக்கொண்டு அதை யநுஸரித்ததாயுள்ள பழமொழிகளை குறித்து சிறு சிறு குறிப்புகளை இங்கு எழுதத் தொடங்குகிறோம்.]

## 1. அன்பு

1. "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்."
2. அகம் மலிந்தால் அஞ்சும் மலியும்.
3. அகம் குறைந்தால் அஞ்சும் குறையும்.

இம்மூன்று பழமொழிகளும் அன்பின் ஆழ்ந்த தத்துவத்தை விளக்குகின்றன. அன்பு குடிகொண்ட உள்ளத்தின் அழகு உடனே முகத்தில் பிரகாசிக்கும். தன் குழந்தைகள் என்ன குற்றம் செய்தாலும், அடம் பிடித்தாலும் பெற்ற தாய்க்கு அது ஒரு குற்றமாகப் படாது. எதையும் அவள் பொறுத்துக் கொள்ளுகிற ஒரு தன்மை உள்ளன்பிலிருந்தும் தோன்றியதாகும். அந்த உள்ளன்பு வற்றிப்போன ஒரு மாற்றாந்தாயின் மனதிற்கு இப்படிப் படுமோ? அவளுடைய முகத்திலே எப்போதும் சிடு சிடுப்பும் கொடுமையும் நிறைந்திருக்கும். எது உன் மனதிலிருக்கிறதோ அதை உன் முகம் காண்பித்துவிடும். ஒரு தமக்கை தன் தம்பியைச் சந்திக்கிறாள்; ஒரு தங்கை தன் அண்ணனைச் சந்திக்கிறாள்; அந்த சமயம் எவ்வளவு அன்பு பொங்குகிறது? அந்த அன்பு அந்தச் சமயமே முகத்தாலும் வெளியாகிறது. வெளியூரிலிருந்து ஒரு வீட்டுக்கு வருகிறவன் தன் பெட்டியைக் கீழே வைத்ததும், தனக்கு அந்த வீட்டில் பிராணதாரமாய் உள்ளன்புடையோராக எவர்கள் இருக்கின்றார்களோ அவர்கள் தன்னைக் காண விரைந்து வருகிறார்களாவென்பதையே ஆவலுடனும் எதிர் பார்க்கிறான். அவன் விரும்பித் தேடுகிற அவர்களும் உள்ளே தங்களின் வேலைகளை அப்படியப்படியே போட்டுவிட்டு இவன் இருக்கும் இடத்திற்கு ஓடிவந்து கண்டுகொண்டு, குளிர்ந்த உள்ளத்தோடும் பரவசத்தோடும் க்ஷேமம் விசாரிக்கத் தொடங்குகிறார்கள். அப்பொழுது அவர்களின் முகங்களைப் பார்த்தால் எல்லாம் அன்புமயமாய் ஜ்வலிப்பதைக் காணலாம். வீட்டுத் தலைவன் ஜீவனார்த்தமாக வெளியூருக்குப் புறப்படுகிறான். அவன் பிரிவுக்காக அவன் வீட்டினர் வருந்துகின்றனர். அந்த வாட்டம் முகத்தில் உடனே தோன்றுகிறது. வீட்டுத் தலைவனை வளர்த்த அம்மை தான் நோயிற் கிடப்பதுவும், அவன் ஊருக்குச் செல்வதுவும் நினைத்துப் பார்த்துவிட்டு, "அவன்" வருமளவும் தான் உயிரோடு இருக்கமுடியுமா என்று ஏங்கி, "அவன்" கன்னத்

தைத் தடவிக்கொடுத்து, "ஊருக்குப் போகிறாயா? போகத்தான் வேண்டுமா? சீக்கிரமே வந்துவிடு; நான் ஒருத்தி இங்கு இருக்கிறேன் என்பதை மறக்காதே"—என்று சொல்லியபடியே இந்த முகத்தை மறுபடியும் தான் காணமுடியுமா என்ற தவிப்புடனே அவனை உற்றுப் பார்க்கிறாள். அவளுடைய உள்ளத்தின் ஏக்கமெல்லாம் அவளுடைய முகத்தில் வெளிப்பட்டுக் கண்களில் ஜ்வலிக்க, அந்தக் கண்களுடைய கூர்மையான பார்வையானது "அவனுடைய" நெஞ்சில் வெகு ஆழத்தில் பாய்ந்து தாக்குகிறது. "அவன்" தன் பிரயாணத்தை நிறுத்தி விடுவோமாவென்றுகூட யோசிக்கிறான். இவ்வித சந்தர்ப்பங்களில் அவர்களுடைய முகங்களைப் பார்த்தால் அகத்தழகு முகத்தில் நன்றாக எடுத்துக்காட்டும். இவ்விதமே உள்ளத்தில் அன்பு மலிந்திருந்தால் எதையும் எண்ணாமல் தாராளமாய்ச் செய்யவைக்கும். தான் செய்வதற்கெல்லாம் கணக்கு பார்க்க வைக்காது. இதையே "அகம் மலிந்தால் ஐந்தும் மலியும்" என்ற பழமொழி எடுத்துக் காட்டுகிறது. இவ்வாறு அன்பு பெருகி நின்றவர்கள் ஒரு காலத்தில் அந்த அன்பில் மாறிப் போய்விடுகிறார்கள். தாங்கள் முன்பு அன்பு வைத்திருந்தவர்கள் தங்களிடம் வந்தால், அவர்களுக்கு உபசரிப்பதை ஒரு பளுவாக—சுமையாக உள்ளம் எண்ண வைக்கிறது. அந்தத் தன்மைக்கேற்றபடி முகத்தில் சுருக்கமும் தாளமும் பாட்டும் தோன்றுகிறது. இவ்வித ஒரு சம்பவத்தையே "அகம் குறைந்தால் அஞ்சும் குறையும்" என்ற பழமொழி எடுத்துச் சொல்லுகிறது.

4. அகல இருந்தால் நிகள உறவு, கிட்ட இருந்தால் முட்டப்பகை.

5. அகல இருந்தால் பகையும் உறவாம்.

இவ்விரண்டு பழமொழிகளின் கருத்தும் ஒன்றே. எவ்வளவு அன்புடையோராயிருந்தாலும், சதாகாலமும் நெருங்கிப் பழகினால் அந்த அன்பில் ஒரு சலிப்பு, ஒரு அலக்ஷியம் உண்டாய்விடுகின்றது. தூரத்தில் இருக்கும்பொழுது ஒருவரை யொருவர் காண நெஞ்சத்துள்ளே ஏவ்வளவோ அவா. எத்தனையோ கடிதங்கள் பறக்கின்றன; எவ்வளவோ உருக்கமான பதங்களும் சொற்களும் அக்கடிதங்களிற் பிரயோகிக்கப்படுகின்றன. அவர்கள் சந்தித்துக் கொள்ளும்போது எவ்வளவோ சந்தோஷம் அடைகிறார்கள். பிறகு சில நாள் ஒன்று கூடியிருப்பதில் முன்பு இருந்த அன்பின் வேகம் சற்று தளர்ந்துவிடுகிறது. எப்படியோ சில மனஸ்தாபங்கள் வந்து புகுந்துகொண்டு விடுகிறது. இதிலிருந்து முன் அன்பு வைத்தவர்கள் ஒரு விவகாரம் குறுக்கிடுகையில் அன்னியர்கள் பக்கம் சேர்ந்துகொண்டு எதிர்க்கத் தலைப்பட்டு விடுகிறார்கள். பழய அன்பு போய் இருபக்கத்திலும் பெரிய பகை வேரூன்றி விடுகிறது. ஆகவே, எவ்வளவு அன்பு இருந்தாலும் சற்று தூரத்தில் விலகி இருந்தால் தான் அந்த அன்புக்கு வேகம், சக்தி அதிகமாகிறது. சமீபத்திலேயே இருந்துவிட்டாலோ சலிப்பு தோன்றிக்கொள்கிறது; குத்திக்காட்டுதலான சொட்டு வார்த்தைகள் புறப்படுகின்றன; மனம் பேதப்பட்டுப் போகிறது. வீட்டிலேயே விழுந்து கிடக்கிற குமாரத்தியின் மீதும், குமாரனின் மீதும் அவ்வளவு அன்பு இருப்பதில்லை. தூர இருந்து கணவன் வீட்டிலிருந்து வரும் புத்திரியையோ வெகு ஆவலுடன் வரவேற்கிறார்கள். அவ்விதமே தூரத்திலிருந்துவருகிற புத்திரனையும் அளவுகடந்த ஆர்வத்துடனும் தழுவிக்கொள்கிறார்கள். அந்தப் புத்தி



ரன் ஒன்றுமே செய்யாவிட்டாலும்கூட, வீட்டிலிருந்தபடியே தனக்கும் தன் குடும்பத்துக்கும் உழைத்து எலும்பும் தோலுமான குமாரன்மீது அவன் அப்படிச் செய்கிறான், இப்படிச் செய்கிறான் என்று இல்லாத குற்றங்களையெல்லாம் வந்தவனிடம் சொல்லிச் சலித்துக்கொள்கிறார்கள். இவ்விதமே வீட்டிலேயே இருக்கும் மாப்பிள்ளை, வெளியூரிலிருந்துவந்த மாப்பிள்ளையை உபசரிப்பதற்காகச் சாமான்கள் வாங்கக் கடைக்குப்போகவும், வந்த மாப்பிள்ளைக்கு வேண்டியவற்றைச் செய்து தாங்கவும் வேண்டியிருக்கிறது. வெளியூர் மாப்பிள்ளை திண்டில் சாய்ந்தபடியே வீற்றிருந்து, வீட்டு மாப்பிள்ளை கொண்டு வந்து வைக்கும் தாம்பூலத் தட்டிலிருந்தும் வெற்றிலைப்பாக்கை எடுத்து ஒய்யாரமாய்ப் போட்டுக்கொண்டு உல்லாஸமாகிறார். இன்னும் பாக்கைத் தன் வாயில் ஒருவர் போட்டு, வெற்றிலையில் சுண்ணாம்பு மடித்துக்கொடுத்து விடுவதாயிருந்தால் நலமாயிருக்குமென்றும் எண்ணுகிறார். வீட்டு மாப்பிள்ளையோ ஓடியாடி உழைக்க வேண்டியிருக்கிறது. இதற்குத்தான் "அகல இருந்தால் நிகள உறவு" என்பது. "கிட்ட வந்தால் முட்டப் பகை" என்பதும் உலக அநுபவத்தில் சரியாகவே இருக்கிறது.

ஒருவருக்கொருவர் முன்பு அன்பில் நன்றாக ஊறிப்போனவர்களாயிருந்து, பிறகு ஏதோ மனஸ்தாபப்பட்டுக்கொண்டு பகைமையும் துவேஷமும் மேலிட்டுப் பிரிந்து வெகுகாலம் மட்டும் சந்தித்துக்கொள்ளாமலே இருந்துவிடுகிறார்கள். இடையில் அநேக வருஷங்கள் சென்றுவிடுகின்றன. "நாளுக்கு நாள் நகர்ந்தது காண் அம்மானே" என்று ஒருவர் பாடியபடி பழய பகை விரோதங்களெல்லாம் சிறிது சிறிதாக மறைந்துபோய்விடுகின்றன. ஒருவரையொருவர் காண்பதற்கு பழய காலத்தில்கொண்டிருந்த அன்பில் மறுபடியும் ஈடுபட்டுச் சந்திப்பதற்கு ஆவலாதிகொள்கிறார்கள். அப்படியே வந்து ஒன்று சேர்ந்துகொள்ள, முன்பு இருந்த பகையெல்லாம் தொலைந்து புதிய உறவு முற்றிப்போய்விடுகிறது. இதற்கே "அகல இருந்தால் பகையும் உறவாம்" என்பது.

6. அக்காள் இருக்கிற வரையில் மச்சான் உறவு.

7. அக்காள்தான் கூடப் பிறந்தாள், மச்சானும் கூடப் பிறந்தானா?

8. அக்காள் உறவும் மச்சான் பகையுமா?

1698/8

இம்மூன்று பழமொழிகளும் ஒன்றுக்கொன்று சம்பந்தமுடையவை. எல்லாம் அன்பினால் ஒன்றுபடுத்தப்பட்டவை. அன்பற்ற காலத்து நிகழ்ச்சியை எடுத்துக் காட்டுபவை. "அக்காள் இருக்கிறவரையில்தான் மச்சான் உறவு" என்பது எத்தனையோ பேர்கள் அநுபவித்துக் கண்டறிந்த உண்மையான சங்கதி. நமது அக்காள் இருக்கிறாள் என்று தான் மச்சான் வீட்டிற்குப் போகிறோம். நமக்கு வேண்டிய உபசாரங்களை யெல்லாம் அக்கா அடுப்பங்கரையில் செய்துவிடுகிறாள். நன்றாக உண்டு பூரித்து வெளியில் வருகிறோம். அக்காவின் சொத்துகளை யெல்லாம் நம்முடையதென்று நினைக்கிறோம். நம்முடைய பணம் காசுகளையெல்லாம் அக்காள் உறவின் பலத்தால் மச்சானிடம் நம்பிக் கொடுத்துவைக்கிறோம். மச்சானும் நம்மீது உறவும் அன்புமாய் நமக்குப் பல செலவுகள் செய்யவும் தயாராயிருப்பது அக்காளின்

பலத்தால் தான். இன்னும் அக்காளின் பெண்ணையும் நாம் கொள்ள நினைக்கிறோம். அக்காவின் தூண்டுதலால் மச்சானும் அதற்கு இணங்குகிறார். இவ்வளவு ஒற்றுமை முதிர்ந்துள்ள இடத்திலே கால வசத்தால் அக்கா கண்மூடிக்கொள்கிறாள். அவளுடைய சவம் அந்த வீட்டிலிருந்து வெளியேறின அந்த நிமிஷ முதல் அந்த வீடும், அவ்வீட்டிலுள்ள பொருள்களும், அவ்வக்காளின் குழந்தைகளும், அருமை மச்சானும் நமக்கு அன்னியமாய் விடுகிறார்கள். பிறகு அந்தச் சம்பந்தம் அவ்வளவில் தீர்ந்துபோய்விடுகிறது; அக்காவின் குழந்தைகள் இப்போது நம்முடைய குழந்தைகளல்ல; மச்சானுடைய குழந்தைகளாய் உருமாறிவிடுகிறார்கள். இப்போது அக்காவின் பெண்ணைக் கேட்டாலோ மச்சான் முடியாதென்கிறார். அக்கா இருந்த இடத்தில் இன்னொரு புதியவள் மச்சானுக்கு மனைவியாக வந்துவிட்டாலோ, இன்னும் கேடாய்விடுகிறது. மச்சான் முற்றிலும் மாறிப் புதிய மனிதராய் அன்னியஸ்தராய்விடுகிறார். அந்த சமயத்தில் "அக்காள்தான் கூடப் பிறந்தாள், மச்சானும் கூடப்பிறந்தானா?" என்று சொல்லி மனதைச் சாந்தப்படுத்திக்கொள்ள வேண்டியதாகிறது.

7-வது பழமொழிக்கு மற்றொரு கருத்தும் கற்பிக்கலாம். காலவசத்தால் மச்சான் ஏழ்மையாகி அக்காவோடும் குழந்தைகளோடும் தன் ஆதரவில் வந்துவிடுகிறார்கள். அவர்களை யெல்லாம் ஸம்ரக்ஷிக்கவேண்டிய பாரம் தன்மேல் விழ, அவற்றையெல்லாம் அன்புடனே தலையால் தாங்கிநின்றாலும், ஒரு சமயத்தில் எப்படியோ மனஸ்தாபங்கள் நேர்ந்து கொள்கிறது. தன் செலவு கஷ்டத்தாலும், தான் எவ்வளவு உழைத்தும் பேர் இல்லாததைப் பார்த்தும் மனம் வெறுத்துப்போய், அக்காவைத்தான் காப்பாற்ற வேண்டும், மச்சானைக்கூட ஏன் காப்பாற்றவேண்டும் என்று நினைக்கிறான். அவ்வித நினைப்புடனே "அக்காள்தான் கூடப் பிறந்தாள், மச்சானும் கூடப் பிறந்தானா" என்று சலிப்பாய்ச் சொல்லிக்காட்டுகிறான். இன்னும் தனக்கு வேண்டிய ஒரு நன்மையை மச்சான் செய்யாது விலகிக்கொள்ளுகிற போதும், அக்காள் காட்டுகிற அன்பை மச்சானிடம் காணமுடியாமற் போகிற போதும் இந்தப் பழமொழியை எடுத்துக் காட்டுவதுண்டு.

8-வது பழமொழி அக்காளிடத்தில் உறவும், மச்சானிடத்தில் பகையுமாய் இருப்பது கூடாதென்றும், மச்சான் இடத்தில் என்ன குற்றங் குறைகள் இருந்தபோதிலும், எவ்வளவு வேற்றுமைப்பட்ட மனதோடு அவர் நடந்து கொண்டபோதிலும், தனக்கு உதவிகள் வேண்டியிருந்த காலத்தில் அவர் அதைச் செய்ய மறுத்து ஒதுங்கிக்கொண்டிருந்த போதிலும், தன்னைப் பற்றி எவ்வளவோ கேவலமாய் அவர் பேசியிருந்த போதிலும், தன் உடற்பிறப்பான அக்காள் ஒருத்தி அவரிடம் வாழ்ந்து கொண்டிருப்பதினாலே, அந்த அக்காவை உத்தேசித்து, மச்சான்மீதுள்ள பகையையெல்லாம் மறந்து, அக்காவிடத்தில் இருக்கும் மனப் பற்றுதலான உறவை மச்சான்மீதும் வைத்து, துவேஷங்களை மறந்து இருவரையும் ஒரு கண்ணுகப் பார்த்து அன்பு குலாவி ஆதரித்துச் சேர்ந்துவாழ வேண்டுமென்கிற அருமையான புத்தி மதியை "அக்காள் உறவும் மச்சான் பகையுமா?"—என்று இடித்துக் காட்டி நமக்குப் போதித்து நம்மை சாந்தமான அன்பு வழியில் போகும்படி திருத்த முயல்கிறது. அக்காளிடத்துள்ள அன்பை மச்சான்மீதும் வைக்க வேண்டுமென்றும், அப்போதுதான் எல்லோருக்கும் க்ஷேமம் என்றும் இப்பழமொழி எடுத்துக் காட்டுகிறது. (தொடர்ந்து வரும்.)

| விவேகம்<br>விநோதம்<br>விசித்திரம்<br>விகடம் | **விகடப்**<br>**பிரதாபன்**<br>***(Registered.)*** | அநுபவம்<br>அற்புதம்<br>ஆச்சரியம்<br>ஆநந்தம் |
|---|---|---|

## பரமசிவம் படியளக்கிற கொள்வனை.



விகடஞானம் அபூர்வமாகி, விகடப் பத்திரிகைகளும் உத்தம வாக்துள்ளதாய் இல்லாமல் சுருங்கிவிட்ட இந்நாளில், இனி அதைக் காண வாய்க்கும் நாள் எந்நாளோ; அவ் விகடம் விதம் விதமாய், விசித்திரமாய், விநோதமாய், வித்வத்துவமாய், வியாபகமாய், விவேகமாய், விதரணையாய், விசாலமாய், விகாசமாய், விமரிசையாய், ஞான உணர்த்துதலாயும் விளங்கி எப்போது அந்தரத்திலே தோன்றுமோ வென்று மகா மகா மந்திரம் செபித்து, வாய் ஊறி, நா ஊறி, இதழ் ஊறி, இன்பம் ஊறி, ஆநந்தமாய், ஆர்வமாய், அதிசயமாய், அன்பாய், அளப்பரிய ஏக்கமாய் அண்ணாந்து அகமலர்ந்து அதே சிந்தனையாய் எதிர் நோக்கும் என் விகட உலகத்துச் சிந்தாமணிகளே! சிங்காரமணிகளே! சிங்கக் குட்டிகளே! சிலாக்கிய - பாக்கிய - யோக்கிய - போக்கிய ரத்தினங்களே! சிந்தித்த என் சிந்தையெல்லாம் அறிந்தே உதவவந்த கருணை மழை போலே, நேருக்கு நேராய் விகடனாகிய எனக்கு நேர்ந்துகொண்ட நேர்த்தி யொன்றை நீட்டி நீட்டித் தீட்டிச் சொல்லுகிறேன்—பூர்த்தியாய்த் தலைகளை ஆட்டிக் கேளுங்கள்.

"பிரபஞ்ச விலாஸ" தத்துவ ஆராய்ச்சியிலே, அநேக காலம் தலை மூளை யுருகப் படித்துத் தேர்ந்து, அநுபவஞான சாஸ்திரியாகி, அதை-இதை-கண்டதை-எல்லாம் வகை-வகையாய்-கதை-கதையாய்க் கற்பித்துக் காட்டும் விகடனாகிய நான், நேற்றைக்கு முந்தின, அதற்கும் முந்தின, முந்தின, முற்றின தினத்திலே, அந்தந்த ஊர்-பதி-வீடு-வீட்டார் கெட்டது-பட்டது-உயர்த்தி-தாழ்த்தி இதுகளெல்லாம் என்னமாய் ஏதாய் இருக்கிறதென்று என் இறக்கைகளைத் தட்டி அந்தரத்தில் கிளம்பி ஆகாயமார்க்கமாய் ஆராய்ச்சியாய்ப் பார்வையிட்டுக் கொண்டே வரும்போது, மாலை மயங்குகிற நேரத்தில் ஒரு அம்மாவும்-ஒரு ஐயாவும் என்னென்னவோ கணக்குகள் போட்டபடியே எனக்கு எதிர்ப்பட்டுக்கொண்டார்கள். அம்மா மடியிலே அரிசி 'தவிசி' கனமாய்த் தொங்கிக் கொண்டிருந்தது; ஐயா

கையிலே ஆழாக்குபடி, உழக்குபடி, உலகப்படி, உள்ளபடி, உயர்படி, தாழ்ந்தபடி, அரைபடி, முழுபடி, மரக்காபடி, ஞானப்படி இவைகளெல்லாம்இருந்தன. ஆருங்காணும், ஆணும் பெண்ணுமாய் அழகே உருவெடுத்ததுபோல் வருகிறீர்கள்! நில்லுங்கள், உங்கள் பேரென்ன ; நீங்கள் யார் ; உங்களைச் சுற்றிலும் ஒரு ஜோதி வீசிக்கொண்டிருக்கிறதே, அது என்ன என்றேன். அதற்கு அவர்கள், ஓகோ விகடப் பிரதாபா! நீயா, உனக்கு எங்களைத் தெரியவில்லையா ? நாங்கள் பரமசிவனும், பார்வதியும்-படியளந்து வருகிறோம், என்றார்கள். விகடன் உடனே அவர்களை வணங்கி, என்னத்தை படியளந்து என்னத்தைச் செய்துவிட்டீர்கள் ; ஊரெல்லாம் அரிசியோ— 'தவிசி' யோ - கஞ்சியோ - தண்ணியோ-கூழோ-களியோ-இராப் பட்டினியோ - பகற் பட்டினியோ-என்று அவதிப்படுகிறதே? நீங்கள் ஏதாவது சீராய்ந்தான் கவனித்துப் படியளக்கிறீர்களா? சும்மா போகத்தான் இருக்கிறது—பார்வதியும் பரமசிவனும் படியளக்கிறார்களென்று ; இங்கே பார்த்தால் வயிற்றெரிச்சலாய் இருக்கிறதே! மனுஷ்யாளெல்லாம் பஞ்சமென்னாத பஞ்சத்தால் அடிபடுகிறார்களே! ஒரு இடத்திலாவது மனோரம்மியப்பட்ட நிறைந்த வாழ்வைக் காணோமே! ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு குறை முட்டிக்கொண்டு வெகு முறுக்கு காட்டுகிறதே ! இதற்கு நீங்கள் சரியான பதில் கொடுக்காவிட்டால் விடமாட்டேன் என்றேன். என்றதும், பார்வதி மாதரசி - பசுந்தோகை, புன்னகை பொலிந்து பரமசிவத்தை நோக்க, உடனே பரமசிவம் தொடங்கிக் கொண்டாரையா கதையை!

ஓய் விகடா! நீ என்ன படைப்பின் இரகசியத்தை உணராமல் மடமடவென்று பேசிவிட்டாய். எங்கள் ஸ்தானத்திலே நீ இருந்து பார்த்தாலல்லவோ அதன் பளுவு - கனம் - சுமை தெரியும்? காங்கிரஸ் மகா சபையிலே அக்கிராஸனராய் வாய் ஓயப் பேசினவர்கள் எல்லாம், காங்கிரஸ்மகத்துவத்தாலே மகோன்னத சர்க்கார்பதவி கிடைத்ததும் கப்-சுப் என்று மௌன சாமிகளாகி வாயடங்கிவிடுகிறார்களே, அந்த வயணம்-காரணம் உனக்குத்தெரியுமா? வாய் இருக்கிறதென்று நாக்கில் நரம்பில்லாமல் 'தொனப்பி' விடலாமா ? நான் அவரவர்களின் அளவுக்குத் தக்கதாகவே படியளந்து வருகிறேன். கல்லுக்குள் இருக்கிற தேரையையும், முட்டைக்குள் இருக்கும் பறவைக் குஞ்சையும் ஊட்டி வளர்க்கிறது யார்?—நானல்லவோ? கல்வி கற்கிறதைவிட அதன் கருத்து ஆராய்கிறதல்லவோமேன்மை? 'அகதிக்கு ஆகாயம் துணை,' 'தர்மம் தலை காக்கும்,' 'மரம்வைத்தவன் தண்ணீர் வார்ப்பான்'-என்ற வழக்கச் சொற்களெல்லாம் நான் கிரமமாய்ப் படியளப்பதாலல்லவோ வந்தவை? ஒரு காலத்திலே நான் சரியாய்ப் படியளக்கிறேனாவென்று இந்தப் பார்வதிக்கு என்மேல் சந்தேகம் மிஞ்சிக்கொண்டு, ஒரு எறும்பை எடுத்துப் பத்திரமாய் ஒரு டப்பிக்குள் மூடி வைத்திருந்து பின்பு பார்க்கையில் அங்கும் ஒரு அரிசி இருக்கக்கண்டு வியப்புற்றாள். அதைப்போல விகடா! உன் சந்தேகத்தையும் நிவர்த்திக்கிறேன்.

உலகத்திலே உழைத்துத் தேடுகிறவன் முதலாக, உட்கார்ந்தபடி உண்டு திண்ணையிலே உறங்குகிறவன் வரையிலே எல்லோருந்தான் என்னென்னவோ முயற்சிகள் எல்லாம் செய்கிறார்கள். முன்னேறப் பார்க்கிறார்கள். ஊரிலுள்ள வித்தைகளையெல்லாம் வெகு ஊக்கமாய்க்



கற்கிறார்கள், என்றாலும் அவரவர்களின் முந்திய நல்வினை தீவினைக் கேற்பவே எதையும் கண்டடைகிறார்கள். அதற்குத் தக்கபடி என்கை குறுகியும், நீண்டும், வளர்ந்தும், சுருங்கியும், பின்னடைந்தும், முன்னேறியும் படியளந்து செல்லுகிறது. அதற்கு நான்தான் என்ன செய்யட்டும்? 'தெய்வமே உன்கோயில் இடிய-உனக்குக் கண் இல்லையா' என்று ஒருவன் என்னை நிந்திக்கிறான். மற்றொருவனோ 'எல்லாம் கடவுள் சித்தம்—அவர் எப்படியும் நமக்குப் படியளப்பார்' என்று தன் கஷ்டங்களையெல்லாம் சகித்துப் பொறுமையுடனிருக்கிறான். அவரவர்களின் மனோபக்குவத்திற்கு ஏற்றதாக அவரவர்களுக்குச் சித்தவிர்த்தியும் புத்திப்போக்கும் அமைகிறது. அதற்கு யார்தான் என்ன செய்வார்கள் ?

ஒரு பிள்ளை பெற்றவளுக்கு உறியிலே சோறு, நாலு பிள்ளை பெற்றவளுக்கு நடுத்தெருவிலே சோறு என்பதுபோல, நாலுவித்தைகள் கற்றவர்கள் நடுத்தெருவிலே திகைக்க, ஒரு வித்தை கற்றவன் ஏதோ தன் வயிற்றுப்பாட்டுக்கு வேண்டியதை ஒரு வகையாய்த் தேடிக்கொண்டு சுகிக்கிறான். ஏதும் தெரியாத மூடன் ஏதாவது ஒரு தொழிலைத் தொட்டுக் கொண்டு தன்னளவில் நல்ல சீரில் இருக்க, உயர உயர ஊர்க்குருவிபோலப் பறந்து படித்தவனோ எந்தக் கொம்பைப் பிடித்து ஏறுவதென்று ஏங்கி, தன் கௌரவம் நோக்கி வீங்கி, நீங்காத சஞ்சலம் தாங்கி வீட்டுக்குள்ளேயே கிடந்து கூழ் குடிக்கிறான். இவ்விதமே அதிகம் கற்றவன் கழுநீர்ப்பானையில் விழுந்து பேன்குத்த, உபாயமாய்க் கற்றவனோ கைக்கு வந்ததைப் பிடித்துக்கொண்டு அகப்பட்ட வேலையில் அமர்கிறான்; அல்லது வியாபாரியாகிப் படிப்படியாய் கையில் நாலு காசுமுதல் உள்ளவனாகிறான். அதது அவனவனது ஊழ்வினைக் கேற்றபடி அமைய, அதற்குத் தக்கதாக நானும் படியளந்துவிடுகிறேன். ஒரு தாய் வயிற்றுப் பெண்களான இருவரில் ஒருத்தி அறுபதுக்கு அறுபதாவது கல்யாணம் செய்து கொண்டு மஞ்சள் குங்குமத்தோடு மங்களமாய் இருக்க, மற்றொருத்தியோ வாழப்போன வீடு கொள்ளிவைத்த வீடாகி, கணவனும் கண் மூடிக்கொள்ள மாங்கல்யம் முடிந்துகொண்ட ஆறாவது மாதத்திலேயே யாவும் போய்த் தாய்வீடு சேர்ந்து தவிக்கிறாள். அது அவரவர்களின் ஊழ் வினைக் கேற்ற படியளப்பு.

மூத்தவன் மூலைவீட்டில் உறங்கிக் கிடக்க, தம்பி வல்லமையுள்ளவனாகி நல்ல வாழ்வு வாழுகிறான். சில இடங்களில் தம்பி ஊர் சுற்றியாய்த் திரிய, அண்ணன் ஐசுவரியாதிபதியாய் விடுகிறான். இதுவும் முன் கர்மத்திற்குத் தகுந்த படியளப்புதான். உடன்பிறப்பு—உடன்பிறப்பு என்று சதா தொட்டுப் பார்த்துக் கொண்டு அன்பு வெள்ளமாய் இருப்பவனுக்கு அது நிலைக்காமல் போக, உடன் பிறப்போடு விரோதப்பட்டுக் கொண்டவனுக்கோ வெகு காலம் அவன் உடன்பிறப்பு ஜீவித்து வாழுகிறது. இதுவும் அவரவர் அதிர்ஷ்டத்துக்கான படியளப்பு. அன்றாடம் புசிப்புக்கு வழியில்லாத தரித்திரர்களுக்கு வதவதவென்று குழந்தைகள் பிறந்து வீடெல்லாம் குழந்தைகள் மயமாக, விஸ்தாரமான வீடு கட்டிக்கொண்டு ஏழடுக்கு மனை மெத்தை உப்பரிக்கையிலே வாழ்கிற சீமானுக்கோ பேர் சொல்லுவதற்கு ஒரு பிள்ளையும் யில்லாமலே போய்விடுகிறது ; செல்வத்தை விரும்பிய தரித்திரனுக்கு அதற்குப் பதிலாக மக்கள் பாக்கியத்தைத்

தந்து படியளக்கிறேன். புத்திர பாக்கியத்தைத் தேடும் சீமானுக்கு அதை நிறுத்திக்கொண்டு மேன்மேலும் செல்வத்தைத் தந்து படியளக்கிறேன். இது அவரவர்களின் விதி வழிப்படி நடப்பு.

ஏழைப் பெண்ணுக்கு எங்கிருந்தோ வலிய மாப்பிள்ளை வந்து கல்யாணமாய்விடுகிறது. பணக்காரப் பெண்ணோ பத்து வருஷம் காக்கிறாள். ஏழைப் பையனுக்கு ஏற்ற சிங்காரி எவ்விதமோ வாய்த்துவிடுகிறாள். ஐச்வரிய ஸம்பன்னனான வாலிபனுக்கோ அவன் கண் மூடிக்கொண்ட பிறகே பூமாலை அவன் கழுத்தில் விழுகிறது. ஒரே மனைவியோடு ஒருவன் ஒரு நூறு வருடம் வாழ, மற்றொருவனோ தன் பத்தினியைச் சாகக் கொடுத்து அடுத்தடுத்து விவாகங்கள் செய்துகொண்டு, புதிதாய் வந்தவளோடு மொத்துண்டு, மூத்தவளை நினைத்து ஏங்கி, ஐயோ! இதுவும் கர்ம வசமா வென்று அங்கலாய்க்கிறான். உத்தமியான குணவதிக்கு முரட்டுத் தடியன் புருஷனாக, சாந்தஸ்தனான யோக்கியனுக்கு அடங்காப் பட்டிநீலி மனைவியாய் அமர்கிறாள். ஒருத்திக்கு உழைக்கும் புருஷன் பொருந்திக்கொண்டு பொன்காய்த்த மரமாக அவளை ஆக்கி, மாடிவீடு கட்ட, மற்றொருத்திக்கு உள்ளதையும் உட்கார்ந்தபடியே தின்று அழித்துவிட்டுப் போதாக்குறைக்குக் கும்மா - கொழுக்கட்டைகள் கொடுப்பவன் ஏற்பட, அவனுக்கு நெல்லுக் குத்தி ஆக்கிப் போடவும் வேண்டியதாகிறது. மாமியும் மருமகளும் ஒரு பக்கம் சேர்ந்து வாழ, மற்றொரு பக்கம் மருமகளும் மாமியும் மல்லுக்கு நிற்க, மகன் செத்தாலும் சாகட்டும், மருமகள் கொட்டம் அடங்கினால் போதுமென்று மாமி நினைக்க வைத்துவிட, இவற்றையெல்லாம் அவரவர் அதிர்ஷ்டத்துக்கு ஏற்றபடி படியளக்கிறேன்.

உட்கார்ந்தபடியே இன்னொருவன் கஷ்டத்தில் புசிப்போர் பிறருக்கு உத்தமராக, அவர்களுக்கெல்லாம் செலவிட்டு உழைத்தவனோ யாவருக்கும் பகைவனாக, நீ என்ன எங்களுக்குச் சாதித்து மூட்டை கட்டிக் கொடுத்துவிட்டாய் என்று அவன்மேல் வாதுக்கு நிற்க, அவனோ ஈச்வரா! எல்லாம் உனக்குத் தெரியும் - நீயே பார் என்று என்னை நோக்கி முறையிடுகிறான். நானோ அவனது கஷ்டத்தின் பிரயோஜனமாக அதிலிருந்து ஒரு பெரிய அநுபவத்தை அவனுக்குக் கற்பித்து விழித்துக்கொள்ளவைத்து, அவ்விதமாய் அவனுக்குப் படியளந்துவிடுகிறேன். ஏகபுத்திரனாய் இருந்து ஒருவன் தன் தந்தையின் சொத்துக்கள் அவ்வளவையும் கைக்கொண்டு உல்லாஸமாயிருக்க, மற்றொருவனுக்கோ அவன் தாய் கண்மூடிக்கொள்ள, தன் தந்தைக்கு மறுதாரமாக வந்தவள் பத்தெட்டுக் குட்டிகளைப் போட்டு, இருந்த ஏராளமான சொத்துக்களையெல்லாம் அவர்கள் பங்காக்கிக்கொண்டு எச்சிற்கலயம் போல் மீந்தது இவன் வசமாக, இவன் அதையும் சில நாளில் தின்றுவிட்டுத் திண்டாட - இப்படியும் உலகத்தில் நடக்கிறது. இவன் சொத்துக்களைச் சேர்த்துக் காப்பாற்றக்கூடியவனல்ல வென்று தெரிந்தே அதற்கு மற்றவர்களைத் தோற்றுவித்து அவர்களுக்குப் படியளந்துவிட்டேன். ஒரு சமயம் இவன் சொத்துக்களுக்குத் தாயாதிகளாய் முளைத்தவர்களிடம் இவன் போன ஜென்மத்தில் நன்றாய் உண்டு அநுபவித்திருக்கலாம். அந்தக் கடனை இந்தப் பிறப்பில் இவன்



தீர்க்கும்படியாகவும் நான் அவர்களுக்குப் படியளந்து விட்டிருக்கலாம்.

பிள்ளையில்லை யென்று மூத்தாளை நீக்கி, இரண்டாவது தாரம்கொண்ட பின் மூத்தாளுக்குப்பிள்ளையுண்டாகிறது. அல்லது மனங்கவர்ந்த இளையாள் குழந்தை பெற்று மாள, முன்பு வெறுத்த மூத்தாளுடனேயே குடித்தனம் நடத்தும்படி தலைவிதி வாய்க்க, இப்படியும் பல இடங்களில் உண்டு. இரண்டு மூன்று மனைவிகள் உள்ளவனுக்கு ஒருத்திக்கே சந்தானங்கள் உண்டாக, மற்றவர்களெல்லாம் மலடாகி மண்ணாக இப்படியும் நடக்கிறது. எவ்வளவு சொற்பமாய் வந்துங்கூட - அதில் சிறுகச் சிறுகச் சேர்த்துவைத்துச் செல்வராக - எவ்வளவு வரவு வந்தும் வந்ததெல்லாம் அப்போதே செலவாகி ஓட்டையாய்த் தரித்திரம் பிடுங்கித் தின்ன இவ்வித சம்பவங்களும் உண்டு. முப்பதாம் ஆண்டில் ஒருவன் மேல்நோக்கிச்செல்ல, இன்னொருவனோ இருந்த மனை, மனைவி மக்கள் தொழில் யாவும் போய் நடுத்தெரு நாராயணாவாகிறான். வேலைக்காரன் எஜமானனாகி ஓங்கிவிட, அவனை முன்பு வேலைக்கு வைத்துக்கொண்டவனோ இப்போது அவனிடம்போய்க் கெஞ்சிக் கூத்தாடுகிறான். சீமந்தம் சிறப்பாய்க் கொண்டாட, பின் பிறக்கும் குழந்தையோ வயிற்றுக்குள்ளேயே செத்துப் பிறக்கிறது. எவ்வளவோ வைத்தியம் கற்றும் கைராசி யில்லாமற் போக, அற்பசொற்பம் தெரிந்தவன் மண்ணைத் தந்தும் நோய் குணமாகிவிடுகிறதில் அவன் உயர்ந்து போகிறான். இவையெல்லாம் அவரவர்களது கர்மானுசாரமான படியளப்புகளாகும்.

இன்னும் சில சொல்லுகிறேன் கேள். மூலையிற் கிடந்தவனுக்கு முன்னேறும் பாக்கியத்தை உண்டாக்குகிறேன். அவனுடைய அதிர்ஷ்டத்துக்கேற்ப மூன்றரை நாழிகைவரை அந்தச் சுக்கிரதிசை அவனுக்கு இருந்து தீர்ந்து மறுபடி பழைய மண்கிண்ணியையே கவ்விக்கொள்கிறான். இது என் குற்றமாகுமா? ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொன்றை முடிக்க ஒருவனைக் கூட்டிவைத்துப் படியளக்கிறேன். ஒரே வரிசையில் இருக்கும் எல்லாக் கடைகளிலும் வியாபாரம் நடக்க விட்டு ஒவ்வொருவருக்கும் வயிற்றுக்குக் கிடைக்கச் செய்கிறேன். அந்தந்த செலவின் அவசரத்துக்கு ஏற்றபடி எங்கிருந்தாவது அவர்களுக்குப் பணம் கிடைக்கப் பண்ணுகிறேன். ஊனமுள்ளவர்களுக்கு ஒரு அவயவக்குறைவை மற்றொரு அவயவத்தில் அதிக சக்தி ஏற்றிக் காண்பித்துத் தேற்றுகிறேன். பணக்காரனுக்குப் பல நூறு செலவில் வியாதி தீரவைத்துப் பலருக்கும் அவன் காசு சேரச் செய்கிறேன். ஏழையின் நோய்க்கோ காலணா மருந்தில் குணமுண்டாகவைத்துவிடுகிறேன். வீணாகச் செலவுக்குச்சங்கடமாய்ச் சூழ்ந்து நிற்போரைக் கலகம் வரப்பண்ணி ஒதுக்குகிறேன். பிராப்தமே யில்லாமல் வீணாகப் பிரார்த்தனை செய்துகொண்டு வேண்டுபவனை இன்னும் அதிக கஷ்டத்துக்குள் ஆக்காதபடி அவன் தற்கொலை செய்துகொண்டு மாளவைக்கிறேன். அதிக புண்ணியம் செய்தவர்களை உலக கஷ்டத்துள் அழுத்தாமல் மரணத்தால் பிரித்து விடுகிறேன். கடவுளையே நம்பிக் காத்திருப்பவனுக்கு அவன் முன்னேற இப்பிறப்பில் அதிர்ஷ்டமில்லாவிடினும், ஏதோ கௌரவமான பிழைப்பைத் தந்து ஆதரிக்கிறேன். அப்படி ஆதரிப்போரை அவனுக்குச் சேர்த்தும் வைக்கிறேன். மானத்தோடு தலை வணங்

காது நிமிர்ந்திருப்பவனையும், உள்ள காலமெல்லாம் வேலையாள் ஏவல் புரிய பிரபுத்வத்திலேயே இருக்க விரும்புவோரையும் அப்படியே அவர்கள் வாழ்நாளளவும் நடக்கச் செய்விக்கிறேன். தன் ஊரில் பிழைப்பு இல்லாதவனுக்கு வெளியூரில் பிழைப்பு காட்டுகிறேன். குணத்துக்கேற்ற நண்பர்களைக் கூட்டுவிக்கிறேன். ஒவ்வொரு காலத்துக்கும் ஒவ்வொருவரால் ஒவ்வொரு நன்மை வரப் பண்ணுகிறேன். கதைகள், சாஸ்திரங்கள், நூல்கள் வரைவோருக்கு வேண்டிய அறிவை அவர்களுக்கு ஊட்டுகிறேன். மோசக்காரர்கள் மோசம்போக, நாசக்காரர்கள் நாசமாக, நல்லவர்களை மனமெரியச்செய்ததை யெல்லாம் அத்துஷ்டர்களை அநுபவிக்க வைக்கிறேன். போட்டி போட்டுக் கெடுக்கும் பாவிக்கு எதிர்போட்டி உண்டாக்குகிறேன். செல்வம் சேர வைத்தும் தடுமாறித் தலைகீழ் விழுபவனைப் பிச்சாண்டி யாக்குகிறேன். ஒட்டாமல் ஏனோ தானோ வென்றிருப்பவர்களை ஒட்டாமலோட்டி அவர்களின் கபடங்களை வெளியாக்குகிறேன். எங்கெங்கும் தலைவிதிக்கேற்ற தட்டையே தந்து படியளக்கிறேன்.

இன்னொன்றும்கேள் : வேதாந்தப் புஸ்தகச் சுமைகள் சுமந்தும், பூர்வ அருள் அற்றவனைக் கடைசிவரையில் புஸ்தகப் பூச்சியாகவே வைத்து, அவ்வளவே அவனுக்குப் பிராப்தமென்று படியளந்து விடுகிறேன். பூர்வஞான பக்குவம்பெற்றவர்களுக்கோ அவர்கள் அற்பசொற்பக் கல்வி கண்டவர்களாயினும், திடீரென்று அவர்களுக்கு ஞான ஜோதி வீச வைத்து ஞானிகளாக்கி விடுகிறேன். கடவுளையே எக்காலத்துக்கும் கதியாக நம்பி நிற்பவனை, அவன் பூர்வ வினையால் கஷ்டப்பட்டாலும் என் கண்ணோக்கம் முற்றிலுமே அவனிடம் வைத்து அவன் மனதுக்குப் பிரியமான குழந்தைகளைக்கொடுத்து ஆசீர்வதிக்கிறேன். இவ்விதம் மக்களைத் தந்து ஆசீர்வதித்த கருணையங் கடலான கடவுள் ஒரு காலத்தில் தன் கஷ்டங்களையும் தீர்த்துக் கடைத்தேற்றுவிப்பா ரென்று பல பல நினைத்து இன்னும் தெய்வபக்தி மிகுந்தவனாய் " வெகு பக்குவசாலியாகி விடுகிறான். அவ்விதம் நினைக்கும் பக்குவ ஞானம் எல்லோருக்குமே அமைவதில்லை யாதலால், அவ்விதம் திருந்தப் பெற்றவனுக்கு எல்லா விதத்திலும் உபகாரமான படியையே அளந்துவிடுகிறேன். இவ்வாறாக உலகத்துக்கு நலமான விதமாகவே படி யளந்து வரும் என்னை ஓ! விகடா! உள்ள சூக்ஷ்மம் உணராமல், படைப்பின் பரம ரகசியத்தைப் பகுத்தறியாமல், வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ வென்று ஆராயாமல் அவசரப்பட்டுக் கண்டபடி கேள்விகள் போட்டாயே! இப்போதாவது விளங்குகிறதா ? என் படியளப்பைப்பற்றி இப்போது என்ன சொல்லுகிறாய் என்றார் பரமசிவம். விகடனாகிய நான் என்ன பதில் அவருக்குச் சொல்லட்டும் ? என் கோணவாயையும் அவசரப் பட்ட நாக்கையும் உள்ளுக்கு இழுத்துக்கொண்டு அவர்களை வலம் வந்து வணங்கி எல்லாம் தங்கள் சித்தம் என் பாக்கியம் என்று சொல்லி அவர்களைப்போகவிட்டு விடை பெற்றுக்கொண்டு உங்களிடம் வந்து எல்லாவற்றையும் கொட்டி விட்டேன். நீங்களும் இதிலுள்ள ஞானாமிர்தத்தை எட்டி எட்டி முட்டிக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுங்கள். ராம்! ராம்! சுபம்! சூ! சுவாஹா!!

---

# பெண்கள் பக்கம்

1. உன் இல்வாழ்க்கையானது எக்காலத்தும் கடவுளாலும் பெரியோர்களாலும் ஆசீர்வதிக்கப்படும்படியாக மங்களகரமாகவும், சாந்தரூபியாகவும், பூமியிலும் அதிகப் பொறுமையுள்ளவளாகவும், வீட்டிற்கு அலங்காரமான லக்ஷ்மீ, சரஸ்வதி தேவதைகளாகவும் பிரகாசிக்கக் கடவாய்.

2. இம்மை மறுமைகளில் தோஷமுண்டாகாமல் உன்னைக் காத்துக் கொள்வதற்கு நீ எப்போதும் ஸதாசார ஸம்பன்னையாக விளங்குக. சுத்தம் சோறுபோடும், எச்சில் இரக்கவைக்கும்.

3. ஸதா பணிவிடை புரிவதற்கு நீ தயாராக இரு. எக்காலத்தும் எவருக்கும் அன்புள்ள சேவகியாக நில். நீ ஜனித்த தேசத்துக்கும ஒரு சேவகியாக நில். பணிவிடையில் எப்போதும் சிரத்தையாக நில். பிறருக்கு வேண்டிய உதவிகள்செய்து ஆதரிக்கவே கடவுள் உன்னைப் பெண்மணியாக உலகத்தில் தோற்றுவித்தார். பெண்மக்கள் உலகில் தோன்றியது எல்லோருக்கும் தாய்போல் இருந்து ஆதரிப்பதற்காகவாம்.

4. உன் கணவனார் புன்னகை ததும்பிய வதனராய் விளங்கினால், அதுதான் உலகத்தில் பெறத்தக்க பாக்கியங்களுள் பெரிய பாக்கியம். அதற்கேற்றபடி உன் நடத்தையும் பொருந்தியிருக்கிறதா என்று பார். மாமி, மாமன் முதலிய பெரியோர்களை மகிழ்விப்பதே உனது கணவனைத் திருப்தி செய்யும் மார்க்கமாம்.

5. நீ சிறுமியாய்த் தாய்வீட்டில் இருந்தபோது உன் ஆடல், பாடல், விளையாடல்களிலும் கெட்ட பெயர் இல்லாமல் கவனமும் மரியாதையுள்ளவளுமாக நடந்து வழக்கப்பட்டால், அவ்வழக்கம் கணவன் வீட்டிலும் உனக்கு நல்ல பெயரைத் தந்து மேன்மையைச் செய்யும்.

6. தாய் தந்தையருக்குத் தான் புகுந்த வீட்டாரால் இகழ்ச்சியுண்டாக்கும் பெண் இவ்வுலகில் பிறவாமலே இருந்துவிடுவது உத்தமம். எவ்வளவுதான் உன் பெற்றோர்கள் ஐசுவரிய ஸம்பன்னராயினும் அதில் உனக்குக் கௌரவமில்லை. உன் கௌரவம் உன் கணவன் வீட்டுச் சிறப்பினால் ஏற்படவேண்டும். அவ்வீட்டிற்குச் சிறப்பு உன் நடத்தைகளால் அமைய வேண்டும். புதுப்பெண் வீட்டிற்குவந்து வாழ்ந்த மனையும் உண்டு. புதுப் பெண் வீடு புகுந்ததும், அவ்வீட்டில் ஒன்றாயிருந்த குடும்பம் பத்துத் துண்டுகளாய் அவளால் பிரிந்து பல பிரிவினைகள் கண்டு பாழ்பட்டதும் உண்டு. ஆக்குகிறதும் பெண் தான், அழிக்கிறதும் பெண் ணை தான்.

7. உன் தாய்வீட்டார் உனக்கு எவ்வளவு சீர் வரிசைகள் கொடுத்தாலும், அதிலெல்லாம் உண்மையான பெருமை உண்டாய்விடாது. உன் நற்குணத்தாலும் வணக்கத்தாலும் நீ நடந்துகொள்ளுகிற தன்மையினால் உன் தாய் வீட்டுக்கு நீ உண்டாக்கும் உயர்வான பெருமைக்கு ஈடாக அந்த சீர்வரிசைகள் ஆகாது. உனக்கு உத்தம குணங்கள் இல்லாவிடில் அந்த சீர்வரிசைகளால் என்ன பிரயோஜனம் ?

8. உலகில் உன் கணவனுக்குப் பிறகு மற்ற ஆண்மக்கள் அனைவரையும் சகோதரர்களாக நினை. நீயும் அவர்களுக்குச் சகோதரியாக இருக்க விருப்பம்கொள்ளு. உன் அன்பான முகத்தோற்றம் உலகத்தாருக்கு நல்ல புத்தியையும், நல்ல மனோவிருத்தியையுமே உண்டாக்குவதாக விளங்கட்டும்.

உன் கணவனைக் கடவுளுக்குச் சமமாகவும், கணவனின் சகோதரர்களை உன் உடன்பிறந்தவர்களாகவும், மாமன் மாமியாரை உன் தாய் தந்தையர்களாகவும் பாவித்துவிட்டால், உன் நெஞ்சில் வேற்றுமையென்கிற விஷ விருக்ஷம் உண்டாகாமலே தடுக்கப்பட்டுப்போம். நீயும் நற்பெயர் பெறவும் கூடும்.

9. உத்தமமான பெண்கள் உலகத்தாருக்குக் கிடைக்காமல் உலகமும் உலகத்தாரும் மிக்க கஷ்டப்பட்டுத் தவிப்பான தவிப்பு தவிக்கிறார்கள். அந்தத் தவிப்பு உன்னால் ஒரு பங்காயினும் மாறி, உலகத்திற்கு க்ஷேமமுண்டாகும்படி நீ செய்வாயாகில், அதுவே நீ ஜென்மமெடுத்ததற்கு உலகத்துக்குச் செய்யும் பேருதவியாம்.

## II

பெண்மக்களுக்கு உத்தமமான வித்தியாப்பியாஸம் இன்னும் உண்டாகவில்லை. பள்ளிக்கூடத்துப் படிப்பு பன்னிரண்டு வயதுக்குமேல் எங்கோ அபூர்வம். அதற்குள் பெரிய பெண்களாய் விடுவாரென்று வீட்டில் நிறுத்திக்கொள்ளப்பட்டுப் போகிறார்கள். அரைத் துட்டுக்குக் கல்யாணம் அதிலேகொஞ்சம் பாணவேடிக்கை யென்பதுபோல, இந்தச் சொற்பநாள் படிப்பில் கொஞ்சம் இங்கிலீஷ் படிப்பும் சேருகிறது. எல்லாம் அரைகுறையே, காலே வீசமேதான். முற்றிலும் ஒழுங்காய் ஒருவகையாய்க் கல்வியில் தேர்ந்தவர்கள் லக்ஷத்தில் ஒருவர். உண்மையில் பெண்கள் கல்வி என்பதெல்லாம் இவ்வளவு கேவலத்துக்குள் சுருங்கியிருந்தாலும், பயனற்ற புது நாகரீகங்களைக் கற்றுக்கொண்டு ஐரோப்பிய துரைசானிகள் ஆகப் பார்ப்பதில் எவர்களும் மிஞ்சியே இருக்கிறார்கள். அடுக்குவைத்துத் தைத்த கவுன் என்ன? அதற்குமேல் ஜாக்கெட்டென்ன, கோணல் தலைவடுவென்ன, குச்சு லேஸ் பின்னல்களென்ன, பாலாமணி வளையல்களென்ன, பகட்டான நகைகளென்ன? பின்னல்களென்ன? இப்படி ஒன்றைப் பார்த்து ஒன்று பல மாதிரிகள் (பாஷன்கள்) கற்றுக்கொண்டு புதிய ஐரோப்பிய வேஷங்கள் போடுவதில் புத்தி போகிறதே தவிர, தங்களின் நற்குணத்தையும் கல்வியையும் விர்த்திசெய்வதில் புத்தி பாயக்காணோம்.

## III

முற்காலத்தைப்போல் மதாசார குலாசாரமாய் அதற்கு இணங்கிய படிப்பு, குணம், நீதி நூற்போதனைகள் அபூர்வமாகிவிட்டன. இன்னும் புதுவிதமான தையல்களும் பின்னல்களும் காசு பணத்திற்கு நஷ்டமுண்டாக்குகிறதேயொழிய, வீட்டுக்கு உபயோகமான—தையற்காரன் கூலி மீதியாகும்படியான தையல் பின்னல் அவ்வளவாகக் கிடையாது. ஹார்மோனியம் அரைகுறையாய்க் கொட்டுவதே பாட்டு. இன்னும் ச-ரி-க-ம-ப-த-னி தெரியாவிட்டாலும், சாரீரம் இல்லாவிட்டாலும் அந்தப் பெண்ணுக்கு ஒரு ஆர்மோனியம் இருக்கிறதேயென்று இந்தப் பெண்ணும் ஓர் ஆர்மோனியம் வாங்கிவிடுவதாகச் சங்கதி போகிறதே தவிர அதினால் ஒரு பயனும் பாடும் காணோம். சங்கீதஞானம் சாமான்யமல்ல. அது ஒரு பெரிய மகா சமுத்திரம். இவர்களுக்கு நாலுவரி எழுதவே பிழையில்லாமல் வாராதபோது, ஒவ்வொன்றிலும் தொட்டுக்கொண்டு எல்லாவற்றிலும் அரைகுறையேயாகி எதிலுமே சரிவரத் தேறாமற் போகிறார்கள். பத்துவகைக் காய்கறிகள் சமைத்து, ஒரு காயும் நாவுக்கு ருசிகரமாய் இல்லாமற்போவதைவிட, ஒரு காயாவது பக்குவமாய்ச் சமைக்கத் தெரிந்திருப்பது எவ்வளவ



சிலாக்கியம்? அவ்விதமே ஒரு வித்தையையாவது பூரணமாய் இல்லாவிட்டாலும் ஒரு ஒழுங்குவகையாகவாவது கற்றிருப்பது எத்தனை மேன்மை?

இன்னும் ஒரு சங்கதி, பள்ளிக்கூடத்துப் படிப்புடன் படிப்பை மூட்டைகட்டிவிட்டுப் பிறகு காலமுழுதும் சட்டிபானை ஸமுசாரப் படிப்பில் பொழுதுபோக்குவதே 100-க்கு 99-பேருக்கு வழக்கமாய் இருக்கிறது. புஸ்தகம் எடுப்பதென்றால் கசப்பு! பின்னல்போடுவதென்றால் தித்திப்பு! அந்த இந்தப் பெண்கள்வந்து கூடிக்கொள்ள, அவர்களுடன் பெருங்கூட்டம் போட்டுக்கொண்டு கண்ட கண்ட ஊர் சங்கதிகளைப் பேசி வியர்த்த காலக்ஷேபம் செய்வதென்றால் அதிலே வெகு வெகு ரமிப்பு! இவ்விதமான சீர்கெட்ட படிப்பால் தனக்குத்தானாகட்டும், தன்னைக் கொண்டவனுக்குத்தானாகட்டும், தான் புகுந்த வீட்டுக்குத்தானாகட்டும், தான் ஜன்மித்த நாட்டிற்குத்தானாகட்டும்—என்ன பிரயோஜனம்? அதிலே, சத்து, சாரம் ஏதாவது உண்டா? நல்ல சங்கதி-நல்ல சித்தவிருத்தி-நன்னடக்கை மாதிரிகள் ஏதாவது ஏற்படுகிறதா? எங்கள் பெண் படித்திருக்கிறாள் என்று வெகு பெருமையாகச் சொல்லிக்கொள்ளுகிறார்களே தவிர, நாளைக்கும் அவள் வீட்டில் புஸ்தகமும் கையுமாய் இருந்து, அதில் ஆசைவைத்து, அந்த ஆசையிலே அவள் முழுகிப்போய் நிற்கிறாளா? எத்தனையோ மாதப் பத்திரிகைகள், வாரப் பத்திரிகைகள், தினப் பத்திரிகைகள் நடைபெறுகின்றனவே. அவற்றில் எதையாவது ஒரு பத்திரிகையைத் தனக்கு வரப் பெற்றுக்கொண்டு அவற்றைத் தொடர்ந்து வாசித்துச் சேர்த்துவைத்துப் பிறகு பயின்றும் செய்துகொண்டு காப்பாற்றுகிற கண்மணிகளான கலாவதிகள் எங்கே யிருக்கிறார்கள்? அவ்விதக் காட்சி வெகு அருமையாய் எங்கோ ஒன்றிரண்டு அபூர்வமாய்த் தோற்றுகிறதே தவிர, எங்கும் மலியக் காணோமே. பள்ளிக்கணக்கு புள்ளிக்கு உதவுமா?' "புள்ளி" என்பது அனுபவத்திற்கு என்று அருத்தமாகும். பாடசாலையில் கற்றதைத் தொடர்ந்து வீட்டிலும் கிழவியான பிறகுங்கூட விடாமல் படித்து, அதிலுள்ள சுவையை நன்றாக ருசித்து தன்னில்தானே ஆனந்தப்படுவதல்லவா யதார்த்தமான—அநுபவிப்பதற்குப் பக்குவமான—நன்றாகக் கனிந்ததான—படிப்பாகும். அப்படிப்பட்ட படிப்பு யாருக்கு சாத்தியம்? அது சொற்பகாலமே ஒழிவு-ஓய்வு உள்ள பெண்மக்களால் முடிகிற சங்கதியா என்று பிரமித்து இளைப்படைந்து பின்வாங்கிப் போய்விடவேண்டாம். முதலில் ஒரு மாதப் பத்திரிகையைப் பெண்மணிகள் பெற்றுக்கொள்ளட்டும். ஒவ்வொரு மாதத்திலும் வருகிற பத்திரிகையை விடாமல் தொடர்ந்து உங்கள் மனதில் பதியும் வண்ணமாக ஒரு முறைக்கு இருமுறை படித்து வாருங்கள்; அப்படிப் படித்து ஒரு வருஷத்திற்குப் பிறகு உங்கள் கல்வி எப்படியிருக்கிறதென்றும், எவ்வளவு தேர்ச்சி நீங்கள் பெற்றிருக்கிறீர்களென்றும் உங்களைச் சோதித்துப் பாருங்கள். அப்பொழுது உங்களின் வித்தியாபிவிருத்தியைப் பார்த்து நீங்களே ஆச்சரியப்படுவீர்கள். எல்லா சங்கதியும் தன் இடைவிடாத முயற்சியிலிருக்கிறது. பெண்மணிகாள்! உங்களுக்காகவேதான் இந்த "ஆநந்த குண போதினி"ப் பத்திரிகையைப் பேசும் தமிழில் இனிய எளிய நடையில் வெளியிட முன்வந்திருக்கிறோம். சிறுகச் சிறுகத் தின்றால் மலையையும் தின்றுவிடலாம். உங்களின் அபிவிருத்தி மார்க்கம் உங்கள் கையில் இருக்கிறது. இனியேனும் காலத்தை வீணாக்காதீர்கள். நன்றாக வாசியுங்கள். நல்ல ஞானம் பெறுங்கள். உங்களுக்குப் பகவான் மங்களத்தைச் செய்யட்டும்.

# பதினாயிரம் ரூபாய் கொள்ளை.

ஒரு தனவந்தரின் வீட்டில் இரவு பதினொரு மணிக்கு இரும்புப் பெட்டி திறந்து கிடந்தது. அந்தப் பெட்டிக்குள் இருந்தவற்றை யெல்லாம் வெளியில் வாரி வீசப்பட்டிருந்தன. சில ரூபாய்களும் நோட்டுகளும் சிதறிக் கிடந்தன. பதினாயிரம் ரூபாய் நோட்டுகள் வைத்திருந்த கட்டைக் காணோம். எண்ணெய் வற்றியதால் அணைந்துபோன விளக்கைக் கொளுத்திய வீட்டுக்காரர் விளக்குடன் இரும்புப்பெட்டியின் அலங்கோலத்தைப் பார்த்துவிட்டுத் திருடன், திருடன் என்று கூவிக்கொண்டு வீதிக்கு ஓடிவந்தார். அவ்வழியில் அந்த சமயம் சென்றுகொண்டிருந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் இதைக் கேட்டு, உடனே அவ் வீட்டுக்குள் நுழைந்து எல்லாவற்றையும் கவனித்தார்.

**தனவந்தர்**:—எப்படியாவது திருடனைப் பிடிக்கவேண்டும். ஒருமிக்கப் பதினாயிரம் ரூபாய் நோட்டுகள் களவாடப்பட்டிருக்கின்றன. என் செய்வேன்?

**போலீஸ் இன்ஸ்பெக்டர்**:—நீர் இரவு படுக்கைக்குப் போகுமுன் இரும்புப் பெட்டியை நன்றாகப் பூட்டினீரா? வேறு சாவிபோட்டுத் திறந்ததான சின்னங்கள் இரும்புப் பெட்டியில் காணவில்லையே.

**தனவந்தர்**:—இரவு ஒன்பது மணிக்குப் பெட்டியைத் திறந்தது உண்மை. அதற்குள் ஒரு தந்தி வர அவசரமாய் வெளியிற் சென்றேன். பெட்டியைப் பூட்டிவிட்டுத்தான் போனேனோ இல்லையோ—எனக்கு ஞாபகம் சரியாயில்லை.

இந்த சமயத்தில் அதுவரை தூங்கிக்கொண்டிருந்த தனவந்தரின் மனைவி விழித்துக்கொண்டு தன் அருகில் குழந்தையைக் காணாமல் தேடிவிட்டு அலறினாள்.

**தனவந்தர்**:—ஐயோ! ரூபாய்களுடன் குழந்தையும் போய்விட்டதா? இன்ஸ்பெக்டரே! என்ன செய்வேன்?

**இன்ஸ்பெக்டர்**:—நான் மிகவும் துக்கிக்கிறேன். இரண்டுவிதமான திருட்டுகள் நடந்திருக்கின்றன. எப்படியும் இதைக் கண்டுபிடிக்கிறேன். திருடன் ஓடிப்போயிருக்கவேண்டும்.

**தனவந்தர்**:—ரூபாய் போனாலும் போகட்டும். குழந்தையும் போய்விட்டதே!

இன்ஸ்பெக்டர் வீடு முற்றிலும் சோதித்தார். ஒரு பக்கம் சுவற்றில் காயப்போட்டிருந்த சேலையின் ஒரு பாகம் கீழே கிடந்தது. அதை எடுத்துப் பார்க்கவும் ஆச்சரியத்தால் பிரமித்துப்போனார். உடனே தனவந்தரிடம் ஓடினார்.

**இன்ஸ்பெக்டர்**:—திருடனைக் கண்டுபிடித்துவிட்டேன். ஆனால் அவனைத் தண்டிக்க சட்டம் கிடையாது. இராஜாக்கினை அத்திருடனை ஒன்றும் செய்யமுடியாது. அவன் பிரியப்படி போக விட்டுவிடவேண்டியதே. களவுபோன நோட்டுகள் அவனிடம் இருக்கின்றன. அவன் கொடுத்தால்தான் பெற்றுக்கொள்ளலாம். கட்டாயத்தில் அவனிடமிருந்து பிடுங்க நமக்கு முடியாது.



**தனவந்தர்**:—என்ன விநோதமான இன்ஸ்பெக்டரய்யா நீர்? திருடன் உமக்கு மிகவும் வேண்டியவனோ? அதனால்தான் இப்படிப் பேசுகிறீரோ?

**இன்ஸ்பெக்டர்**:—என்னுடன் வாரும், திருடனைக் காண்பிக்கிறேன். உம்மாலும் அவனை ஒன்றும் செய்யமுடியாது. என்னுடைய அதிகாரமும் அவனிடம் செல்லாது.

தனவந்தரும் அவரது மனைவியும் இன்ஸ்பெக்டருடன் ஒரு அறைக்குச் சென்றனர். இன்ஸ்பெக்டர் தரையிற்கிடந்த சேலையின் ஒரு பாகத்தைத் தூக்கிக் காண்பிக்கவே, அதற்குள் திருடன் பதுங்கிக்கொண்டு நித்திரை செய்தபடி யிருந்தான். பதினாயிரம் ரூபாய் நோட்டுகள் அவன் கையில் இருந்தன.

**இன்ஸ்பெக்டர்**:—இந்தத் திருடனைத் தண்டிக்க எந்தச் சட்டத்திலும் இடம் காணோமே. பதினாயிரம் ரூபாய் கொள்ளைகொண்ட கள்வனை ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் கையும் மெய்யுமாகப் பிடித்தும், அவனை ஏதும் செய்வதற்கில்லாமல் விட்டுவிட்டுப் போகவேண்டி யிருக்கிறதே.

தனவந்தரும் அவர் மனைவியும் ஆநந்தத்துடனும் அந்தத் திருடனைப் பார்த்தபடி நின்றனர். தூக்கத்திலிருந்து அவனை எழுப்ப இஷ்டமில்லை. தனவந்தர் பதினாயிரம் ரூபாய் நோட்டுக் கட்டை அவன் கையிலிருந்தும் மெதுவாக எடுத்துக்கொண்டு, நானே இரும்புப் பெட்டியை மூடவில்லை யென்றும், அதனால்தான் இந்தத் திருட்டு நடந்ததென்றும் தெரிகிறது என்றார். திருடன் நடு நித்திரையில் விழித்துக்கொண்டு விளக்கு அணைந்து விட்டதால் தன்னருகில் உள்ளவரை யறியாமல் தேடியபடியே இந்த அறைப் பக்கம் வந்திருக்கிறான். அறைக்குள் தீபவெளிச்சம் கண்டு உள்ளே வர இரும்புப்பெட்டி எதிர்ப்படுகிறது. பெட்டி திறந்திருக்கவே உள்ளிருந்தவற்றையெல்லாம் கண்டபடி வீசி எறிந்து பதினாயிரம் ரூபாய் நோட்டுக் கட்டுடன் வெளியில்வந்து, சுவற்றில் ஆறப்போட்டிருந்த சேலையை இழுத்திருக்கிறான். அதன் ஒருபாகம் அவன் மேல்வந்து மூட, அதை எடுத்துவிட்டு வெளிவரமுடியாமல் அப்படியே படுத்துத் தூங்கிப்போயிருக்கிறான். இதுவே நடந்த சங்கதி என்றார் இன்ஸ்பெக்டர். தனவந்தரின் மனைவி அத் திருடனுக்கருகே சயனித்துக்கொண்டு அவனைத் தழுவி முத்தமிட்டாள். தன் கணவனுக்கெதிரில் இப்படிப் பகிரங்கமாய் ஒரு திருடனை ஒரு பெண் முத்தமிடலாமோ என்றார் இன்ஸ்பெக்டர். தனவந்தர் இன்ஸ்பெக்டரின் கையைக் குலுக்கிவிட்டுப் புன்னகையுடன் திருடனைப் பார்த்தபடி நின்றார். இந்தத் திருடனை யார்தான் என்ன செய்யமுடியும்? அவன் உலகத்திலிருந்தும் உலகத்துக்கும் அவனுக்கும் எவ்வித சம்பந்தமுமேயில்லை. அவன் எதிலும் பற்றில்லாத ஞானி. கபடமே யறியாத உள்ளம். உண்மையான அன்பையும், அழகிய புன்னகையையும் அவனிடம்தான் காணலாம். ஒரு மகா கவீஸ்வரரின் பாடல்களிலுள்ள இனிமையை விட, அர்த்தமே யில்லாத அவனுடைய சொற்களுக்குத்தான் அதிகமான தித்திப்பும் சுவையும் உண்டு. கடவுளின் சாயல் தத்துவம் ஸர்வபரிபூரணமாக விளங்குவதும் அவனிடமே. அவன் பல்லாண்டு பல்லாண்டாக வாழ்க.

---

# எமிலிஸோலா

### ஓர் பிரபல கிரந்த கர்த்தா.

எமிலிஸோலா என்பவர் கிரந்தங்கள் எழுதுவதிலும், சண்டை போடுவதிலும் வெகு பிரஸித்தி பெற்றவர். ஒரு கிரந்த கர்த்தாவுக்கு வேண்டிய ஸகல லக்ஷணங்களும் இவரிடம் ஸம்பூர்ணமாயிருந்தன. எமிலிஸோலாவின் தந்தை இத்தலிய நாட்டினர். அவர் ஒரு கியாதிபெற்ற எஞ்சினீர். எமிலிஸோலா 1840-ம் வருஷத்திற் பிறந்து, 7-வயதில் தந்தையை யிழந்து, 20-வயது வரையில் உயர்ந்த படிப்பும் உத்தியோகமுமின்றித் தவித்து, துறைமுகத்தில் சில மாதங்கள் கூலிவேலை செய்து, பின்னர் 1864-ம் வருஷத்தில் முதல் முதலாக ஒரு புஸ்தகம் எழுதி வெளிப்படுத்தினார். அதை ஜனங்கள் அத்தனைப் பிரியத்துடன் ஏற்றுக் கொள்ளவில்லை. அது முதல் இவர் அநேக புஸ்தகங்களை எழுதிக் கடைசியாக, 1871-ம் வருஷத்தில் "ரௌகான் மாக்வார்ட்" என்னும் நூலை வெளிப்படுத்தினார். அதைக் கண்டு ஜனங்கள் ஆச்சரியப்பட்டு விலைக்கு வாங்கினார்கள். அது முதல் ஸோலாவின் பெயர் எங்கும் பிரஸித்தமாயிற்று. பின்னர் குடிப்பதாலுண்டாகும் கேடுகளைப்பற்றி வர்ணித்தெழுதினார். இதுவும் பரமாச்சரியமா யிருந்தது.

புத்திசாலிகட்கு ஸ்நேகமும் பகையும் ஏககாலத்தில் ஏற்படுவது சகஜம். அவர்களை விரும்புவோர் ஒரு சிலரேயாக, பகைப்போர்—பரிகஸிப்போர்தான் அநேகராயிருப்பர். அதுபோல் எமிலிஸோலா எழுதிய நூல்கள் சிலவற்றின்மீது ஆங்கிலேயர்கள் ஆத்திரமடைந்து அவர்மீது கிரிமினல் வழக்கெடுத்தனர். சில புஸ்தகங்களை அச்சிடக் கூடாதென்று பிரெஞ்சு கவர்ன்மெண்டாரே தடுத்தனர். இவ்விடையூறுகளால் 'ஸோலா' மனம் தளரவில்லை. இதுவே ஒரு கிரந்த கர்த்தாவின் உறுதி நெஞ்சமாகும். எவர் பழிப்பினும், எத்தனைபேர் வைதிடினும் தன் மனஸாக்ஷிக்குச் சரியென்று பட்ட விஷயத்தைத் தைரியமாய் எடுத்துரைத்து வெளியிடுவதே நூலாசிரியரின் கடமையாகும். இதை 'ஸோலா' நன்கு அறிந்திருந்தார். தமக்குத் தடியடிகள் விழுமென்று தெரிந்துகொண்டும் கூட அஞ்சாமல் அவ்விஷயத்தைப்பற்றி ஒரு நூல் எழுதிவிட்டு, அதனால் ஏற்படும் சண்டைக்கும் தயாராகிவிடுவார். அவருடைய தளராத நெஞ்சுத் திறனுக்கு ஏற்றபடி மேதாவிகளான பல நண்பர்கள் அவருக்குக் கிடைத்தனர். 'ஸோலா'வுக்கு ஒரு வரியாவது எழுதாமல் ஒரு நாளைக் கழிக்கப்படாதென்ற வீர விரதமிருந்தது. அவர் எழுதிக்கொண் டிருக்கும்போது பூமி யதிர்ச்சியுண்டானாலும் அது அவருடைய செவியிற்படாது. உண்பதும் காலக்கிரமப்படிதான். சாராயம் அருந்துவது அவருக்கு வழக்கமில்லை. ரொட்டி முதலிய பதார்த்தங்களையே அவர் புசிப்பார்.

1898-ம் வருஷத்தில் இராஜீய விஷயங்களில் தலையிட்டுக்கொண்டு மரண தண்டனை யடைந்தார். நல்ல வேளையாய் இத்தண்டனை நிறைவேறவில்லை. அப்பீல் கோர்ட்டில் இந்த சிக்ஷை ரத்தாயிற்று. உத்தம சிந்தையுள்ள நூலாசிரியர்களுக்கு வரும் பாடுகளை என்னென்போம்? பின்பு பிரான்



ஸில் இருப்பது ஆபத்தென்று இங்கிலாந்துக்கு வந்து சில காலம் வசித்திருந்து, பாரீஸில் சமாதானம் உண்டான பிறகு திரும்பிப்போனார். அது முதல் இராஜீய விஷயங்களில் தலையிட்டுக் கொள்ளாமல், அநேக கதைப் புஸ்தகங்களை வெளியிட்டு முன்னிலும் அதிகமான கியாதியையும் பெருமையையும் பெற்றார். கடைசியாக 1902-ம்ஸு செப்டம்பர்மீ 29-ம் தேதியன்று இவ்வுலக வாழ்க்கையைத் துறந்து பரலோக ஸாம்ராஜ்யத்தை யடைந்தார். இறக்கும்போது ஆன வயது-62.

---

## வினோதம்

எப்படிப் பிரிவேன் :—

தாய் :—மகனே! எனக்கு இந்த ஊர் பிடிக்கவில்லை. உன் புத்திரியுடன் நான் ஊர் போகிறேன்.

குமாரன் :—என் உத்தியோகத்தைவிட்டுச் சொந்த ஊர் வந்து என்ன செய்யட்டும்? என் பெண்ணை எனக்குத் துணையாக வைத்துச் செல்லுங்கள்.

தாய் :—உன்னையும் அவளையும் பிரிந்து நான் எப்படி ஒண்டியாக இருப்பது? எனக்குத் துணையாக அவளை யனுப்பு.

குமாரன் :—உங்கள் இருவரையும் பிரிந்து நான் எப்படி ஒண்டியாக இருப்பது? ஆதலின் எனக்கு ஒரு துணை வைத்துச் செல்லுங்கள்.

தாய் :—இருந்திருந்து ஒரு பெண்; யாருக்குத் துணையாக வைப்பதோ? ஒருவரைத்தான் பிரியலாம். இருவரையும் எப்படிப் பிரிவேன்?

குமாரன் :—இருவரில் எவராவது ஒண்டியாக இருக்கவேண்டியதே.

***

தமிழாங்கில நாகரிக சிங்கார பாஷிதம் :—

ஒருவர் :—ஸார்! என்னுடைய எல்டர் பிரதருக்கு டீ—ஆர்—திரீ டேஸாக என்னமோ ப்வீவர் கண்டு நிரம்பவும் ஸப்பர் செய்கிறார். அதற்காக நேற்று டான்ஜூர் (Tanjore=தஞ்சாவூர்) ஸர்ஜனைக்கொண்டு வந்து டிரீட்மென்ட் செய்ததில் தற்பொழுது சற்று கியூரே. என்றாலும், இன்னும் போர் ஆர் பைவ் டேஸில் பெட்டராகும்போல் சொல்லுகிறார். நானும் அப்படியே எக்ஸ்ப்பெக்ட் செய்கிறேன்.

இன்னொருவர் :—நான் சொல்வது உங்களுக்கு அண்டர்ஸ்டாண்ட் ஆகிறதா? (அண்டர்ஸ்டாண்ட் Understand=விளங்குகிறது.)

மற்றொருவர் :—தங்களுடைய நேட்டிவ் பிளேஸ் எது? (நேட்டிவ் பிளேஸ் Native Place=சொந்த ஊர்.)

வேறொருவர் :—அதைப்பற்றி உங்களுடைய 'ஒபினியன்' என்ன? (ஒபினியன் Opinion=அபிப்பிராயம்.)

***

மறுபடியும் வராதிருக்க :—

ஒருவன் :—கேட்டதும் உடனே ஒரு ரூபா தூக்கிக்கொடுத்துவிட்டாயே? ஏது அவ்வளவு தயாள புத்தி ?

மற்றவன் :—அவன் தொல்லை வெகு பெரிதாக இருக்கிறது. இந்த ஒரு ரூபாயை அவனுக்குக் கடன் தந்ததில், அவன் அதை இனித் திருப்பித் தரப்போகிறதில்லை. என்னைக் கண்டாலும் பதுங்கி ஒளிந்துகொள்வான். வாங்கின ரூபாயைத் தரவில்லையே என்ற நினைவு அவனை நாணச்செய்யும். அவனும் இனி என்றைக்கும் கடன் கேட்கவரான். அவன் தொல்லை இதோடு ஒழிந்த மாதிரிதான். அந்தச் சுகத்தைப் பார்க்கப்போனால் இந்த ஒரு ரூபா பெரிதல்ல.

***

சுமை படவா :—

கவிராயர் :—ஏனடா என் மேல் கோபம்? நான் உன்னை ஏதும்சொல்லவில்லையே.

மாணவன் :—கிராமத்துக்குச் செல்ல வண்டி கிடைக்காத கோபத்தை என் மேல் ஏற்றி ஒரு பெரிய புஸ்தகச் சுமையை என் தலையில்வைத்து சுமை—படவா என்று திட்டினீர்களே.

கவிராயர் :—அதை நீ தப்பு அர்த்தம் செய்துகொண்டாய். சுமை-பட-வா என்றல்லவா நான் சொன்னேன். அது தெரியாமல் கோபிக்கிருயே.

---

அற்பஸகவாசம் பிராணஸங்கடம் என்பது பொய்யல்ல, அற்பர்களோடிணங்குவதும், அவர்களை வேலைக்கு வைத்துக்கொள்வதும் பிசகு. அவர்களால் வீண் கவலையும் துன்பமும் விளைந்துகொண்டிருக்கும். ஆங்கிலேயர் Avoid "Bad Company" என்பர். இதன் கருத்து கெட்ட ஸகவாசத்தைத் தவிர் என்பதாம்.

---

ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்நாளில் முற்பகுதியில் பணம் தேடுவதிலும், அதாவது பிறரிடமிருந்து பணத்தைக் கிரகிப்பதிலும், பிற்பகுதியில் பணத்தைக் காப்பாற்றுவதிலும், அதாவது பிறர் கொண்டுபோகாதபடி எச்சரிக்கையா யிருப்பதிலும் செலவழிக்கிருன். இப்படியே ஒவ்வொரு தனவானும் செய்தபோதிலும், பிறர் காசை அபகரியாதபடி தன்னைக் கட்டுப்படுத்துவதுமட்டும் அபூர்வமாய் சிலரிடத்து தான் உண்டு.

---

பணத்தினுலும், வித்தையினுலும், உயர் குடிப்பிறப்பினுலும் மனுஷ்யன் கர்வம்கொண்டு உண்மையை யறியாமற் போகிருன்.

---

**சில விதைகளைத் தெளிப்பதால் முளைகள் கிளம்பிப் பயிராகி, தான்யம் விளைந்து அநேக ஜனங்கள் பசியைத் தீர்த்துக்கொள்ளுகிருர்கள். இதைவிட ஆச்சரியம் வேறுண்டா?**

# சென்ற மாதம்

**சுத்தி இயக்கம்.**

டில்லியில் கூடிய "சுத்தி மகாநாட்"டில் அக்கிராஸனரான டாக்டர் மூஞ்சே, சுத்தி என்ற விஷயமே பலஸ்மிருதிகளிலிருந்தும் ஏற்பட்டதென்றும், இஸ்லாத்தில்சேர்த்த ஹிந்துக்களைத் திரும்பவும் ஹிந்து மதத்திற்கு அழைத்துக் கொள்வதற்காக, முகமதியர்கள் இந்தியாவுக்கு வந்தகாலத்தில் அது எழுதப்பட்டதென்றும் பேசினுர். சேலம் ஸ்ரீமான் விஜயராகவாசாரியார்—"சுத்தி இயக்கம் மற்ற வகுப்பினரைத்தாக்கும் இயக்கமல்ல" என்ருர். பூர்வம் தாங்கள் இருந்த மதத்தைவிட்டுப் பிற மதங்களுக்குச் சென்றவர்களை மறுபடியும் பழய மதத்தைத் தழுவும்படி செய்யும் சடங்குக்கே "சுத்தி" என்பது. இது சிறந்ததேயெனினும், ஹிந்து-முஸ்லிம் ஐக்கியத்தை இது உடைத்தெறியக் கூடியதென்ற கவலையும் இல்லாமலில்லை.

***

**புராதனத்தில் கௌரவ சிந்தையின்மை.**

பாட்னு கலாசாலையின் ஆசிரியரான ஸ்ரீமான் தாலுக்தார் தம்மீது மாணவர்கள் காமதகன பண்டிகையன்று குங்குமம் கலந்த ஜலத்தை விநோதார்த்தமாய்த் தெளித்தபோது, கடுஞ்சினம் கொண்டு, "இதென்ன காட்டு மிராண்டித்தனம்; உங்கள் முன்னேர்களுடைய காட்டு மிராண்டித்தனம் உங்களையும் பற்றிக்கொண்டதா?" என்று ஏசினராம். இவரும் ஓர் ஹிந்துவே. ஹிந்துக்களின் முன்னேர்கள் காட்டு மிராண்டிகளாய் இருந்தால், தற்போது காணப்படும் தேவாலயங்களும், பிரமிக்கத் தகுந்த கட்டிடங்களும், இன்னும் இவைபோன்ற பலவும் எவ்விதம் ஏற்பட்டிருக்குமென்பதைச் சரித்திர ஞானமுள்ள இவருக்குச் சிந்தித்துப்பார்க்க நேரமில்லையா? நம்மவர்களே நம்மவர்களை இகழ்வது கொடிய தற்கொலைக்குச் சமமாகும்.

***

**அப்பிப்ராயபேதமும் கக்ஷிகளும்.**

ஜப்பானியப் பார்லிமெண்டில் அங்கத்தினர்களுக்குள் வாய்ச்சண்டை வளர்ந்துஅடிதடிகளில் திரும்பி அநேகரின் தலைகளும் மூக்குகளும் உடைந்தனவாம். அறிவு அதிகரிக்குந் தோறும் அபிப்பிராய பேதங்களும் பெருகவே செய்யும். காங்கிரஸ் தோன்றிய 1885-ம் வருஷத்திய பழய இந்தியாவுக்கும் தற்போதைய இந்தியாவுக்கும் எத்தனை பேதம்! இப்போதுள்ள விதம் விதமான கக்ஷிகள் அந்த நாளில் இருந்தனவா?

***

**புதிய ராஜப் பிரதிநிதியின் வாக்கு.**

புதிய இந்திய ராஜப் பிரதிநிதியான லார்ட் இர்வின் லண்டனில் பின்வருமாறு பேசினுர்:—"இந்து தேச சரித்திரம் என்பதை ஒரு பெரிய ஆற்றுக்குச் சமமானதாக வைத்துக் கொள்ளுங்கள்; அதன் இருகரையிலும் பிரிட்டிஷார், இந்தியர் என்ற இருதரப்பினர் வசிப்பதாகவும் வைத்துக் கொள்ளுங்கள். இவ்விருதரத்தாருக்கும் நன்மையை விளைவிக்கக்கூடிய முறையில் இந்தியதேச சரித்திரத்தை நடத்திச் செல்லக்கூடுவதற்கு என்னுல் சாத்தியமாக இருந்தால், நான் என்னைப் பெரும் பாக்கியவானுகக் கருதுவேன்" என்ருர். அந்தப் பாக்கியம் இவருக்குச் சித்திப்பதாக.

**அமெரிக்கா பத்திரிகைகள்.**

வர்த்தமானங்களை மட்டும் அதிகமாகப் பிரசுரித்து அபிப்பிராயங்களை மட்டுப்படுத்திக்கொள்வது அமெரிக்கா பத்திரிகைகளின் முக்கிய குணமாம். அங்கு சில பத்திரிகைகளுக்கு ஐந்து லக்ஷம் முதல் பத்துலக்ஷம் வரையில் சந்தாதாரர்கள் உண்டாம். நம் நாட்டிலோ?—அது அனைவருக்கும் தெரிந்த சங்கதிதான்.

***

**இந்தியாவில் கக்ஷிகள்.**

சென்ற மாதம் ஸ்வராஜ்யக்கட்சியார் சட்ட சபைகளினின்றும் வெளியேறி விட்டார்கள். இது ஒரு புதிய முறை. பழய நாளில் காங்கிரஸின் தொனிமட்டும் இருந்தது. பிறகு 'பழய கட்சி' 'புதுக் கட்சி' என இரு கக்ஷிகள் தோன்றின. பின் ஜஸ்டிஸ் கக்ஷி புறப்பட்டது. அப்பால் ஒத்துழையாமைக் கக்ஷி பரவியது. இப்பொழுது ஸ்வராஜ்யக் கட்சியின் பெயர் எங்கணும் முழங்குகின்றது. இனி வருங்காலத்தில் என்னென்ன கக்ஷிகளெல்லாம் தோன்றிப் புதுமை விளைக்குமோ எவர் கண்டார்?

***

**புதிய ராஜப் பிரதிநிதி.**

இந்தியாவின் பழய ராஜப் பிரதிநிதியாகிய லார்ட் ரீடிங் தமது காலம் முடிந்து, ஜென்மதேசம் செல்ல, அவருக்குப் பதிலாக லார்ட் இர்வின் என்பவர் புதிய ராஜப் பிரதிநிதியாக வந்துள்ளார். இராஜப் பிரதிநிதிகளில் லார்ட் ரிப்பன் பிரபுவை இந்தியர்கள் என்றும் மறவார். அவருக்குப் பிறகு ஜனங்களின் பிரீதிக்குப் பாத்திரமானவர் லார்ட் ஹார்டிஞ்சு ஒருவரே. இப்போது வந்துள்ளவரின் செய்தியும் நல்லதாக முடியட்டும்.

***

**தற்கால கல்வி.**

கல்வி கற்பிப்பதின் நோக்கத்தைப் பற்றி திவான்பகதூர் டி. ஆர். ராமச்சந்திர ஐயரவர்களின் அபிப்பிராயம் பின்வருமாறு:—"நல்ல கல்வி, கெட்ட கல்வி என்பதைப்பற்றிப் பேசுவதில் உபயோகமில்லை. நாம் சக்தியற்றவர்களாயிருக்கிறோம். வேறொருவர் மேல் எதற்கும் சார்ந்திருக்கிறோம். நமக்கு சக்தியிருந்தாலும் கல்வி முறையானது பிறரால் சொல்லப்பட்டபடி நடத்தவேண்டியிருக்கிறது. இப்போது கொடுத்து வரும் கல்வி வெறும் விளையாட்டே. மேற்றிசை வழக்கங்களையே பின்பற்றி வருகிறோம். இந்தியர்கள் சிரிக்கிறதில்கூட ஆங்கிலேயரைப் போல் நடிக்கிறார்கள்."

---

ஒரு சமயம் லண்டன் நகரில் பார்லிமெண்டில் இந்தியாவைப் பற்றிப் பிரஸ்தாபம் நடந்துகொண்டிருக்கும்பொழுது ஒருவர் மற்றொருவரை நோக்கி, "இவர் என்ன அப்பா சொல்கிறார்? கஷ்டம்! பேஹார் பேஹார் என்கிறாரே; அது என்ன இழவு? நாம் போகலாம் வா, புகை குடிக்கும் அறையில் சிறிது நேரம் இருப்போம் என்று சொல்ல, பிறகு அவ்விருவரும் வெளியேறி விட்டனராம். பேஹார் மாகாணம் இந்தியாவில் இருக்கிறதென்றுகூட அவர்கட்குத் தெரியவில்லை போலும்!

---

# கண் பார்வை

மான் விழி அழகாயிருக்கும். யாரையும் லக்ஷியம் பண்ணாமல் மருண்ட பார்வையாதலின் அதன் விழியை வித்வான்கள் சிலாகிக்கிறார்கள். இதைப்போல் சிலருடைய நேத்திரங்கள் குளிர்ந்த பார்வையைக் கொண்டிருக்குமாதலின் மனமகிழ்ச்சியை விளைக்கும். புலி முதலிய துஷ்ட மிருகங்களின் கண்கள் கோபத்தை வீசும். பார்க்கப் பயங்கரமாயிருக்கும். இப்படிச் சிலர் கோப விழிகளையே கொண்டிருப்பர். இவர்களிடம் போகவேண்டுமே யென்று மனம் நடுங்கும். ஆட்டின் கண்ணில் அசடு வழியும். கழுதையின் முகமும் அப்படியே. இம்மாதிரியே சிலர் அசட்டுப் பார்வையோடும் விழிப்பர். உறுத்திப் பார்க்கும் கண்ணும், கொள்ளிக் கண்ணும், கொடிய கண்ணும், திருஷ்டி தாக்கும் கண்ணும் உடையோரின் முகத்தில் விழித்தால் விபத்து உண்டாகும். உள்ளத்தில் அன்புடையார் கண்ணும், கபடமிகுந்தவர்களின் நேத்திரமும், சுயநலப் பிரியர்களின் விழிப்பும் பார்த்தவளவிலேயே தெரிந்துபோம். மனிதனுடைய குணத்தை அவன் கண்களைக் கொண்டு அறியலாம். ஒரு திருடனுடைய கண்களின் தடுமாற்றத் தோற்றமே அவன் முன்பு எதிர்ப்படுவோரைத் தக்ஷணமே சமுசயத்தில் ஆழ்த்தி விடுகின்றது. காதற் கண்கள் இன்னவிதம் இருக்குமென்பதைப் பற்றிப் பல கதைகளில் விஸ்தாரமாய் வர்ணிக்கப்பட்டுள்ளன. கெஞ்சும் கண்கள், கொஞ்சும் கண்கள், மிஞ்சும் கண்கள், காமக் கண்கள் இவைகளெல்லாம் ஒவ்வொரு விதமாய் விளங்கி, உள் மனத்தின் சாயலைக் கண்களின் மூலம் உடனுக்குடனே தெரியக் காட்டிவைக்கும்.

லௌகீகத்தில் கலந்திருப்போரின் கண்கள் கீழ்நோக்குள்ளதாயும், வேதாந்த ஞானாமிர்தத்தில் ஈடுபட்டு உள்ளும் புறமும் ஒத்து நின்று பகவந் நாமமே ஸதா தியானமாகக் கொண்டுள்ளோரின் நேத்திரங்கள் மேல் நோக்குள்ளதாயுமிருக்கும். முற்றிலும் ஞான ஒளி வீசப்பெற்று ஞானிகளானோரின் நேத்திரங்கள் எப்பொழுதும் மேல் நோக்கியே நின்று, அன்னோரின் சித்தமும் மேல்நோக்கியே செல்லா நிற்கும்.

கடைக்கண்பார்வை யென்பது தயாளத்தினுடையவும் அன்பினுடையவும் தோற்றமாய் அருள் மிகுந்த தேஜஸுடன் பொருந்தி ஜ்வலிக்கும். கண் பார்வையை ஆழமாகச் செலுத்தி நிற்போர்க்குத் தமக்குப் பின்புறம் வாளுடன் ஒருவன் நிற்பினும் அது தெரியாதிருக்கவைத்துவிடும்.

கடன் வாங்கி மறைந்தவன் கடன் கொடுத்தவனிடம் தற்செயலாக அகப்பட்டுக் கொள்ளும்போது அக் கண் பார்வை வெகு திகைப்பும் தவிப்புமாய் இருக்கும். இப்படியே கொலையாளியின் கண்களும், கோபியின் கண்களும் வெவ்வேறு விதமாக விளங்கும்.

ஒப்புக்குத் துக்கம் நடிப்போரின் கண்கள் அவர்களின் முகத்தில் துக்கமேதும் இல்லையென்பதைத் தெரிவித்துவிடும். ஒரு காரியார்த்தமாக ஒருவனிடம் வந்திருப்பவரின் கண்களைப் பார்த்தால் உடனே அவ

னது ஹிருதய சிந்தனைகள் முகத்தில் பிரதிபிம்பிப்பதைக் காணலாம். யதார்த்த துக்கம் உள்ளவனின் கண்களும் அதற்கேற்றபடி நிற்கும்.

குறிப்பான பார்வை என்பது பல பக்கங்கள் வரக்கூடிய பெரிய விஷயமாகும். கண்ணாடி போட்டுக் கொள்வானேன்? அவர்களுக்குக் கண்களில் எந்த சக்தி குறைந்து போயிற்றென்பதை ஆராய்ந்து பார்ப்போமாயின் குறிப்பான — உடனே பார்த்தவளவில் தெரிந்து கொள்ளக்கூடிய அதிசூக்ஷ்மமான சக்தியை அவர்களுடைய நேத்திரங்கள் இழந்து விட்டனவென்பது தெளிவாகும். கண்களின் சிலாக்யத்தை நோக்கியே எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்று பெரியோர் கண்களைச் சுட்டிக் காட்டி அவ்விரண்டையும் உயர்த்திப் பேசினர் போலும்.

---

## பத்திரிகா சாரம்

**உமியின் கலப்பு :—**

இயந்திர அரிசி வரப்போய், அரிசியில் இருக்கவேண்டிய பிரதான சத்து அற்றுப் போனதுடன், உமியும் தவிட்டுடன் கலந்து போவதால், சுத்தமான தனித் தவிட்டை மாடுகளுக்கு வைப்பதற்கில்லையென்று ஸ்ரீமான் பி. டி. ஸ்ரீநிவாஸய்யங்கார் சுதேசமித்திரனில் தமது பெரிய வியாசமொன்றில் குறிப்பிடுகின்றார்.

**இயற்கை :—**

இயற்கையைக் குறித்து ஸ்ரீமான் ஏ. ரங்கசாமி ஐயங்காரின் அபிப்பிராயம் பின்வருமாறு :—"நம் நாட்டில் பரமார்த்திக புத்தியே அநாதி தர்மமாக விருக்கிறது. பழய காலத்தில் விதிக்கப்பட்டுள்ள முறைகள் பரமார்த்திக வழக்கத்திற்கும், ஐக்கிய வாழ்விற்கும் உற்ற துணையாக விருந்திருக்கிறது. அந்த முறைகளெல்லாம் இயற்கையோடு கூடியவை. இயற்கையோடும் அமைந்த வாழ்வை மனிதன் நடத்துவதுதான் சிலாக்கியம். புராதன உரோமில் உரோமர்கள் 'இயற்கையுடன் இயைந்து வாழ்' என்றதை முக்கியமாக அனுஷ்டித்தனர். அவர்கள் அக்காலத்து இயற்றிய சட்டங்களெல்லாம் இயற்கையை அநுஸரித்தவைகளாக இருந்தன. மனிதன் இயற்கையாக ஒன்று கூடி வசிக்கக் கூடிய சுபாவமுள்ளவன்."

**ஏமாறுமை :—**

"நம்மை ஏமாற்றப் பார்ப்பவர்களிடம் நாம் ஏமாற வில்லையென்று காண்பித்து விட்டால், அவர்களுக்கு இயல்பாகவே மனக்குழப்பமும் நமக்கு வெற்றியும் உண்டாகும். இதை அனுபவத்தில் காணலாம்.

(தமிழ் நாடு)

**ஆறிய காபி :—**

காபியையோ தேத்தண்ணீரையோ குறிப்பிட்ட நேரத்திற்கு மேல் வைத்திருந்தால், அதில் ஒரு விதமான விஷ பதார்த்தம் உண்டாவதாக அமெரிக்க டாக்டர்கள் கண்டு பிடித்திருக்கின்றனர்.

**(சுதேசமித்திரன்)**

## நாநா விஷயக் குறிப்புகள்.

பொது நன்மைக்குரிய விஷயங்களில் சிரத்தையில்லாமயிருப்பதைப் பெருமையாக நினைக்கிறார்களே ; அதைவிட அவிவேகம் வேறுண்டா? ஒரு பாலத்தைக் கட்டுவது அருமை ; இடிப்பது எளிது.

---

நேபாள ராஜ்யம் எங்கும் பர்வதமயம். மகாராஜாவினுடைய அரண்மனையின் சில பாகங்கள் கோயில் ரூபமாயும் அநேக வருஷங்களுக்குமுன் கட்டியதாயு மிருக்கின்றன. லக்ஷணமான சித்திரங்கள் செதுக்கப்பட்டுள. அநேக கோயில்கள் தாம்பிரத்தாலும் பித்தளையாலும் கட்டப்பட்டுள. ஏராளமான மணிகளை அங்கங்கே காணலாம். காற்றடிக்கும்போது மணிகள் அசைக்கப்பட்டு ஓசையுண்டாகின்றன. நேபாளத்தில் பௌத்தமதம் அதிகம்.

---

நிகழ்ச்சிக்குத் தகாத உணர்ச்சியும், உணர்ச்சிக்கு மாறான செயலும், செயலைக்குறிக்காத சொல்லும், சொல்லுக்கு ஏற்காத பொருளும் கூடிய காலத்துக்குக் கலியுகம் என்று பெயரிட்டு அழைத்தால், இது கலியுகமே.

---

பசிக்காமல் உண்பதும், உழைக்காமல் சுகிப்பதும், உணர்ச்சியில்லாமல் வாழ்வதும் சிலருடைய தொழில்.

---

மகிழ்ச்சியும் துயரமும் கருமத்தின் பலன்கள். அவை சோம்பலின் பலன்கள் அல்ல.

---

நமது செயல் இன்னும் கனியவில்லை. சொல் தெளியவில்லை ; உணர்ச்சி பதனடையவில்லை ; உள்ளம் விசாலப்படவில்லை ; எல்லாம் உள்ளே ஒரே புகைச்சலா யிருக்கிறது. நிகழ்ச்சிகளை அதாவது நடப்பனவற்றை உள்ளவாறு வகுத்து விரித்துச் சொல்ல சக்தியும் ஆவலும் இன்னும் நாம் படைக்கவில்லை. கலியாண காலத்தில் கலகத்தில் முட்டிக்கொண்டு பிரமாத சண்டைகள் செய்துகொண்டும் கண்ணீர் வடிக்கிறோம். சாகும் தருவாயிலுள்ள வீட்டிலோ அதில் சார்பும் அநுதாபமும் அற்றுக் கடனுக்கு வந்து தொலைந்ததுபோல் இருந்துகொண்டு ஊர் சங்கதிகளை அந்த சமயமென்றுகொண்டு சிரிக்கிறோம். இது என்ன அவிவேக நிலை ?

---

வீண் டம்பங்களையும், அற்பமும் அனுவசியமுமான வழக்கங்களையும் வெறுத்து மிதமான ஜீவனத்துடன் உயர்ந்த எண்ணங்களைக்கொண்டு ஜீவித்துப் பெயர்பெற்ற இந்தியர், இப்போது புது நாகரீகத்தின் பலனாக டம்பமும், துன்மார்க்கங்களும் கற்று வீண் செலவுசெய்து கேடடைவது என்ன கெட்டகாலமோ அறியோம்.

---

ஆவல் எல்லோருக்கும் பொது ; பணத்தாவல் மனிதனை மிருகமாக்கி விடும். கடவுளைச் சரண்புக வேண்டுமென்னும் ஆவல் மனிதனைத் தெய்வமாக்கும் இயல்புடையது.

உள்ளேயிருந்து பெருகும் பலம் திடமான சாஸ்வதமான சக்தி. அந்த சக்தியின் இயற்கையையும், போக்கையும் அறிந்து, அளந்து உபயோகிக்கும் ஆற்றலே மதத்தின் நோக்கமாகும்.

---

அழகனைக் காட்டிலும் சமர்த்தன் உயர்ந்தவன்; சமர்த்தனைவிட நல்லவன் உயர்ந்தவன்; அவனைவிட அநுபவஞானி உயர்ந்தவன். எனவே அநுபவத்தையே பிரதானமாகப் போதிக்கும் பத்திரிகைகளையும் நூல்களையும் வாசிப்பது மேன்மை.

---

நிலைத்த பொருள்கள் என்னென்ன? அன்பும் உண்மையுமாம். இவ்விரண்டும் ஒன்றில் மற்றொன்று இசைந்துசெல்லும் இயல்புடையது. உண்மையைப் போதிக்க, பாசத்தை நிலைக்கச்செய்ய, இருவர் உள்ளத்தையும் ஒன்றுகூட்ட—அன்பு அவசியம்வேண்டும். அன்பு கட்டுக்கடங்கி நிற்கவும் அது ஓங்கவும் யதார்த்த எண்ணம் என்கிற வேலி அதைச் சுற்றிலும் இருந்து காக்கவேண்டும்.

---

ஒரு கூட்டத்தாரின் ஒற்றுமையைக் குலைத்து விட்டால், அக் கூட்டத்தால் அப்போது தோன்றிய செயற்கை பலம் குன்றிவிடும்; அதன் மூலமாக அவர்களின் சொந்த இயற்கைப் பலத்தையும் மறந்து போவார்கள். முன்பு நாம் எவ்வளவோ ஐக்கிய நிலையில் வாழ்ந்தோம். நம் உள்ளத்திலும் வீரகுணம் அப்போது பிரகாஸித்தது. எதிர்ப்படும் சத்துருவை நமது கையின் வலிமை கொண்டு இடித்துத் தள்ளினோம். இப்போதோ அந்த ஒற்றுமைக் கட்டு ஒடிந்து போய்விட, அதனால் உண்டான பலமும் ஒடுங்கிவிட்டது. அத்துடன் நமது இயற்கை வீரமும் மாண்டது. இப்போது நம்மை ஒருவன் எதிர்த்தால் பதிலுக்கு எதிர்க்க முடியாமல் போலீஸ்காரரைக் கூப்பிடவும், கோர்ட்டுக்குப் போகவும் முயலுகிறோம். ஐயோ என்ன ஈன நிலை?

---

ஒவ்வொருவரும் சாகாமலிருக்க ஆசைப்படுகின்றனர். ஆயினும் கிழப்பிராயத்தை விரும்புவோர் யாருமில்லை. எந்நாளும் இளமையோடு சிரஞ்சீவியா யிருந்தால் ஸந்தோஷ முண்டாகும். இந்த ஆசை ஸாத்தியமா? பிறப்பு ஏற்பட்டால் வளர்ச்சி யுண்டு. வளர்ச்சிக்கு முதிர்ச்சி உண்டு. நமது தோட்டத்தில் புடலங்காயைச் சிலநாள் விட்டிருந்தால் காய் முதிர்ந்து போயிற்றென்கிறோம். அதாவது பிஞ்சாயிருந்த நிலைமை கெட்டுவிட்ட தென்கிறோம். முதிர்ச்சிக்கு அருகே வந்தபின்பு அழிவு அதற்கு அருகிலேயே இருக்கும். பிரபஞ்சத்தின் வளர்ச்சிக் கிரமம் இப்படி. இதுவே வஸ்துக்களின் தன்மையுமாம்.

---

உத்ஸாக முள்ளவனை எப்போதும் நம்பலாம். அவன் எத்தனைக் கஷ்டங்கள் குறுக்கிட்டாலும், கடவுள் எக்காலத்திலாவது தன்னை நல்ல நிலைமையில் இருத்துவாரென்ற நம்பிக்கையுடன் அவற்றை யெல்லாம் வீரனைப்போல் எதிர்த்துக்கொண்டு தைரியமாய்த் தன் முயற்சியை விடாமல் நடத்திக்கொண்டு போவான். இவ்வித மின்றி மனம் சோர்ந்து



முகத்தை யொரு விதமாய் வைத்துக் கொண்டு வியஸனப் படுகிறவனையோ ஒருபோதும் நம்பலாகாது. அந்த வியஸனமே அவனைத் தின்றுவிடும். அவனிடம் துர்க்குணங்களெல்லாம் குடிகொண்டிருப்பதால் நல்ல உள்ளம், நல்ல நினைவு, நல்ல பாதை மறைந்து போய்விடுகின்றது. ஸ்வபாவமாயுள்ள உத்ஸாஹ குணம் தொலைந்து போகிறது, உத்ஸாகம் தொலைந்தால் உயிருக்கு ஹானி வந்த மாதிரியே. அழுமூஞ்சிகளோடும் அசடர்களோடும் ஸதா பழிக்கும் மூடர்களோடும் ஒருநாளும் ஸகவாசம் செய்யலாகாது.

---

ஜனங்கள் பாதையில் போகும்பொழுது எச்சிலைத் துப்புவது வழக்கமாயிருக்கிறது. இதனால் பிரஜாரோக்கியத்துக்கு மிகவும் ஹானிகரமென்று டாக்டர்கள் கூறுகின்றனர். எச்சில் எப்போதும் கெட்ட வஸ்துவே. அமெரிக்காவைச் சேர்ந்த பிரதான பட்டணங்களிலும், பிரான்சு, ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி முதலிய ராஜ்யங்களிலும் யாராவது தெருவில் உமிழ்ந்தால் அவர்களுக்கு அபராத சிக்ஷை விதிக்கிறார்கள். இந்நிலையில் காபி ஹோட்டல் எச்சிலின் ஆபாஸத்தை என்னென்று கூற?

---

நாகரீகமில்லாத அநேகர் நல்ல கம்பங்களிலும் சுவரிலும் தரையிலும், மேஜை—நாற்காலி முதலிய ஸாமான்களிலும் வெற்றிலைக்குத் தடவி மீந்த சுண்ணாம்பைத் தேய்த்துச் செல்வர். சளி பிடித்த சிலரும், பொடி போடும் வழக்க முடையோரும் மேற்கூறிய வஸ்துக்களில் தங்களின் அடையாளம் செய்வதுண்டு. மற்றும் சிலர் புகையிலையைப் போட்டுக்கொண்டு கண்ட இடமெல்லாம் காரியுமிழ்வர். மேலே குறிப்பிட்ட மனிதர்கள் தாங்கள் அஸங்கியப்படுத்துகிறோமென்ற ஞானமில்லாமலே காரியத்தைச் செய்து விடுவதால், அவர்களை அவிவேகிகளென்று சொல்லத் தடையில்லை. அதைப் போலவே பிறரை அவதூறு செய்கிறவர்களையும் அவிவேகிகளென்று கூறலாம். அவதூறு செய்வதால் பெருங்கேட்டை விளைக்கிறோமென்ற ஞானம் அவர்களுக்கில்லையன்றோ? ஆகவே இவர்களிடம் அவிவேகம் குடிகொண்டதென்னலாம்.

---

முற்காலத்தில் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்வது ஆரோக்கியகரமான தென்று சொல்லுவார்கள். இப்பொழுது ஸுகோஷ்ணமான ஜலத்தில் ஸ்நானம் செய்வது நல்ல தென்ற எண்ணம் பரவி வருகிறது. முன்னாளில் காலையில் பழைய சாதத்தை எதிர்ப்பார்த்தனர். அது பசியை நன்றாகத் தாங்கு மென்றனர். யாவரும் பிரீதியோடு உண்டனர். இந்நாளிலோ காப்பி—டீ—பலகாரங்களை எதிர்பார்க்கிறார்கள். பழைய சாதம் உடம்புக்கு ஒத்துக்கொள்வதில்லை யென்கின்றனர். காலை வேளையில் வயிற்றில் அதிகமான கனம் விழுந்துவிட்டால் வேலை செய்வதற்கு முடிகிறதில்லை யென்றும், சோம்பல் மேலிடுகிறதென்றும், நித்திராதேவி பிரஸன்னமாகிறாளென்றும், ஆகவே, இலேசான சுலப ஜீரணமுள்ள [illegible]கையான ஆகாரமே காலை வேளைக்கு உத்தமம் என்றும் நாகரீக சுந்தரிகளும் சுந்தரர்களும் சொல்லுகின்றனர். உத்தியோகம், சுமுகமாயுள்ள வியாபாரம் இவைகள் உள்ள வரையிலும், கையில் நாலு காசு ஓட்டமுள்ளவரையிலும் மேற்கண்ட நாகரீக ஆகார பானங்கள் நலமாய்த் தாண்டவமாடக் கூடும்.

வேளை பிசகி நற்காலம் மறைந்து யாவும் நஷ்ட கஷ்டமாகி அன்னப்பிடி வெல்லப்பிடியான நிலைக்கு வந்துவிடுகையில், பழய சாதத்தின் உறவு அதிகமாகி அதுவேனும் கிட்டுமா வென்ற எதிர்பார்ப்பில் தவிர்க்க நேர்ந்து விடுகிறது. அப்பொழுது இந்த நாகரீக வசனங்களும் வருவதில்லை. அஜீர்ணம், உடம்புக்கு ஒத்துக்கொள்ளாமை, வயிற்றில் கனமான ஆகாரம் என்ற வார்த்தைகள் முதலியனவும் மறைந்து போகின்றன. காபி—பலகாரங்கள் புசித்தபடி நின்றோர் கால பேதத்தால் யாவும் போய் பூர்வீகர் உண்டு வந்த பழய நீராகாரத்தில் கைவைத்துக்கொள்வதையும் பல இடங்களில் கண்டிருக்கிறோ மன்றோ? எனவே, எந்தப் பேச்சுகளும், செயல்களும் நிலைக்கு ஏற்றபடியாகவே எதிர்ப்பட்டுக் கொள்ளும்.

---

கோபம், சாந்தம் என்பன இரண்டு குதிரைகள். கோபமென்னும் குதிரைமேல் ஏறிக்கொண்டால் குதிரை போன வழிதான் போகவேண்டும். கடிவாளமாகிய அறிவு பிரயோஜனப்படாது. அது எவ்விதமும் அறுந்து போகும். கோபக்காரனுக்குப் புத்திசூன்யமே அதிகம். நீடூரென்று கோபக்குதிரை எந்தப் பாவப் படுகுழியிலேனும் தள்ளி மிதித்துவிடும். சாந்தமெனும் அசுவமோ அப்படி யல்ல, நமக்கு அடங்கியிருக்கும். அதை அறிவென்னும் கடிவாளத்தால் இழுத்துப் பிடித்து நடத்தலாம். ஆபத்து நேராது. குதிரை சவாரி செய்வோர் எதை விரும்புவர்? ஸாந்த குணபாவமுள்ள அசுவத்தையே அபேக்ஷிப்பர்.

---

**சரீரபலம் :—**

முற்காலத்தைவிட இக்காலம் நாகரீகம் மலிந்ததுதான். ஆயினும் முற்காலத்து மனிதர்களைப்போல் இக்காலத்து மனிதர்கள் பலசாலிகளல்ல. ஒரு பிராமணன் அரையணா தக்ஷிணையை யபேக்ஷித்து 10-மைல் தூரம் அலுப்பு சலிப்பின்றி நடந்துபோவான். இக்காலத்தில் அவன் குமாரன் அரைமைல் போகவேண்டுமாயின், ஜட்காவண்டியும், டிராம்வண்டியும் தேடுகிறான். ஆகவே, காலில் வலுவில்லாத முடவனை ஒப்பாகிறான். இது மட்டுமல்ல, சிலருக்கு இருட்டுக்காலத்திற்கூட தூரவிருக்கும் மனிதனை இன்னானென்று அறியும் சக்தி இருக்கின்றது. அவர்களுடைய கண்களுக்கு அத்தனை சூக்ஷ்மமான பார்வையுண்டு. இப்போது இங்கிலீஷ் பயிலும் இளைஞர்கள் அதி சீக்கிரத்தில் குருடர்களாகி மூக்குக்கண்ணாடியைத் தரிக்கின்றனர். இவர்களுக்குக் கண்ணொளி குறைந்துபோகிறது. இவ்வளவுதானோ? இன்னும் உண்டு. இக்காலத்துப் பையன்களுக்கு ஜீரணசக்தி கிடையாது. சரீரத்தில் [illegible]க்கடி நோய்களுண்டாகின்றன. இப்படி நாளடைவில் நமது [illegible] கண்மழுங்கி, கால் முடமாகி, அஜீர்ணம் அதிகரித்து பல நோய்கட்[illegible] இரு[illegible]மாகி தேகபலம் குன்றி இளைத்துப்போவது தேசத்தின் க்ஷேமத்துக்[illegible] பெருங்குறைவன்றோ? இதற்குரிய காரணத்தை யறிந்து நீக்குவது நன்று.

169818

ஆநந்த குண போதினி ஆபீஸ்

# மாணிக்கவல்லி

அல்லது

## ஓர் மாதின் மர்மம்

இது நவரசங்கள் பொருந்திய ஓர் செந்தமிழ் நாவல். இந்த நாவல் வாசிப்பவர்களுக்கு அருவெறுப்பையே உண்டாக்காத ஓர் நவீன நாவல். இதை எத்தனை தடவை படித்தாலும் திகட்டவே திகட்டாது. இது சிங்கார ரசமாயும், படிப்பவர் மனதை மிக்க உற்சாகத்தைக் கொடுக்கும் தன்மையுள்ளது. இந்த நாவலில் கதாநாயகியாக வரும் மாணிக்கவல்லி என்னும் ஓர் அழகிய பெண்ணானவள் ஓர் நாடகசாலையில் சேர்ந்து பல நாடக விஷயங்களில், பிரக்யாதி பெற்றவளாயும், ஆடல், பாடல் முதலிய விஷயத்தில் நற்கியாதி பெற்றவளாயும், இம்மாதின் ஆடல், பாடல்களைக் கேட்க வரும் பிரபுக்களுக்கு மிக்க ஆநந்தத்தைத் தருவதும், அவளுடைய சௌந்தரியமும் நடைநொடி பாவனைக்கும் மெச்சி, அதனால், நாடகம் பார்க்கவரும் பிரபுக்கள், ஒருவர்க் கொருவர் தெரியாமல் இம்மாணிக்கவல்லியின்மீது காதல் கொள்வதும், அவளால் வெறுத்துத் தள்ளப்பட்ட ஒருவன் செய்யும் சூதும் கதாநாயகி மாணிக்கவல்லியின் விசனமும், அவளைக்காதலிக்கும் புருஷர்களின் தந்திரமும் இக்கதையைப் படிக்கப் படிக்க இனிமையைத் தரும். இக்கதையை வாசிக்கும் சகோதர சகோதரிகளுக்கும், ஓர் நாடகத்தையே நேரில் பார்த்ததைப்போல் தெரியவரும். விலை ரூபா 1 0 0

ஆநந்த குணபோதினி சந்தாதாரருக்கு விலை ரூ. 0—12—0.

# அமிர்தசாகரன்

அல்லது

## கோடிஸ்வரனின் குமாரன்

இது ஓர் இனிய தமிழ்க்கதை. இதில் மோகவதி மோசம் போனதும், மதிவர்மனின் கொலையும், ஆண்ரூபம் பெண்ரூபமான அதிசயமும், அமிர்தசாகரனுக்கு நேர்ந்த ஆபத்துகளும், பயங்கரமான பல விஷயங்களும் சித்திரப் படங்களுடன் அதிவிநோதமாய் எழுதப்பட்டுள்ளன. எக்குடும்பத்திலும் ஆண் பெண் இருபாலராலும் நன்குமதித்து ஆனந்திக்கத்தக்கது. கற்றோரும் கண்டுகளிக்கும் விநோதம் பொருந்தியது. விலை ரூபா 1 4 0

ஆநந்த குணபோதினி சந்தாதாரருக்கு விலை ரூ. 1—0—0.

# திருக்கழுக்குன்றத்துக் கொலை

ஓர் இனிய துப்பறியும் தமிழ் நாவல். இது நவரசங்களும் நிரம்பிய புதிய நாவல். இஃது புதிய வகையில் எழுதப்பட்டிருக்கின்றது. படிக்கப் படிக்க இனிக்கும் நாவல். உடனே எழுதிப் பெற்றுக்கொள்ளவும். சொற்ப காப்பிகளே கைவசம் உள்ளன. விலை ரூபா 1 8 0

ஆநந்த குணபோதினி சந்தாதாரருக்கு விலை ரூ. 1—2—0.

302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

# அங்கயற்கண்ணி

அல்லது

## அன்புள்ள மங்கை

இது ஓர் துப்பறியும் அபூர்வமான செந்தமிழ் நாவல். இந்த நாவலை ஆரம்பமுதல் முடிவுவரையில் எவ்விதவேலை இருந்தபோதிலும் படிக்கத் துவக்கியவர்கள் முடிக்கிறவரையில், புஸ்தகத்தை கீழே விடமாட்டார்களென்று திடமாகச் சொல்லலாம். இந்த நாவலில் கதாநாயகனாக வரும், ஒருவன் உயர்குலத்தில் பிறந்தவனும், அதிக செல்வவந்தனும், படிப்பில் மிக்க தேர்ச்சி உள்ளவனும், பல இடங்களில் மேன்மக்கள் சாவகாசமுள்ளவனும், நன்னடக்கை உள்ள ஒருவன் இக்கதையில் கதாநாயகியாய்வரும் அழகில் சிறந்த அங்கயற்கண்ணியின்மீது ஆவல் கொள்வதும், அவளையே விவாகம் புரியவேண்டுமென்ற எண்ணத்தினால் அவன் செய்யும் கொடூரமான கொலையும், பயங்கரமான விஷயங்களும், அதை வேறு ஒருவன்மீது பழிசுமத்துவதும், சமயத்துக்கு ஏற்றவாறு அவனுடைய திறமையும் படிப்பவர்களுக்கு ஊக்கத்தைத்தரும். கதாநாயகியாகிய அங்கயற்கண்ணியின் கற்பை வாசிக்க, வாசிக்க நமது சகோதரர், சகோதரிகளுக்கு மிக்க ஆச்சரியத்தையும், நன்னடக்கையையும் உண்டுபண்ணும். இந்த நாவலின் சிறப்பை அதிகமாய் எழுதுவதை சுருக்கி காட்டி இருக்கிறோம். (இது 350 பக்கமடங்கியுள்ளது.) சுத்தமான பெரு அச்சில் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. விலை ரூபா 1 12 0

ஆனந்த குணபோதினி சந்தாதாரருக்கு விலை ரூ. 1—6—0.

ஏமனுக்கு நாமம்போடுவான்! பூமனுக்குச் சோமன் சூடுவான்!

# எமகாதகன்

அல்லது

## மாயாசித்தன்

இதுவும் ஒரு நாவலா என்று எவரும் வியப்படையும்படியான பதினொரு அத்தியாயத்தை யுடையது. அதாவது பழியோரிடம், காமத்தின் கஷ்டம், சில்லரைச்சேட்டை, எமகாதகன் என்ற பட்டம், இரட்டத்தலைக் குதிரை, மனம்போல மாங்கல்யம், கிழவன் குமரனானான், எதிர்ப்பாராத அதிர்ஷ்டம், கல்கிணற்றுக்கேற்ற இரும்புத் தோண்டி, விடாகண்டனை கொடாகண்டன் ஏமாற்றினான், வியாபாரக்கூத்து, தலைதப்பினது தம்பிரான் புண்ணியம், மாயாசித்தன் முதலிய விசேட பொருட்சுவை, வாக்கியச் சுவை ததும்பியதும், எமகாதகன் செய்யும் தந்திரங்களும், மந்திரோபாயங்களும், கபடாகச் செல்வவந்தர்களை ஏய்த்துப் பொருள்பறித்து ஏழைகளுக்குப் பரோபகாரம் புரிவதும், தான்செய்யும் ஒவ்வொரு சூதான கிருத்தியங்களைக் கண்டு பலரும் திகைப்புறுவதும், போலீஸ் சப்இனிஸ்பெக்டர் முதலானவர்களும் பிரம்மிப்படைவதும், தடித்தயெழுத்தில் தன் பெயரைப்





பதியாமையால் உலகம் தன்னைச் சீர்தூக்கவில்லை யெனும் பாவ[illegible] எமனுக்கு நமன் இருப்பாரென்பதைச் சீர்திருத்திக்காட்டி, அறிவை[illegible] நன்மதியையூட்டி, துர்எண்ணத்தை யோட்டி, கல்விப் பயனைத் [illegible] கியாதியில் தாண்டவமாடும் கம்பீரமான நாவல்! இதன் விலை அ[illegible]

ஆனந்த குணபோதினி சந்தாதாரருக்கு விலை அணா 6.

# அமிர்தகுமாரி

அல்லது

## செஞ்சிப் புதையல்

துப்பறியும் உதய குமாரரின் வீர, தீர பிரதாபங்களையுடைய ஆச்சரியமான துப்பறியும் கதை இதுவேயாகும். பல ரகசியங்களை யுடையது. படிக்கப் படிக்க இனிக்கும்தேன் இதுதான். படித்து முடிக்கும் வரையில் புத்தகத்தைக் கீழேவைக்க மனம்வராது. விலை ரூபா 1 4 0

ஆனந்த குணபோதினி சந்தாதாரருக்கு விலை ரூ. 1—0—0.

# அம்பலவாணன்

அல்லது

## கற்பகவனத்தில் நடந்த கடுங்கொலை

இப்பெயர்கொண்ட செந்தமிழ்க் கதை அழகான தமிழ் நடையில், படிப்பவர் மனம் இன்பமடையும்படி எழுதப்பட்டிருக்கிறது. படித்து முடிக்கும்வரையில் புத்தகத்தைக் கீழே வைக்க மனம் வராது. படிக்கப் படிக்க இனிக்கும். வற்றாத இன்பம். விலை ரூபா 1 0 0

ஆனந்த குணபோதினி சந்தாதாரருக்கு விலை ரூ. 0—12—0.

# மாமிகளின் துயரம்

அல்லது

## மருமக்களின் கொண்டாட்டம்

இஃதோர் அரிய தமிழ் புத்தகம். தற்காலத்தில் கல்வி கேள்வி பெற்று நாகரீகமுள்ள மருமக்கள் மாமிகளால் படுத்தப்படும் பாட்டைச் சகியாமல் அவர்கள் நடக்கும் நடவடிக்கைகளும் அதனால் மாமிகள் துக்கமடைந்து தங்கள் பந்துமித்திரர்களுக்குத் தங்கள் துயரத்தைத் தெரிவிக்கும் விதமும் அதிக நாவல்களெழுதுவதில் பிரக்யாதிபெற்ற அ. ரா. மாதவராய முதலியாரவர்களால் எழுதப்பட்டது. பிரதி ஸ்திரீகளும் வாசிக்கத்தகுந்தது. விலை அணா 2.

ஆநந்த குணபோதினி சந்தாதாரருக்கு இனாம்.

கரும்பு தின்ன கூலி கேட்பவர் உலகிலுண்டா? இல்லை.

# காதலற்ற கல்யாணம்

*அல்லது*

## பெண் வீட்டாரைக் கொள்ளை யடித்தல்

*அன்பென்பது விவாகத்திற்கு ஆட பீட மென்றும், விவாகமானது அதை நிலைநிறுத்தும் ஓர் சடங்கு என்றும் கூறப்படுவதையும், கல்விகற்றுப் பரீக்ஷையில்தேறி பட்டம்பெற்று, வரதக்ஷணைக்கு எதிர் பார்ப்பதையும், இதனால் பெண் வீட்டார் மிக்க ஏழ்மைத்தனத்தை யடைந்துவிடுவதையும், பால்ய விவாகத்தினால் உண்டாகும் கேட்டையும், கிட்டிபோட்டு வரதக்ஷணை வாங்குவதால் ஸ்திரீ புருஷர்களுக்கு அன்பு ஏற்படாதென்பதனையும் இதைக் காதலற்ற கலியாணமென்றும், வரதக்ஷணையை எதிர்பார்க்கும் பிள்ளை வீட்டார் கொண்டுள்ள மூடமதியை அடியோடு ஒழிக்கும் வகையைத் தெள்ளத்தெளிய எழுதியிருக்கின்றது. மேலும், "பெற்றபொருடான்வருந்திப் பெருமையுறு மூத்தமமாம், பெற்றபொருளப்பனுழைப் பெருமையுறு மத்திமமாம், பெற்றபொருளுடன்பிறப்பிற் பெருமையிலாவதமம், பெற்றபொருள் பெண்டுதவப் பேசுமத மாதமமாம்" என்பதை வாசித்துள்ளோர் வரதக்ஷணையைக் காட்டிலும், நரதக்ஷணை (கன்னிகாதானம்) மேலென்பதாகக் கைக்கொள்வர். இப்புத்தகத்தை வாசிப்போர்க்குப் பேரன்பும், பெருமையும், விடாநகைப்பும் உண்டாகும்.*

இதன் விலை அணா 2.

ஆநந்த குணபோதினி சந்தாதாரருக்கு இனாம்.

சதா களிப்பு! சதா சிரிப்பு!!
சதா பரிகாசம்! சதா சந்தோஷம்!!
விலை குறைந்த நாவல்! நிலைசுறந்த ஆவல்!!

கோழிமுட்டையில் ஓர் ஆண் குழந்தை!

குதூகலமாகிய நூதன விந்தை!!

# அண்டப்புளுகன்

*அல்லது*

# ஆகாயப்புளுகன்

*நாவல் உலகில் ஆவல் ததும்பி பாவலர், காவலர், யாவரும் களிப்படையும் உவர்நீர் கடலை உடைதரித்த உத்தம நிலமடந்தை பெற்று வளர்த்த வழுக்கைத் தலையர்களும், பழுத்த வாலிபர்களும், கிழப் பாட்டிகளும், நகைப் பூட்டிகளும் பார்க்கப் பார்க்கப் பகட்டும், படிக்கப் படிக்கத் திகட்டும், பரமானந்தத்தைப் புகட்டும் அண்டப்புளுகன் அல்லது ஆகாயப்புளுகன் ஐந்துவித வருமாறி வந்து ஆங்காங்கு செய்யும் பட்டம் பகல் வேஷங்களையும், படாடோப நேசங்களையும் பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய சூத்திர*





*மாதர்களின் வாக்கு வாதமும், பொய்யை நிரூபிக்கும் சூத்திரப் பெண்ணின் சமர்த்தும், இடையிடையே வரும் சுருக்குப்பையின், கதை ஓரெழுத்தாலான ஈயின் கதை, யானையை முறத்தால் மறைக்கும் ஆனந்தாயின் கதை, "நாலுகாலா காதிலே சூத்தா காஞ்சீபுரத்திற்கு வழி எப்படி? ஆறுகாலா முதுகிலே சூத்தா ஆலங்காட்டிற்கு அப்புறம் போ" என்ற விடிகதை, மாங்கொட்டை கடித்து மனமயர்ந்த மகிமைகள்ளி கதை, இன்னும் பலவும் வாசிக்கச் சிரிப்பு! எட்டணா விலையில் யென்றைக்கும் சிரிப்பை உண்டாக்கும் நாவல்! அதிவிநோத விகடகதா புத்தகம்!!* இதன் விலை அணா 8.

ஆநந்த குணபோதினி சந்தாதாரருக்கு விலை அணா 6.

கண்ணைக்கட்டி காலங் கழிக்கும்

# மிஸ்டர் திண்ணைத் தூங்கி

# தடிராமன்

*மிஸ்டர் திண்ணைத் தூங்கி தடிராமன் கதையைப் படிக்கக் கேட்போர் அன்றே கல்வியில்லா பலரும் கல்வி கற்க முயலுவார்கள். காரணம், நமது மிஸ்டர் தடிராமன் தன் தாய் தந்தையரிடமும், உபாத்தியாயரிடமும், தன் மாமன் மாமியிடமும், தன் ஊராரிடமும், ஜமீன்தாரிடமும், குஸ்தி கோதா பந்தயத்திலும், தாசி சதுர்க் கச்சேரியிலும், தன் அபிமான ஸ்திரீயிடம் செய்யும் அகடவிகட விநோத வேடிக்கைகளும், எலக்ட்ரிக் பங்காவைக் கண்டு திகைப்பதும், ஆர்மோனியத்தைப் பார்த்து பயப்படுவதும், தோற்கருவியைப் பார்த்து மனம் வியர்ப்பதும், முன்னம் பாலத்திலிருந்து வீழ்ந்து ஆற்றில் மிதந்து மூழ்குவதும், பேய்போல திரிவதும், சோதிடம் சொல்வதும் விடாநகைப்பை உண்டாக்கும். பின்னர், இங்கிலீஷ் கற்றுகொள்ள 'ஆங்கில ஆசான் புத்தகம் வாங்கிப் படித்துத் தேர்ச்சி யடைவதும் கலியாணம் செய்துக்கொள்ளுவதும் காண்பார் அனைவருக்கும் நவீன நாகரீகமுள்ள இக்காலத்திலும் இத்தகைய மனிதர் உண்டோ? என்பதை எவரும் எளிதில் உணரும் வண்ணம் எளிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது. கொஞ்சம் காப்பிகளே இருக்கிறது முந்துங்கள்.* இதன் விலை அணா 6.

ஆநந்த குணபோதினி சந்தாதாரருக்கு விலை அணா 4.

## தங்கசாலைத் தெரு

# ஒரு தாசியின் இரகசியம்

*சகோதர சகோதரிகளே! தங்கசாலைத் தெரு ஒரு தாசியின் இரகசியம் என்னும் இப்புத்தகத்தைப் படியாதவர்கள் உண்மையில் அதிர்ஷ்டமில்லாதவர்களென்றே சொல்லவேண்டும். அதிர்ஷ்டமுள்ளவர்கள் இதை வாங்கி வாசிப்பார்கள். சில காரணத்தை முன்னிட்டு இதை வெளியிடலானோம். ஆச்சரியமான விஷயங்கள், அதிசயமான சம்பவங்கள், பயங்கரமான சூழ்ச்சிகள்—ஆம். இதைப்போன்ற ஒரு விஷயத்தை நீங்கள் இதுவரையில் கண்டும், கேட்டும், படித்துமிருக்க மாட்டீர்கள். ஒரு முறை*

படித்தாலும் மறுமுறை படிப்பீர்கள். ஐந்து முறை படித்தாலும் ஆவல் அடங்காது. நீங்கள் கொடுப்பது ஓர் அணுதான். இன்னும் சந்தேகமா? மயங்காமல் ஒரு புத்தகத்தை வாங்கிப் பாருங்கள். உங்கள் மனம் சந்தோஷமடையும்.

ஆநந்த குணபோதினி சந்தாதாரருக்கு இனாம்.

பெண்களின் நிலைமை! (கணவன்) கண்களின் தலைமை!!

சாதனையான கதை! போதனையான கதை!!

# கணவனின் கடமை

அல்லது

## பெண்களின் நிலைமை

இப்பெயர் புனைந்த நாவல் நல்ல ஆவலைத் தருமென்பதற் கையமில்லை. ஏன்? சில தனவந்தர் வீட்டுப் பிள்ளைகள் மணமுடித்த மனையாட்டியை தங்கள் வீட்டு அடிமைப் பெண்களைப்போல் பாவித்து நடத்துவதும், தன் காதலியை வேதனைப்பட வீட்டில் விட்டுவிட்டு, தாசிகள் நேயர்களாகத் திரிவதும், குடுமி வைத்துக்கொள்ளுவதா? கிராப் செய்துக்கொள்ளுவதா? தனிமையாக மனைவியோடு வசிக்கவா; எப்படி நடந்துகொண்டால் தங்களை நாகரீகமுடையவர்க ளென்று காண்போர் சொல்லுவார்கள்? என்பதில் அதிகக் கருத்துடையவர்களா யிருக்கும் இத்தகைய மூடமயக்கத்தில் தயங்கும் புருஷர்களின் மனைவிகளோ, எப்படிப் புடவையைக் கட்டிக்கொண்டால் காண்போர் மயங்குவர்? எவ்விதம் தலையை வாரிவாகு எடுத்துமுடிவது? இரவிக்கை ஜாக்கெட் இவைகளில் எதை எவ்வாறு தைத்து எப்படி அணிந்துகொள்ளலாம்? என்பதில் கருத்தைச் செலுத்திக் காலங்கழிப்பதால் வரும் கெடுதியும், குடிப்பதிலும், சூதாட்டத்திலும் வீண்டம்பத்திலும் போதுபோக்குவதால்வருந் துன்பமும் பாரதம், இராமாயணம், ஜமதக்கினி முனிவரின் பாரியாள் ரேணுகையின் தாத்பரியங்களையும் உவமானங் காட்டி வரைந்துள்ள இந்நூலாசிரியரின் திறமையை வாழ்த்தாத நாவென்ன நாவென்று சொல்வதானால், இதைப் பலரும் அறியும்படி பிரசுரித்த பிரசுரகர்த்தரின் பரோபகாரத்திற்கு நாமென்ன கைம்மாறு செய்யப்பெறுவோம். இதுவே இதன் பெருமையைக் குறிக்கும். இதன் விலை அணு 4.

ஆநந்த குணபோதினி சந்தாதாரருக்கு விலை அணு 3.

## நாகபூஷணம்.

### கற்பை விளக்கும் அற்புத நாவல்.

இந்த நாவல் இரத்தினம். பாரததேயத்து மாதர்கள் தங்கள் கற்பையும் புருஷரையும் காப்பாற்றுவதினிமித்தம் எவ்வித ஆபத்து வந்தாலும் கருதாமல் உண்மையை வெளிப்படுத்துவதில் மிக்க ஊக்கமுடையவர்கள் என்பதை விளக்க இந்த நாவல் பல அத்தாட்சிகளோடு விளங்குகிறது. இக்கதா





நாயகியான நாகபூஷணம் தன் புருஷனுக்கு வந்த ஆபத்தை தடுக்க தானே வக்கீல் வேடம் பூண்டு நீதிமன்றம் வியப்புறும்படி வாதித்து ஆபத்தில் சிக்கிய தன் புருஷனைக் காப்பாற்றுவதோடு உண்மைக் குற்றவாளிகளையும் வெளிப்படுத்துகிறாள். கதை முற்றிலும் வெகு ஸ்வாரஸ்யமாயிருக்கும். கோர்ட்டு விவாதம் வெகு ருசிகரமாயும், சாமர்த்தியமாயுமிருக்கும்.

விலை அணு 12

ஆநந்த குணபோதினி சந்தாதாரருக்கு விலை அணு. 10.

# சரோஜனி

தமிழ் உலகமே பிரமித்து வியப்படையும் ஓர் அதியற்புத சிங்காரமான காதல் ததும்பும் துப்பறியும் தமிழ் நாவல்.

அழகே ஓர் உருவமாய் அமைந்த பத்துச் சித்திரப் படங்கள் அடங்கியது.

"பகற் கொள்ளை! பகற் கொள்ளை!! கௌரவமான வியாபாரி கொள்ளைக்காரனாக மாறினான்!!!" என்று இக்கதையின் முதல் அத்தியாயத்தில் அலங்காரமாக ஆரம்பிக்கப்பட்ட இந்நாவலை கையிலெடுத்து வாசிக்க ஆரம்பித்து விட்டால் வேறெவ்விதமான அவசர வேலைக ளிருப்பினும் அவைகளை மறந்து இந்த நாவலிற் செறிந்துள்ள சொற்சுவை பொருட்சுவைகளால் வசியமாக்கப்பட்டு வாசித்து முடிவெய்திய பின்னரே அவைகளைக் கவனிக்கும்படி செய்யுமென்பது நிச்சயம். அதிகமாய்ப் புகழாமல் ஒரே வார்த்தையில் சொல்லவேண்டுமென்றால், இன்னமுது, கனி, பாகு, கற்கண்டு, சீனி, தேன் முதலியவைகளைவிட அதிகமாக உருசிப்பது இந்த நாவல் தான்.

புஸ்தகம் அச்சிட்டு வெளிவந்த பத்து நாட்களுக்கு சுமார் 1500 பிரதிகள் செலவாய்விட்டன வென்பது தமிழ் நாட்டில் இதுவரையிலும் கேட்டறியாத ஆச்சரிய மல்லவா?

இருபத்திரண்டு அழகிய அத்தியாயங்களைக் கொண்ட இவ்வற்புத நாவலின் ஒவ்வொரு அத்தியாயமும் மெஸ்மரிசம்போல் மனதைக் கவருமென்பது நிச்சயம்.

தமிழ் நாட்டிற் இதைப்போன்ற அபூர்வமான நாவல் வெளி வந்ததில்லையென்று ஆயிரக் கணக்கான ஜனங்கள் சொல்லுகின்றனர்.

### இதன் விலை ரூபா இரண்டே.

சுத்தமான கடிதம். நேர்த்தியான அச்சு, 400 பக்கங்கள். இப்பொழுது கைவசம் இருப்பவை கொஞ்சம் பிரதிகளே! ஆகையால் மறந்துவிடுமுன் இன்றே ஒன்று வரவழைத்துப் படித்து அதனிலுள்ள இன்பத்தைக் கண்டு களி கூறுங்கள்!

சரோஜனியின் இருபத்திரண்டு அத்தியாயங்களுக்கு இடப்பட்டிருக்கும் பெயரின் அழகை கீழே கவனியுங்கள்.

1. தட்டாரச் சிவப்பிரகாசம்; எண்பதினாயிர ரூபாக் கொள்ளை, 2. திவான்பகதூர் மதனகோபாலர்—நீல நிற இரகசியக் கடிதம், 3. இந்

திர ஜாலம்—இரகசியக் கொலை, 4. ரோஜா மலர்! கரியப்பட்டாடை!!! 5. காதர் கடிதங்கள்—தண்ணீர்த் தொட்டி. 6. கமிஷனர் விசாரணை—இன்ஸ்பெக்டர் கஜபதிராவ், 7. கனகாம்பரம்! நீலாம்பரம்!! 8. இருபதாம் நூற்றாண்டின் இணையிலா விநோதம்! 9. புகைப்படம்—கைரேகைகள், 10. பதினைன்காந் தேதி—சரசகாம சுந்தரி, 11. சுண்ணபிரான்—சரோஜனி, 12. மாஜிஸ்ரேட் விசாரணை—அநாமதேயக் கடிதம், 13. திருவண்ணமலை—சந்நதித் தெரு, 14. வஞ்சகவலை—வலியவந்த ஆபத்து, 15. மூன்று கொலையாளிகள்—நல்ல பாம்பு!! 16. ஆச்சர்ய மர்மங்கள்—இன்ஸ்பெக்டரின் சந்தேகம், 17. தபால் ஆபீஸ்—போலீஸ் ஸ்டேஷன், 18. முப்பட்டை தீர்த்த கத்தி! கொலை செய்தவர் யார்? 19. திருக்கழுக்குன்றம்—அதிசயச் சந்திப்பு, 20. கள்ளக் காதலர்களின் பால்ய லீலை! 21. விவாக மஹோற்சவம்—புரோபசர் நாயகம், 22. காதலர்களின் சம்பாஷணை—இன்ப முடிவு.

ஆநந்த குணபோதினி சந்தாதாரருக்கு விலை ரூ. 1—12—0.

# திருக்குறள் மூலமும்

[பரிமேலழகருரையும், தெளிபொருள் விளக்கப் பதவுரையும்,
விசேஷக் குறிப்புகளுடன் விலை ரூபாய் **4**.]

ஆநந்த குணபோதினி சந்தாதாரருக்கு விலை ரூ. 3—8—0.

தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனர் திருவாய்மலர்ந்தருளிய திருக்குறளென்னும் இந்நூலானது ௧௩௩0-குறள் வெண்பாக்களாற் செய்யப்பட்டு, பாஷையின் உயர்வை விளக்குவதாயும், சொற்பொதிவு பொருட்பொலிவு முதலிய பாகுபாடுடையதாயும், இராஜதந்திர முதலிய பலவகைப்பட்ட சிறந்த நீதிநெறியை ஒருசேர நன்குணர்த்தத்தக்கதாயும், எல்லாச் சமையிகளானு மினி தேற்றுக்கொள்ளப்பட்டதாயு முள்ளது. மேலும் தமிழ்ப் பாஷையில் விருத்தியடைய விரும்புவோர்க்கும், முத்திநெறி பெற்றுய்ய விரும்புவோர்க்கும் ஏற்ற நூலாகவும், இதன் பெருமை குன்றிமேலேற்றிய விளக்குபோல் விளங்குகின்றது.

இந்நூல் வேதசாரமா யிருத்தலால், ஆதியில் உரையாசிரியர்களாகிய நச்சினார்க்கினியார் இதற் குரையியற்றியரென்றும், அவற்றுள் பரிமேலழகர் இயற்றிய உரை சொற்பொலிவும் பொருணயமும் நிறைந்து விளங்கியதால் சான்றோர் இவ்வுரையே மேலாகக் கொண்டனரென்றும் வழங்கி வருகின்றது; ஆதலால் தமிழ் வேதமாகிய திருக்குறளும் இதற்குப் பரிமேலழகர் செய்த உரையும் கற்றோர் யாவராலும் விரும்பத்தக்கனவே. இவ்வுரை அக்காலத்திலுள்ளோருடைய கல்வி தேர்ச்சிக் கேற்பச் செய்யப்பட்டதாதலால் கடின சந்திகளால் செறிந்து விளங்குகின்றது. தற்கால நிலைமையைக் கருதிப் பண்டித பாமரர் யாவருக்கும் எளிதில் பயன்படும்பொருட்டுக் கடின சந்திகளை ஒரு வாறு விலக்கி, அததனுடன் எளிய நடையில் செய்யப்பட்ட தெளிபொருள் விளக்கப் பதவுரையும் சேர்த்து ஒரே புத்தகமா யச்சிட்டணம்.

மை
ரித்து பெ
ஞானோபம்தசய ... த வடமொழு
றிச் சாத்திரங்களில் வல்லவரிய... போதச் செல்வ

**S. G.** ஞதி முக்தனுகிய முதல்வன் அநாதியில் திருவாய்மலர்ந்தருளிய ...ளின் சாரமாக விளங்கும் ஞான சாத்திரங்களின் அருங்கருத்தி ஆயிரத்திரமாக்கிச் சிவஞானத் தபோதனர்களாகிய சமய குரவர்களை ...றி, அத்துவித மெய்கண்டார் முதலிய சந்தான குரவர்களையும் வாய்நிரம்பத் துதித்த திருவருட்பெருஞ் செல்வருமாகிய தாயுமானசுவாமிகள் தமது சுவாநுபூதியிற் பிறந்த அற்புத சின்மய மதுரமான செம்பாடற்றிரட்டினுக்கு அநேகர் பதவுரையும் பொழிப்புரையும் எழுதியிருக்கின்றனர். அவை தாயுமானுர் உண்மை கருத்தைத் தெரிவிப்பனவல்ல. தாயுமான சுவாமிகள் வேதாந்த சித்தாந்த சமரசபாவ முடையவராதலால் அவருடைய உண்மைக் கருத்து ஈதென்று ஒவ்வொரு பாடல்களிலும் விளங்கும்படி, மதுரைத் தமிழ்ச்சங்கத்து மகாவித்வான் சித்தாந்த சரபம் அஷ்டாவதானம் பூவை. கலியாணசுந்தரமுதலியாரால் பதவுரையும், விசேட வுரையும், பிரமாணங்களும், உபநிடத கருத்துக்களும் எடுத்துக்காட்டி ஒவ்வொரு பாடலுக்கும் இன்றியமையாத பெரியோர்களுடைய ஞானசாத்திரங்களி லிருந்து மேற்கோட்பாக்கள் உதகரிக்கப் பட்டிருக்கின்றன.

இதுவரையில் தாயுமானுருடைய பாடலுரையைப் படித்த அறிஞர் இந்த மெய்கண்ட விருத்தியுரையையும் படிப்பார்களானல் மற்றவுரைகளுக்கும் இவ்வுரைக்கும் உள்ள தாரதம்மியம் இன்னதென விளங்கும்.

# செந்தமிழ் வானவர் திவ்ய சரித்திரம்

விலை அணு **12**.

ஆநந்த குணபோதினி சந்தாதாரருக்கு விலை அணு 10.

இதில் ஔவைப் பிராட்டியார், திருவள்ளுவ நாயனர், பட்டினத்தார் கபிலதேவர், குமாரதேவர், குமரகுருபர சுவாமிகள், சிவப்பிரகாசசுவாமி முதலியவர்களின் அற்புத சரித்திரங்க ளிருப்பதுடன் அவரவர்களின் தனிப்பாடல்களும் அடங்கியுள்ளன. இதை வாசிப்பதனல் அவரவர்களுக்கு உண்டான பக்தியும், கவிசாமர்த்தியமும் மிகு வெளிப்படையாய் விளங்கும்.

302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

b

டின,

திருவாய்

ரும திருமுறை ... ஆகிய கோயி

மாலை, திருக்கு ... வை, திருவிடைமருதூர்

கோவை, திருவே ... பழமையார் திருவந்தாதி, திருவொற்றி

யொருபஃது என்பனவற்றிற்கும், கோயிற்றிருவகவல், திருவே

திருவிசைப்பா, பொது, முதல்வன் முறையீடு, அருட்புலம்பல், இ

திரங்கல், நெஞ்சொடு புலம்பல், பூரணமாலை, நெஞ்சொடு மகிழ்தல் என்னு

மிவைகளடங்கிய திருப்பாடற்றிரட்டு, உடற்கூற்றுவண்ணம் என்பனவற்றிற்கு அனேகர் பதவுரையும் பொழிப்புரையும் சிற்சிலவற்றிற்கு எழுதியிருக்கின்றனர். அவைபோல் அல்லாது சென்னை பச்சையப்பன் கல்விச்சாலைத் தமிழ்ப்பண்டிதர் ம-m-m-ஸ்ரீ, ஆ. சிங்காரவேலு முதலியார் அவர்களால் பதவுரையும், விசேடம், உதாரணம் இன்னும் இவைகளமைந்த விருத்தியுரையையும் எடுத்துக்காட்டி பெரியோர்களுடைய ஞானசாத்திரங்களிலிருந்து மேற்கோட்பாக்கள் உதகரிக்கப்பட்டிருக்கின்றன.

பிரபந்தம் முழுதிற்கும் இதற்குமுன் எவராலும் உரை செய்யப்படவில்லை.

இதுவரையில் பட்டினத்தாருடைய பாடலுரையைப் படித்த அறிஞர் இந்த வேதாந்த சித்தாந்த விருத்தியுரையைப் படிப்பார்களானால் இதுவரைக்கும் வெளிவந்த மற்ற வுரைகளுக்கும் இவ்வுரைக்கும் உள்ள தாரதம்மியம் இன்னதென நன்கு விளங்கும்.

இப் பட்டினத்தடிகளின் துறவின் பெருமையை "பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போல், ஆருந்துறக்கை யரிதரிது நேரே மனத்துறவு மப்படியே" என்று ஞானங் கைவந்த தாயுமானவர் முதலிய அறிஞரால் துதிக்கப்பெற்ற சிவஞானச் செல்வராகிய பட்டினத்தடிகளின் திவ்ய சரிதை முழுமையும் விரிவாகவும் இந் நூலில் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

இதில் பட்டினத்தார் பிரபந்தவுரை, பாடலுரை, புலம்பலுரை, பத்திரகிரியார் புலம்பலுரை இவைகளெல்லாம் அடங்கி யிருக்கின்றன. இப்படியெல்லாம் ஒன்றுசேர்ந்து இதுவரையில் யாரும் அச்சிடவில்லை.

302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.


ஹாப்ட...

"பிரஜாநுகூலன்" பத்திரா...

## S. G. இராமநுஜலுநாயுடு அவர்கள் இய...

ஆயிரம் தலைவாங்கிய அதிசய சிந்தாமணியின் வெற்றியை நீங்கள் வாசித்திருக்கிறீர்களா? "அதிசய சிந்தாமணி" என்னும் பெயராலேயே கௌரவம் பெற்ற இந்த அபூர்வ நாவல் அழகிய பதங்களால் தொடுக்கப்பட்ட இன்பகரமான வாக்கியங்களால் அலங்கரிக்கப்பட்டு நூல் முற்றிலும் உலக அநுபவங்களின் மயமாய் ஜ்வலிக்கின்றது.

சோகரஸம் ஒரு பக்கம், கருணாரஸம் ஒரு பக்கம், வீரரஸம் ஒரு பக்கம், ஹாஸ்யரஸம் ஒரு பக்கம் இப்படி நவரஸங்களும், நான் முன் நான் முன் என்று முன்பட்டு புத்தக முழுமையும் ...த்துக்கொண்டிருக்கிறது.

தலைவாங்கியதாய் இப்பொழுது எத்தனையோ கதைகள் பெருகிவிட்டன. உலகத்தில் பெயர் ஒன்றாயினும் மதிப்பு ஒன்றாகாது. மாடு என்னும் பெயர் எல்லா மாடுகளுக்கும் உரியது. ஆயினும் ஒன்றின் விலை பத்து ரூபாய். மற்றொன்றின் விலை நூறு ரூபாய். பெரிய கருங்கல்லின் விலை ஒரு ரூபாய். சிறிய ரத்நக்கல்லின் விலை பதினாயிரம் ரூபாய். ஏன் இத்தனை வித்யாஸம்? அதன் குணத்துக்கும் நலத்துக்கும் தக்கபடி மதிப்பு வேறுபடுவதா லன்றோ? அவ்விதம் "தலைவாங்கியதான பெயர் பொதுவாயிருப்பினும், அவ்வித புஸ்தகங்களி லெல்லாம் அதியுன்னதமாய்க் கொண்டாடத் தக்கது அதிசய சிந்தாமணியே என்பதை அதைப் படித்தவர்கள் தாங்களே நிச்சயிக்கும்படி அத்தனை சொகுசாய் நவரஸங்களும் பொருந்த, வெகு அற்புதமாக இந்த நாவல் பரிமளிக்கின்றது.

ஆதலின் ஒவ்வொருவரும் உத்தமமும் உயர்தரமுமான இந்த அதிசய சிந்தாமணி நாவலைப்பெற்று தங்களின் குடும்பப் பொக்கிஷமாகக் கொள்ள வேண்டுகிறோம். இந்த நாவலின் விலை ரூபாய் ஒன்றே. உடனே எழுதுங்கள்.

## தி. இராஜகோபால் முதலியார்

"ஆனந்த குணபோதினி" ஆபீஸ்.

302, தங்கசாலை வீதி, மதராஸ்.



PRINTED BY P. R. RAMA IYAR AND CO., MADRAS.

...டின,
...திருவாய் ... ...மை சகோதரன்,
...மான், 205. இராவணன் சீதையை
...திருமுறை ... பக்தனை அநுமான், 207. இராவணன் மரணம்,
...க்கு வாய்பாடுகள்:— இந்திய நாணயம், 209. முகத்தலளவை, 210. நிறுத்தலளவை, 211. சதுர அளவு, 212. துணி அளவு, 213. பண்டங்கள் நிறுக்குமளவு, 214. நீட்டலளவை, 215. இங்கிலீஷ் நாணயம், 216. கால அளவை, 217. எண் அளவை, 218. தமிழ்க்குறி எண்கள், 219. பின்னங்கள், 220. பின்ன வாய்பாடு.

"ஆங்கில ஆசான்" என்ற அரிய நூலுக்கு உடனே எழுதுங்கள். இம்மாதிரி புனைப்பெயர் வாய்ந்த மற்ற எல்லா புஸ்தகங்களைவிட இது வெகு பயன்தாவல்லது.

---


வெளியாய் விட்டது! வெளியாய் விட்டது!!

சிங்கார ஆவல்! சிறப்புற்ற புதிய நாவல்!

## சுந்தரவதனி

அல்லது

## தர்மமே ஜெயமளிக்கும்

இது ஓர் இனிய துப்பறியும் நவீனம். படித்தவுடன் திடுக்ச் செய்து, மனதைக் கவரும் ஆச்சரிய சம்பவங்களாலே இது ...மயப் பெற்றது. சுருங்கச் சொல்லின், இது பால்போல் ருசிப் ! தேன்போல் இனியது!! திகட்டாதது!!! முழுவதும் ...மையா யிருக்கும். உயர்ந்த தடிப்பான கடிதத்தில் அச்சிட்டிருக்கிறது. இதன் விலை அணா பன்னிரண்டு.

ஈ. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.


...பழமு...
...107. ...மான ...
... முதலிய பிப்பந்துகளுடனும்
...109. பலவித சம்பாஷணைகள், 110. சுருக்கமான ... வார்த்தைகள், 112. குடும்ப சமாசாரங்கள், ...விஷயங்கள், 114. பொது விஷயங்கள், 115. வியாபாரக் ..., 116. கூட்டப் பெயர்கள், 117. ஜந்துக்களின் இரைச்சல், 118. பழமொழிகள், 119. மணியார்டர், 120. தந்தி முறைகள், 121. கோட் ...திகள், 122. லைபர் தந்திகள், 123. மணியார்டர் தந்திகள், 124. கடிதங்கள், 125. உத்தியோகத்திற்கு மனு, 126. புத்தகம் இரவல் கேட்டல், 127. பதில், 128. புத்தகத்தைத் திருப்பிக் கொடுத்தல், 129. பணம் கடன் கேட்டல், 130. அதற்குப் பதில், 131. கடனைத் திருப்பிக் கொடுக்கும்படி கேட்டல், 132. விவாகத்தின்போது ஆசீர்வதித்தல், 133. பதில், 134. மரண விஷயமான கடிதம், 135. பதில், 136. விருந்திற் கழைத்தல், 137. பிரசங்கத்திற் கழைத்தல், 138. சம்பளத்தை உயர்த்த மனு, 139. ரஜா கொடுக்கும்படி மனு, 140. வியாபாரக் கடிதங்கள், 141. புத்தகம் அனுப்பும்படி எழுதுதல், 142. குடிக்கூலிக்கு வீடு கேட்டல், 143. வீட்டை ரிப்பேர் செய்ய, 144. வீட்டைக் காலிசெய்து விடல், 145. வாடகை கேட்டல், 146. பதில், 147. கணக்கை அனுப்பும்படி எழுதுதல், 148. கணக்குப் பிழையை அறிவித்தல், 149. மன்னிப்பு கேட்டல், 150. அறிமுக மாக்குவித்தல், 151. நற்சாட்சிப் பத்திரம், 152. ராஜிநாமா கொடுத்தல், 153. சிபார்சு கடிதம், 154. டாக்டருக்கு அவசர லிகிதம், 155. கடன் பத்திரம், 156. விவாக அறிக்கை, 157. விருந்தழைப்புப் பத்திரிகை, 158. ருதுசாந்தி முகூர்த்தப் பத்திரிகை, 159. ஸ்ரீமந்த முகூர்த்தப் பத்திரிகை, 160. கர்ணபூஷண முகூர்த்தப் பத்திரிகை, 161. சுபஸ்வீகாரணப் பத்திரிகை, 162. உயில் சாஸனம், 163. கூட்டு வியாபார உடன்படிக்கை, 164. விற்பனை ரசீது, 165. உண்டி ...ாரம், 166. செக்பாரம், 167. குடிக்கூலி ரசீது, 168. வருமான வரி... 169. சம்பளம் கணக்கிடும் முறை, 170. வட்டியின் வகையரா, 171. வீட்...

302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

...கோதரன்,
...மான், ... இராவணன் சீதை...
... பக்தனை ... எழுத்துக்கள், 3. இரண்டு
... கூட்டலும் உச்சரித்தலும், 4. ஒன்றிரண்டு எழுத்
...லாய பதங்களும் அவற்றின் அர்த்தமும், 5. மூன்று எழுத்துக்களைச்
சேர்த்துக் கூட்டலும் உச்சரித்தலும், 6. மூன்று எழுத்துச் சேர்ந்த பதங்
களின் எழுத்துக் கூட்டலும் உச்சரிப்பும் அர்த்தமும், 7. மூன்று பதங்களா
லாகிய வாக்கியங்கள், 8. நான்கெழுத்து சொற்களின் எழுத்துக் கூட்டலும்
உச்சரிப்பும் அர்த்தமும், 9. நான்கெழுத்துக்களாலாகிய பதங்களின் அகராதி
உச்சரிப்புடனும், அர்த்தத்துடனும் கூடியது, 10. ஐங்கெழுத்துச் சொற்கள்,
11. ஐந்தெழுத்து ஆங்கில சொற்களின் அகராதியும் அர்த்தமும், 12. ஆங்கி
லம் எழுதும் வகை, 13. அச்செழுத்தின் மாதிரியும் கையெழுத்தின் மாதிரி
யும், 14. ஐந்தெழுத்துச் சேர்ந்த சொல்லின் வாக்கியங்கள், 15. ஆறெழுத்
துப் பதங்கள், 16. அடிக்கடி உபயோகமாகும் சில ஆங்கில மொழிகள்,
17. இரண்டு பதங்கள் சேர்ந்த வாக்கியங்கள், 18. மூன்று பதங்கள் சேர்ந்த
வாக்கியங்கள், 19. நான்கு பதங்கள் சேர்ந்த வாக்கியங்கள், 20. ஐந்து பதங்
கள் சேர்ந்த வாக்கியங்கள், 21. ஆறு பதங்கள் சேர்ந்த வாக்கியங்கள்,
22. ஆங்கில வாக்கியங்களும் அவற்றின் அர்த்தமும், 23. காலம், 24. ஜாதி
கள், 25. தொழிலாளிகளுடைய பெயர் வரிசை, 26. கிழமைகளின் பெயர்,
27. மாதங்களின் பெயர், 28. தமிழ் வருடங்கள் அறுபது, 29. தமிழ் மாதங்
கள், 30. நீர்வாழும் ஜந்துக்களின் பெயர்கள், 31. பந்துக்கள், 32. நீட்டல்
அளவுகள், 33. எண்ணலளவை, 34. எடை, 35. காகித அளவு, 36. கால
அளவை, 37. இந்திய முகத்தலளவை, 38. ரத்தினங்கள், 39. ஆபரணங்
கள், 40. பழங்கள், 41. புஷ்பங்கள், 42. ரோய்கள், 43. மூலிகைகள்,
44. உலோகங்கள், 45. நிறங்கள், 46. எண்கள், 47. பட்டணங்கள்,
48. புருஷர்களின் பெயர், 49. ஸ்திரீகளின் பெயர், 50. பற்பல தேச
ங்களின் பெயர், 51. தானியவகைகள், 52. மரங்கள், 53. பல சரக்கு
கள், 54. ஊர்வன, 55. பிராணிகள், 56. மரக்கறிகள், 57. திசைகள்,
58. பருவங்கள், 59. பலசரக்கு, 60. பள்ளிக்கூடம், 61. வஸ்திரம் உடை
முதலியன, 62. உறவின் முறைகள், 63. சாமான்கள், 64. பறவைகள்,

302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.